
# பாவாணர்

# தமிழ்க்களஞ்சியம்-17



## வேர்ச்சொற் கட்டுரைகள்-1

தமிழ்மண் அறக்கட்டளை

# பாவாணர்
# தமிழ்க் களஞ்சியம்

17

## வேர்ச்சொற் கட்டுரைகள் – I

ஆசிரியர்
மொழிஞாயிறு **ஞா. தேவநேயப் பாவாணர்**

**தமிழ்மண் அறக்கட்டளை**
*சென்னை - 600 017*

## நூற் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | : **பாவாணர் தமிழ்க் களஞ்சியம் - 17** |
| ஆசிரியர் | : மொழி ஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் |
| பதிப்பாளர் | : கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : 1944 |
| மறுபதிப்பு | : 2009 |
| தாள் | : 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : 1/8 தெம்மி |
| எழுத்து | : 11 புள்ளி |
| பக்கம் | : 24 + 112 = 136 |
| நூல் கட்டமைப்பு | : இயல்பு (சாதாரணம்) |
| விலை | : உருபா. **125/-** |
| படிகள் | : 1000 |
| நூலாக்கம் | : பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : வ. மலர் |
| அச்சிட்டோர் | : ஸ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்சு<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**தமிழ்மண் அறக்கட்டளை**

**“பெரியார் குடில்”**

பி.11 குல்மொகர் குடியிருப்பு,
35 செவாலிய சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017. தொ.பே. 2433 9030

மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in
இணையதளம் : www.tamilmann.in

# பதிப்புரை

தமிழுக்கும் தமிழருக்கும் வளமும் வலிமையும் சேர்க்கக் கூடிய பழந்தமிழ் நூல்களையெல்லாம் தேடியெடுத்துத் தமிழ் கூறும் உலகிற்கு வழங்கும் தொலைநோக்குப் பார்வையுடன் **தமிழ்மண் பதிப்பகம்** தொடங்கப்பட்டது. அதன் வாயிலாக மொழிஞாயிறு பாவாணரின் நூற்றாண்டு நினைவாக அவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் சேர்த்து அவருடைய மறைவுக்குப் பிறகு 2000-த்திலும், பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் வெளிவந்து, நூல் வடிவம் பெறாத பாவாணரின் அரிய கட்டுரைகளை எல்லாம் தொகுத்து 2001- லும் ஒருசேர வெளியிட்டு உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு வழங்கினோம். பாவாணர் வழி நிலை அறிஞர்களான முதுமுனைவர் **இரா. இளங்குமரனார்** அவர்களும், மருத்துவர் **கு.பூங்காவனம்** அவர்களும் இவ்வரிய கட்டுரைப் புதையல்கள் நூல் வடிவம் பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர்.இப்பெருமக்களை நன்றியுணர்வுடன் நினைவுகூர்கிறேன்.

“சொல்லாராய்ச்சித் துறையில் தேவநேயர் ஒப்பற்ற தனித் திறமையுடைவர் என்று **மறைமலையடிகளும்,** நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று **பாவேந்தரும்,** தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் நற்றொண்டு ஆற்றியவர் பாவாணர் என்று **பேரறிஞர் அண்ணா** அவர்களும், வெட்ட வெட்டக் கிடைக்கும் தங்கச் சுரங்கம் போன்றவர் என்று தமிழறிஞர் **இராசமாணிக்கனாரும்,** தமிழகம் மொழித்துறையிலே பாவாணர் போன்ற ஒரு அறிஞரை இன்னும் பெற்றுத் தரவில்லை என்று **பன்மொழிப் புலவர் அப்பாத்துரையரும்,** குறைமதியர் தேக்கிவைத்த கரையிருளை நீக்க வந்த மறைமலையார் வழிவந்த நிறைமலையார் பாவாணர் என்று மேனாள் பேரவைத்தலைவர் **தமிழ்க்குடிமகன்** அவர்களும்,

தமிழர் யார்? எதிரிகள் யார்? என்று ஆய்ந்து அறிந்து காட்டியவர் பாவாணர் என்று பேராசிரியர் **இளவரசு** அவர்களும், ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்தபின் வாராது போல வந்த மாமணி" பாவாணர் என்று முதுமுனைவர் **இளங்குமரனார்** அவர்களும் குறிப்பிட்டுள்ள பெருமைகளுக்குரிய பேரறிஞரின் நூல்களை மீள்பதிப்பக வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.

"பாவாணர் நூல்கள் அத்தனையும் தமிழ்மொழிக்கு ஏற்றம் உரைப்பன. தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக் காப்பன. வீழ்ந்து பட்ட தமிழனுக்கு விழிப்பூட்ட வல்லன. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழ்மொழியை மீட்கவல்லது" என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் கூற்றை இக் களஞ்சிய வெளியீட்டில் பதிவு செய்வது எமது கடமையாகும்.

பாவாணரைத் தூக்கிப் பிடித்தால்தான் தமிழினம் உருப் படமுடியும் - உயரமுடியும். பாவாணர் கொள்கைகள் தமிழர் உள்ளமெல்லாம் நிலைத்து நிற்பதற்கும், பாவாணர் நூல்கள் தமிழர் இல்லமெலாம் இடம் பெறுவதற்கும் முன் குறிப்பிட்ட 2000 - 2001 காலக்கட்டத்தில் வெளியிடப்பட்ட பாவாணரின் அறிவுக் கருவூலங்களையெல்லாம் ஒட்டு மொத்தமாக சேர்த்து ஒரே வீச்சில் **பாவாணர் தமிழ்க்களஞ்சியம்** எனும் தலைப்பில் எம் அறக்கட்டளை வெளியிடுகிறது.

மறைக்கப்பெற்ற மாபெரும் வரலாற்றையும், சிதைக்கப் பெற்ற ஒப்புயர்வுயற்ற மொழியையும் கொண்ட தமிழினத்தின் முன்னேற்றம் கருதி இவ்வருந்தமிழ் புதையல்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்க முன் வந்துள்ளோம். தமிழ் மொழியை மூச்சாகவும், பேச்சாகவும், செயலாகவும் கொண்டு ஒருநாளின் முழுப்பொழுதும் தமிழாகவே வாழ்ந்த செம்புலச்செம்மல், தனித்தமிழ்க் கதிரவன் மொழிஞாயிறு பாவாணர் நூல்களை வாங்கிப் பயன் கொள்வீர்.

இளமையிலேயே பொதுத்தொண்டிலும், தனித்தமிழ் இயக்கத் தொண்டிலும் நான் ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் **பெரும்புலவர் நக்கீரன்** அவர்களும், அவர்தம்

இளவல் **புலவர் சித்திரவேலன்** அவர்களும் ஆவர். இவர்களை இவ்வெளியிட்டின் வாயிலாக நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறேன். தந்தை பெரியாரின் தன்மதிப்பு இயக்கக் கொள்கைகளாலும், மொழிஞாயிறு பாவாணரின் தனித்தமிழ் இயக்கக் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டவன். அத்தகு பின்புலத்தோடு பதிப்புப்பணியில் என் காலடிச் சுவடுகளைப் பதித்து வருகிறேன்.

**கோ. இளவழகன்,**
**பதிப்பாளர்.**

# வான்மழை வளச்சுரப்பு

*ஆழத்துள் ஆழமாய் அகழ்ந்து* ***தங்கம்*** *ஏன் எடுக்கப்படுகிறது? ஆழ்கடலுள் சென்று, உயிரைப் பணயம் வைத்து* ***முத்துக்*** *குளிக்கப் படுவது ஏன்?* ***பவழப்*** *பாளங்களை எடுப்பது ஏன்?* ***வயிரம்*** *முதலாம் மணிக்குலங்களை இடையறாமல் தேடித் தேடி எடுப்பது ஏன்?*

*அணிகலப் பொருள்கள் என்பதற்கு மட்டுமா? வீட்டிற்கு மட்டுமன்றி நாட்டுக்கும் ஈட்டுதற்கு அரிய* ***வைப்பு வளமாக*** *இருந்து, நாட்டின் பொருளியல் மேம்பாட்டுக்கு* ***அடிமனை யாகவும்*** *இவை இருப்பதால் தானே!*

*இவற்றினும் மேலாம் வைப்பு வளமும் உண்டோ? உண்டு! உண்டு! அவை* ***சான்றோர் நூல்கள்!***

*காலம் காலமாக அள்ளிக் கொண்டாலும் வற்றா வளமாய்த் திகழும்* ***அறிவுக் கருவூலமாம் நூல்கள்!***

*ஒன்றைக் கற்றால் ஒரு நூறாய் ஓராயிரமாய்ப் பல்கிப் பெருகத் தக்க பெறற்கரிய* ***தாய் நூல்களாம்*** *பேறமைந்த நூல்கள்!* ***சேய்நூல்களை ஈனவல்ல செழு நூல்கள்!***

*நுண் மாண் நுழைபுலத்* ***தாய் நூல்களாய் இருப்பினும்!*** *அவற்றைத் தாங்கிய* ***தாள்கள்,*** *எத்தகைய பேணுதல் உடையவை எனினும் கால வெள்ளத்தில் அழியக் கூடியவை தாமே!*

***கல்லெழுத்தே,*** *கதிர் வெப்பாலும் கடலுப்பாலும் காத்துப் பேணும் கடப்பாடில்லார் கைப்படலாலும் அழிந்து பட்டமை கண்கூடு தானே!*

***ஏட்டு வரைவுகள்,*** *நீரே நெருப்பே நீடித்த காலமே புற்றே போற்றா மடமையே என்பவற்றால் அழிந்து பட்டமைக்கு அளவு தானும் உண்டோ? மக்களுக்கு மாணப் பெரிய பயனாம் நூல்கள், கற்கும் மக்கள் பெருக்கத்திற்கும், பிறந்து பெருகிவரும் மக்கள் பெருக்கத்திற்கும் தக்க வகையில் அவர்களுக்குப் பாட்டன்*

பாட்டியர் வைத்த **பழந்தேட்டென்ன** அந்நூல்கள், மீளமீளத் தட்டில்லாமல் கிடைக்கச் செய்ய வேண்டுவது **நூற்பதிப்பர்** தவிராக் கடமையல்லவோ!

அக்கடமையை அவர்கள் காலந்தோறும் கடப்பாடாகக் கொண்டு செய்ய, ஆளும் அரசும் வாழும் அறிவரும் அருந்துணையாதல் தானே கட்டாயத் தேவை! இவ்வாறு பதிப்பரும் அறிவரும் ஆள்நரும் தத்தம் மூச்சுக் கடனாக, **நூற்கொடை புரிதலுக்கு மேற்கொடை இல்லையாம்!**

**மொழிஞாயிறு பாவாணர் நூல்கள்** ஒன்றா இரண்டா? நமக்கு எட்டாதவை போக எட்டிய நூல்கள் 32. கட்டுரை பொழிவு முதலாம் வகையால் கிட்டிய திரட்டு நூல்கள் 12. இன்னும் **எட்டாத தொகுப்பும்** அங்கொன்றும் இங்கொன்றும் வர வாய்ப்புண்டு!

**கடித வரைவு பா வரைவு** என மேலும் பெருகவும் வாய்ப்புண்டு!

இவற்றை எல்லாம் ஆயிரம் அச்சிட்டு அவ்வளவில் நின்று விட்டால், தேடுவார்க்குத் தேடும் பொழுதில் வாய்க்கும் திருவாகத் திகழக் கூடுமோ?

ஆதலால், **சேய் நூல்களுக்கு மூலமாம் தாய்நூல்கள், காலம் தோறும் வான்மழை வளச் சுரப்பாக வெளிப்பட வேண்டும் கட்டாயம் உணர்ந்து கடமை புரியும் வீறுடையார் வேண்டும்! மிக வேண்டும்!**

இத்தகைய விழுமிய வீறுடையர் - இனமானச் செம்மல் - தமிழ்ப் போராளி - திருத்தகு **கோ. இளவழகனார்,** தாம் முந்து முழுதுறக் கொணர்ந்த பாவாணர் படைப்புகளை மீளமீளத் தமிழுலாக் கொள்ள வைக்கும் முன் முயற்சியாய், இம் **மீள்பதிப்பை வழங்குகிறார்!** தமிழுலகம் பயன் கொள்வதாக! பயன் செய்வதாக!

வாழிய நலனே! வாழிய நிலனே!

**இன்ப அன்புடன்**

**இரா. இளங்குமரன்.**

# சான்றிதழ்

பண்டித ஞா. தேவநேயனார், பி.ஓ.எல். பொதுவாக மொழிநூல் ஆய்வு முறைகளைப் பின்பற்றித் தமிழ்ச்சொல் ஆராய்ச்சிபற்றி எழுதிய நூல்கள் தமிழ்மொழியின் நீண்டகாலத் தேவையினை நிறைவு செய்தன. தம்முடைய இளந்தைக் காலத்திலே தலைமைக் கண்காணியார் தவத்திரு திரஞ்சு (Trench) எழுதிய 'சொல்லாராய்ச்சி', பேராசிரியர் மாக்கசு முல்லர் எழுதிய 'மொழியறிவியல்', பேராசிரியர் சாய்சு எழுதிய 'ஒப்பியல் மொழிநூல்' முதலிய ஆங்கிய நூல்களை யாமே பெருவிருப்புடன் படித்துக்கொண்டிருக்கும்போது அந்த முறையில் தமிழ்ச் சொற்களை ஆராய வேண்டுமென்று விரும்பினேம். தமிழ்ப் பேரறிஞர்கட்குப் புலப்படாமல் மறைந்து கிடந்த விரிவாகவும் வியப்பாகவுமுள்ள தமிழ்மொழியறிவுப் பரப்பு, பண்டாரகர் கால்டுவெல் எழுதிய 'திராவிட மொழி களின் ஒப்பியல் ஆய்வு' நூலால் புலப்படலாயிற்று. எனினும் பண்டாரகர் கால்டுவெல், அறியப்படாத வட்டாரத்தில் செய்ததொரு முயற்சியாதலால்தமிழ்ச்சொற்களை யெல்லாம் விடாமல் நிறைவாக எடுத்தாராய்ந்துள்ளனர் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. இதுவே மொழியியலை ஆராய வேண்டு மென்று எம்மைத் தூண்டியது. எனவே 'ஞானசாகரம்' (அறிவுக்கடல்) என்னும் எம்முடைய இதழின் முதல் தொகுதியில் அத் துறையில் ஒன்றிரண்டு கட்டுரைகளை எழுதி வெளியிட்டேம். ஆனால் அப்போது சமயம், மெய்ப்பொருளியல், இலக்கிய வரலாறு ஆகிய துறைகளில் எம்முடைய மொழியாராய்ச்சித் துறையில் தொடர்ந்து ஈடுபடக் கூடவில்லை. ஆயினும் தகுதியுடைய அறிஞர் யாராவது இத் துறையில் ஆராய்வதற்கு முன்வரக்கூடுமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேம். அப்போது யாழ்ப்பாணம் திருத்தந்தை ஞானப்பிரகாசர்தாம் எகிபதிய மொழியியல் ஆராய்ச்சி நூலை எமக்கு அனுப்பிவைத்தார். அது ஓரளவு எமக்கு மனநிறைவு அளித்தது. எனினும் மொழியியல் ஆராய்ச்சித் துறை மிகவும் விரிவும் ஆழமு முடையதாதலால் பழந்தமிழ்

இலக்கியங்களைக் கற்று அவற்றைக் கொண்டு நன்கு புரிந்து கொள்ளும் வகையில் மேலும் மொழியியல் ஆராய்ச்சி நூல்கள் வெளிவருதல் வேண்டுமென்று கருதினேம். அந்த நேரத்தில் திரு. தேவநேயனார் யாம் எதிர்பார்த்ததை ஏறத்தாழ முற்றும் நிறைவேற்றியது கண்டு பெருமகிழ்வுற்றேம். அத் துறையில் அவர் மிகவும் உழைப்பெடுத்து ஆராய்ந்து எழுதியிருப்பவற்றைத் தமிழ் அறிஞர்கள் நன்றாக நம்பலாம்.

சொல்லாராய்ச்சித் துறையில் திரு. தேவநேயனார் ஒப்பற்ற தனித் திறமையுடையவர் என்றும், அவருக்கு ஒப்பாக இருப்பவர் அருமையாகும் என்றும் யாம் உண்மையாகவே கருதுகின்றேம்.

மேலும் திரு. தேவநேயனார் பதியச் சொல்லும் ஆசிரியரும் இன்புறுத்தும் சொற்பொழிவாளருமாவர். பல தமிழ்க் கழக ஆண்டு விழாக்களில் எமது தலைமையின்கீழ் அவர் சொற் பொழிவுகள் ஆற்றியுள்ளார். அவை கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய் அமைந்து அவையோரைக் கிளர்ச்சியுறச் செய்து மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தின. அவர் வருந்தியுழைத்து ஆராய்ச்சி செய்துவரும் அறிஞர் ஆதலால் அவரைப் பணியில் அமர்த்தும் எந்த நிலையத்துக்கும் அவரால் பேரும் புகழும் கிடைக்கப் பெறும் என்று யாம் முழு நம்பிக்கையோடு கூறுகின்றேம்.*

- ***மறைமலையடிகள்***

* மறைமலையடிகளார் ஆங்கிலத்தில் எழுதிய சான்றிதழின் தமிழாக்கம்.

# முகவுரை

மொழிகள், இயன்மொழி (Primitive Language,) திரிமொழி (Derivative Language) என இருவகைப்படும். வளர்ச்சியடைந்த ஒவ்வோர் இயன்மொழியும், இயற்கைமொழி (Natural Language), வளர்ச்சி மொழி (Developed Language or Articulate Speech) என இரு நிலைகளையுடையது.

வளர்ச்சிநிலையடைந்த இயன்மொழிகளும் அவற்றினின்று திரிந்த திரிமொழிகளும் பெரும்பாலும், வேர் (Root), அடி (Stem), முதனிலை (theme) என்னும் மூவகை மூலச்சொற்களையும் அவற்றினின்று திரிந்த பல்வகைத் திரிவுச் சொற்களையுமே கொண்டுள்ளன.

| எ - டு : | **வேர் - திரிவு** | **அடி - திரிவு** | **முதனிலை - திரிவு** |
|---|---|---|---|
| | குல் - குலம் | குழு - குழாம் | குழுவு - குழுவல் |
| | குல் - குலை | குழு - குழம்பு | குழும - குழுமல் |
| | | குழு - குழும்பு | |

குல்லுதல் = கூடுதல், குலம்ம = கூட்டம்.

வேரின் வளர்ச்சியே அடியும், அடியின் வளர்ச்சியே முதனிலையும் ஆகும்.

எ - டு : குல் - குழு - குழுவு (குழுமு)

பல அடிகட்கு வேரும், பல முதனிலைகட்கு அடியும் வேரும், மறைந்திருக்கும் அல்லது இறந்துபட்டிருக்கும்.

வேருக்கு மூலமான முளையும் உண்டு.

எ -டு : உல் (முளை) - குல் (வேர்).

முளைக்கு மூலமான விதையும் உண்டு.

எ - டு : உ (விதை) - உல் (முளை).

உத்தல் = பொருந்துதல். உந்தி = பொருத்தம், சேர்க்கை, விளையாட்டில் இருவர் சேரும் இணை, நுண்மதியொடு பொருந்தும் நிலைமை, நூலமைப்பிற்குப் பொருத்தமான நெறிமுறை.

உ-ஒ. ஒத்தல் - பொருந்துதல், இணைதல். ஒக்கல் = அரத்தவுறவுள்ள இனம், சுற்றம்.

உ-உல் - ஒல். ஒல்லுதல் - பொருந்துதல்.

உல் - உர் - உறு. உறுதல் = பொருந்துதல்.

உர் - ஊர் = கூட்டம், மக்கள் நிலையாகக் கூடிவாழும் மருதநிலக் குடியிருப்பு, குடியிருப்பு.

இங்ஙனம் வேர்ச்சொற்கு முளையும் விதையும் வேறெம்மொழியிலுங் காணவியலாது.

இனிவேரும் ஆணிவேர், பக்கவேர், கிளைவேர், சிறுகிளை வேர் எனப் பலதிறப்படும்.

குல் என்பது ஓர் ஆணிவேர், அதினின்று குலம், குலவு - குலாவு, குலை முதலிய சொற்கள் பிறக்கும். இவை ஒருவகைப் பொருட்கூட்டம் பற்றியன.

கல் என்பது குல் என்பதினின்று திரிந்த பக்கவேர்.

அதினின்று கல, கலப்பு, கலப்படம், கலவை, கலம்பு, கலம்பகம், கலம்பம் (கதம்பம்) - கலவு, கலவன், கலசு முதலிய சொற்கள் பிறக்கும். இவை பல்வகைப் பொருட்கூட்டம் பற்றியன.

கல என்னும் சொல்லனின்று புணர்ச்சியும், கலகமும், கலக்கமும் பற்றி முக்கிளைகள் பிரியும்.

**(கல் -) கல**

| **(புணர்ச்சி)** | **(கலகம்)** | | **(கலக்கம்)** | |
|---|---|---|---|---|
| கலவி | கலவு | கலாவு | கலங்கு | கலுழம் -கலுடம் |
| | கலகு | கலாவம் | கலங்கல் | கலுழ்வு |
| | கலகி | கலாபம் | கலக்கு | கலுழ்ச்சி |
| | கலகம் | கலாபி | கலக்கம் | கலுழி |

கலாம் கலாபனை கலுழ் கலிழ்
கலாய்

இருபாற் கலப்பே கலவி, பலர் கலந்து பொருதலே கலகம். கைகலத்தல் என்னும் வழக்கை நோக்குக. நீரும் சேறும் போல வெவ்வேறு பொருள் கலப்பது கலக்கம். இது பொருட்கலக்கம். பல்வேறு கருத்துகள் அல்லது நினைவுகள் கலந்து, மனத்தை வருத்துவது அல்லது குழப்புவது மனக்கலக்கம். இங்ஙனம் கலக்கம் இருவகைத்து.

வெண்மையும் செம்மையும் கலந்த பறவையைக் குறிக்கும் கலுழன் என்னும் சொல், நிறக்கலப்புப் பற்றியது. கலுழ் - கலுழன் கலுழ்தல் கலத்தல். கலுழன் - வ. கருட (ப)

கூடுதல் பொருந்துதல், ஒத்தல், கலத்தல், போரிடுதல் என்பன தொடர்புடைய கருத்துகள்.

ஒ. நோ: பொருதல் = பொருந்துதல், ஒத்தல், போர் செய்தல்.

வேறுபட்ட பல்பொருள் கலக்கும் போது கலக்கம் உண்டாவதால், கலப்புக் கருத்திற் கலக்கக் கருத்துத் தோன்றும்.

ஒ.நோ = குழம்புதல் = கலத்தல், மயங்குதல், குழப்பம் கலக்கம், மயக்கம்.

மயங்குதல் = கலத்தல், கலங்குதல், மயக்கம் = கலப்பு, கலக்கம், உணர்விழிப்பு.

ஒத்தல் என்பது, இருபொருள் அல்லது பல்பொருள் இயலிலும் செயலிலும் பொருந்தி நிற்றல்.

இங்ஙனம், ஒரு கருத்தினின்று மற்றொரு கருத்துத் தோன்றும் போது, ஒரு சொல்லினின்று மற்றொரு சொற் பிறக்க இடமுண்டா கின்றது. கருத்து வேறுபடும் போது சொல்லும் வேறுபடல் வேண்டும். அன்றேல், பொருண்மயக்கம் உண்டாவதோடு மொழியும் வளர்ச்சி யுறாது. இதுவே சொல்லாக்க அடிப்படை நெறிமுறை.

உலக மொழிகள் மூவாயிரத்துள்ளும் வேர்ச்சொல் காண்பதற்கு எளிதாகவும் மிகுதியாகவும் இடந்தரும் மொழி தமிழ் ஒன்றே. அஃது

இயன்மொழியாதலால், பெரும்பாற் சொற்களின் வேர்வடிவை அல்லது வேருறுப்பை இன்றுந் தாங்கி நிற்கின்றது. இதனாலேயே, "எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே" என்று தொல்காப்பியம் (பெயரியல், 1 ) வீறு கொண்டு முழங்குகின்றது. இங்ஙனங் கூறும் நிலை வேறு எம் மொழிக்கும் இல்லை. அதனால், வடமொழியாளர் ஒருபாற் சொற்களை இடுகுறி யென்றார். மேலை வண்ணனை மொழிநூலாரோ, எல்லா மொழியும் இடுகுறித் தொகுதிகளே என்று, தம் இருவகைக் கண்ணையும் மூடிக்கொண்டனர்.

மக்களைப் போன்றே, சொற்களும் குடும்பங் குடும்ப மாகவும், குலங்குலமாகவும், இனம் இனமாகவும் கொடி வழி (genealogical) முறையில் இயங்குகின்றன.

வேர் என்னும் உவமையாகுபெயர்பற்றி வேர்ச்சொல்லை வேறாக முத்திறப்படுத்திக் கூறினும், மூலமும் திரிவும் என்னும் முறையில் வேர் அடி முதனிலை என்னும் வகையீடும் ஆணிவேர், பக்கவேர், கிளைவேர் என்னும் வகையீடும் ஒன்றேயெனக்கொள்க.

திரவிடமும் ஆரியமும் திரிமொழிகளாதலால், அவற்றிலுள்ள திரிசொற்கள் பல, வேரோ மூலமோ தெரியாவாறு உருமாறியுள்ளன.

எ-டு : மாறு - மாற்றம் - தெ. மாட்ட = சொல்.

காண் (அறி) - வ. ஜ்ஞா

இடைசுழி - (டேசுழி) - வ. தேகலி.

வள் - வர் - வார் - வாரி - இலத் மரெ ( ஆயசந) = கடல்

இ - இது - இதோ - ஆங். லோ (டடி)

விடை - விடலை - கிரேக். இதலொஸ் *(வையடடிள)

இனி மலையா, சிங்கபுரம், தென்னாப்பிராக்கா முதலிய வெளிநாடுகட்குத் தனித்தனியாகவும் குடும்பங் குடும்பமாகவும் தமிழர் சென்று அங்கு நிலையாக வாழினும், அவர்களின் முன்னோராலும் தமிழ்நாட்டு உறவினராலும் அவர்கள் தமிழர் எனறே அறியப்படுதல் போல், தமிழ்ச் சொற்களும் அண்மையிலும் சேய்மையிலும் உள்ள அயன்மொழிகளிற் சென்று வழங்கினும்,

அவற்றின் மூலத்தினாலும் தொடர்புடைய தமிழ்ச் சொற்களாலும், அவை தமிழ் என்றே அறியப்படும் என அறிக.

| எ-டு : | தமிழ் | சமற்கிருதம் |
|---|---|---|
| | குலம் | குல |
| | கதம்பம் | கதம்ப |
| | கலகம் | கலஹ |
| | கலுடம் | கலுஷ =கலங்கல் |
| | கலுழன் | கருட (Garuda) |

இச் சொற்களெல்லாம் தமிழே என்பதை, மேற்காட்டிய குல் என்னும் வேரினின்று தோன்றிய கொடிவழிச்சொற்களைநோக்கிக்காண்க.

இங்ஙனம் ஆழ்ந்தாராய்ந்து உண்மை காணாததனாலேயே, வடமொழி தேவமொழியாதலால் வேறெம் மொழியினின்றும் கடன்கொள்ளா தென்னும் ஆரிய ஏமாற்றை, இவ் விருபதாம் நூற்றாண்டிலும் தமிழ்ப் பேராசிரியர் பலர் பேதைத்தனமாய் நம்பிக் கொண்டிருக்கின்றனர். தமிழ்ப் பகைவரும் இதைப் பயன் படுத்திக் கொண்டு, மேன்மேலும் தம் பதவி யுயர்த்துவதிலும் பணம் பெருக்குவதிலுமே கண்ணாயிருந்து, உண்மைத் தமிழாராய்ச்சியாளர் தமிழ்த்தொண்டு செய்யாவண்ணம் வலுத்த முட்டுக்கட்டையிட்டும் வருகின்றனர்.

வேர்ச்சொற்கள் சிறுவேரும் பெருவேரும் என இருவகைய. அவற்றுள் முன்னவை பன்னூற்றுக் கணக்கின; பின்னவை ஒரு நூற்றிற் குட்பட்டவை. இவ்வுண்மை என் கடந்த அரை நூற்றாண்டு மொழியாராய்ச்சியிற் கண்டது. சமற்கிருத்திலும் மேலையாரிய மொழிகளிலும் வேர்ச்சொல்லெனக் காட்டப்படுபவை, பெரும் பாலும் உண்மையான வேர்ச்சொற்களல்ல; உண்மையான சிலவும் தமிழினின்று திரிந்தவையே.

தமிழ், ஆரியச் சூழ்ச்சியினால், நெடுங்கணக்கு முதல் பொருளிலக்கணம் வரை எல்லா நிலைகளிலும் எல்லாத் துறை களிலும் தருக்கப் பொருளாக்கப்பட்டிருப்பதால், தமிழாசிரியர் எத்துணைப் பெரும்புலவரேனும், மொழியாராய்ச்சியும் நடுநிலை

அஞ்சாமை தன்னலமின்மை மெய்யறி யவா என்னும் நாற்பண்பும் இல்லாதவர், வேர்ச்சொற்களைத் தொகுப்பது, குருடன் கண் மருத்துவமும் செவிடன் இசையாராய்ச்சியும் சப்பாணி தாண்டவம் பயிற்றலும், செய்வதொத்ததே. கல்விவேறு; ஆராய்ச்சி வேறு.

வாழ்நாள் முழுதும் வேர்ச்சொல் லாராய்ச்சி மூழ்கிக் கிடந்த ஒருவன் இருக்கவும், அவனைப் புறக்கணித்துவிட்டு, வேர்ச்சொல் தொகுப்பிற்கு ஒரு குப அமர்த்த வேண்டுமென்பது, கூட்டுக் கொள்ளையடிக்கும் தன்னலத் தமிழ்ப் பகைவரின் குறும்புத் தனமான கூற்றேயாகும்.

தமிழிலுள்ள இருவகை வேர்ச்சொற்க ளெல்லாவற்றையும் தொகுப்பின், அஃது ஒரு பெரிய அகரமுதலியாக விரியும். அப்பணியை ஓர் அரசு அல்லது பல்கலைக் கழகம் தான் மேற்கொள்ளவியலும். அத்தகைய நிலைமை இன்றின்மையால், வேர்ச்சொற்கட்டுரைகள் என்னும் பெருவேர்ச்சொல் திரட்டொன்றை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட முன்வந்தது, மிகப் பாராட்டத் தக்கதாகும், இது தலைசிறந்த தமிழ்ச் தொண்டாதலால், தமிழுலகமும் தமிழ் நாட்டரசும் பல்கலைக்கழக நல்கைக் குழுவும் (University Grants Commission), இக் கழகத்திற்குப் பெரும் பொருளுதவி செய்தூக்கற்குப் பெரிதுங் கடப்பாடுடையன.

**காட்டுப்பாடி விரிவு,** **தேவநேயன்**
***200ச, கும்பம், கஅ, 1.3.1973.***

## "வேர்ச்சொற் கட்டுரைகள்" தொடருக்காக பாவாணர் எழுதிய சிறப்பு முன்னுரை

ஆறறிவு படைத்த மக்களினத்திற்குப் பல்துறைப்பட்ட கல்வியறிவு, முன்னேற்றத்திற்கு மட்டுமன்றி வாழ்க்கைக்கும் இன்றி யமையாதது. அவ்வறிவை அடையும் வாயில் மொழியே.

மாந்தன் மற்ற இருதிணைப் பொருள்களைப் பற்றிக் கற்றறிவது போன்றே, தன்னையும் பற்றிக் கற்றறிதல் வேண்டும். "தன்னை அறிந்தவன் தன் தலைவனை அறிவான்" என்பது பழமொழி. மாந்தன் நாகரிகம் கூட்டுறவினின்று தொடங்கியதனால், அக்கூட்டுறவிற்குத் துணையான மொழியையுங் கற்றல் வேண்டும்.

மக்கள் பல்வேறினமாய்ப் பரவிக்கிடப்பதாலும், அவ்வினப் பிரிவிற்கு மொழியே அடிப்படையாயிருப்பதனாலும், ஒவ்வோர் இன முன்னேற்றத்திற்கும் ஒவ்வொரு மொழியே துணையா யிருப்பதனாலும், அம்மொழியைக் கற்றல் இன்றியமையாததாம்.

சில இனத்தார்க்குத் தன் மொழித்துணை போதும். பல இனத்தார்க்குத் தன்மொழித்துணையோடு பன்மொழித் துணையும் வேண்டும். அத்தகையோர் தன்மொழியை முந்திக் கற்றல் வேண்டும்.

மொழியை வரலாற்றோடு சேர்த்துக் கற்பதே சிறந்த முறையாம். வரலாற்றிற்கு வேர்ச்சொல்லறிவு இன்றியமையாததாம். ஆங்கிலத்திற்போல் வேர்ச்சொல் அகர முதலில் இதுவரை தமிழில் அமையவில்லை. அக்குறையை நீக்குதற்கெழுந்த கட்டுரைத் தொடரின் முகம் இதுவாகும்.

ஆரிய மொழிகளெல்லாம் தமிழுக்குப் பிற்பட்டனவும், மிகத் திரிபுடையனவும், மூலமொழியினின்று சேணெடுந் தொலைவு பிரிந்து போனவும், பழஞ்சொற்களுட் பலவற்றை இழந்தனவுமா யிருத்தலின்; அவற்றிலுள்ள வேர்ச்சொற்கள் பெரும்பாலும் தொடர்பற்றனவும், கான்முளைச் சொல்வளம்

இல்லாதனவும், செயற்கை வடிவு கொண்டனவுமாகவே யிருக்கும். ஆதலால், அம்மொழிகளை அடிப்படையாய் வைத்துத் தமிழை ஆய்வார், ஆங்கில நாட்டு வரலாற்றை ஆத்திரேலியாவினின்றோ? அமெரிக்கா வினின்றோ தொடங்குபவரேயாவர்.

தமிழ்வேர்ச் சொற்களெல்லாம், வேரும் அடியும்; கவையும் கொம்புங் கிளையும் போத்தும் குச்சுங்குழையுமாய்த் தொடர்ந்தும் வளர்ந்தும் இருப்பது, இக்கட்டுரைத் தொடராற் காட்டப்பெறும்.

**- ஞா. தேவநேயன்**

# குறுக்க விளக்கம்

அகம். - அகநானூறு

அக. நி. - அகநானூறு நித்திலக் கோவை

அரிசமய. - அரிசமய - அரிசமய தீபம்

அரிச். பு. விவா. - அரிச்சந்திர புராணம், விவாக காண்டம்.

அருட்பா. நடராஜ - அருட்பா நடராஜபதி மாலை

அழகர் கல. - அழகர் கலம்பகம்

அறநெறி. - அறநெறிச்சாரம்

ஆசாரக். - ஆசாரக்கோவை

இரகு. - இரகு வமிசம் ...

இராசவைத். - இராச வைத்திய மகுடம்

இலக். வி. - இலக்கண விளக்கம்

இறை. - இறையனார் அகப்பொருள்

இறை. உரை - இறையனார் களவியலுரை

ஈடு. - ஈடு முப்பத்தாறாயிரப்படி

உபதேசகா. - உபதேசகாண்டம்...

உரி. நி. - உரிச்சொல் நிகண்டு

ஐங். - ஐங்குறுநூறு

ஐந். ஐம். - ஐந்திணை ஐம்பது

ஔவை. குறள். - ஔவைக்குறள்

ஔவை. தனிப்பாடல் - ஔவையார் தனிப்பாடல் திரட்டு

கந்தபு. - கந்தபுராணம்

கலித். - கலித்தொகை

கல்லா. - கல்லாடம்

கம்பரா. - கம்பராமாயணம்

காஞ்சிப்பு. - காஞ்சிப்புராணம்

காரிகை. - யாப்பருங்கலக்காரிகை

குமர. பிர. திருவாரு. - குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு,

திருவாரூர் நான்மணிமாலை

குருபரம். - குருபரம்பரை

குறள். - திருக்குறள்

குறிஞ்சிப். - குறிஞ்சிப்பாட்டு

குறுந். - குறுந்தொகை

குற்றா. குற. - குற்றாலக் குறவஞ்சி

குற்றா. தல. - குற்றாலத்தல புராணம்

கூர்மபு. தக்கன்வே. - கூர்ம புராணம்,

தக்கன் வேள்விப் படலம்

கூளப்ப. - கூளப்ப நாயக்கன் காதல்

கொன்றைவே. - கொன்றைவேந்தன்.

கோயிற்பு. - கோயிற்புராணம், பாயிரம்.

சங்கர. உலா. - சங்கர சோழனுலா

சி.சி. பரபக்கம் - சிவஞான சித்தியார் பரபக்கம்

சிபோ. பா. - சிவஞானபோதபாடியம்

சிலப். - சிலப்பதிகாரம்

சிவஞா. - சிவஞானபோதம்

சிவரக. - சிவரகசியம்

சிறுபஞ். - சிறுபஞ்சமூலம்

சிறுபாண். - சிறுபாணாற்றுப்படை

சினேந். - சினேந்திரமாலை

சீவக. - சீவக சிந்தாமணி

சூடா. - சூடாமணி நிகண்டு

சூத. - சூதசங்கிதை

சூளா. - சூளாமணி

சேதுபு. - சேதுபுராணம்
செவ்வந்திப். - செவ்வந்திப் புராணம்
சைவச. - சைவ சமயநெறி
சௌந்தரி. - சௌந்தரியலகரி
ஞானவா. - ஞானவாசிட்டம்
ஞானா. - ஞானமிர்தம்
தஞ்சைவா. - தஞ்சைவாணன் கோவை
தணிகைப்பு. நாட்டு. - தணிகைப் புராணம், நாட்டுப் படலம்
தண்டலை. சத. - தண்டலையார் சதகம்
தண்டி. - தண்டியலங்காரம்
தமிழ் நா. - தமிழ் நாவலர் சரிதை
தனிப்பா. - தனிப்பாடல் திரட்டு
தாயு. - தாயுமானவர் பாடல்
திணைமாலை. - திணைமாலை நூற்றைம்பது
திரிகடு. - திரிகடுகம்
திருக்காளத். - திருக்காளத்திப் புராணம்
திருக்கோ. - திருக்கோவையார்
திருநூற். - திருநூற்றந்தாதி
திருப்பு. - திருப்புகழ்
திருமந். - திருமந்திரம்
திருமுருகு. - திருமுருகாற்றுப் படை.
திருவள்ளுவ. - திருவள்ளுவமாலை
திருவாச. - திருவாசகம்
திருவாத. - திருவாதவூரர் புராணம்
திருவாலவா. - திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்.
திருவிளை. - திருவிளையாடற்புராணம்
திவா. - திவாகர நிகண்டு
திவ். - திவ்வியபிரபந்தம்
தேவா. - தேவாரம்
தைலவ. தைல. - தைலவருக்கச் சுருக்கம்...
தொல். - தொல்காப்பியம்
தொல். எழுத்து - தொல்காப்பியம், எழுத்ததிகாரம்
தொல். உரி. - தொல்காப்பியம், உவமவியல்
தொல். சொல். சேனா.- தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையர் உரை
தொல். பொரு. - தொல்காப்பியம், பொருளதிகாரம்.
தொல். மர. - தொல்காப்பியம், மரபியல்
தொல். மெய்ப்பாட். - தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்
நள. - நளவெண்பா
நற். - நற்றிணை
நன். - நன்னூல்
நாலடி. - நாலடியார்
நான்மணி. - நான்மணிக்கடிகை
நீதிநெறி. - நீதிநெறி விளக்கம்
நீதி வெண். - நீதிவெண்பா
நெடுநல். - நெடுநல்வாடை
நைடத. - நைடதம்
பட்டினப். - பட்டினப்பாலை
பணவிடு. - பணவிடுதூது
பதினொ. திருவிடைமும் - பதினொ ராந் திருமுறை, திருவிடை மருதூர் மும்மணிக்கோவை
பதிற்றுப். - பதிற்றுப்பத்து
பரிபா. - பரிபாடல்
பழ. - பழமொழி நானூறு
பாக. - பாகவதம்
பாரத. - பாரதம்
பிங். - பிங்கல நிகண்டு
பிரபுலிங். - பிரபுலிங்கலீலை
பிரபோத. - பிரபோத சந்திரோதயம்
பு.வெ. - புறப்பொருள் வெண்பா மாலை
புறத். ஆசிரியமாலை - புறத்திரட்டு, ஆசிரியமாலை

புறம். - புறநானூறு

பெரியபு. - பெரியபுராணம்

பெருங். - பெருங்கதை

பெரும்பாண். - பெரும்பாணாற்றுப் படை

பொருந. - பொருநராற்றுப்படை

மணி. - மணிமேகலை

மலை. - மலையகராதி

மலைபடு. - மலைபடுகடாம்

மாறன. - மாறனலங்காரம்

மீனாட்சி. பிள்ளைத் - மீனாட்சி யம்மை பிள்ளைத் தமிழ்

முல்லைப். - முல்லைப்பாட்டு

யாப். காரிகை. - யாப்பருங்கலக்காரிகை

யாப். வி. - யாப்பருங்கல விருத்தி

யாழ். அக. - யாழ்ப்பாணத்து மாணிப்பாயகராதி

வள்ள. - வள்ளலார் சாத்திரம்

விநாயகபு. - விநாயக புராணம்

வி.சிந். - விவேக சிந்தாமணி

விறலிவிடு. - விறலிவிடுதூது

வெங்கைக்கோவை. - திருவெங்கைக் கோவை

வெண்பாப். செய். - வெண்பாப் பாட்டியல், செய்யுளியல்

S.I.I. Vol. - South Indian Inscriptions Volume

# மொழிப் பெயர்கள்

**தமிழ்**

இ. - இந்தி
க. - கன்னடம்
ச. - சமற்கிருதம்
து. - துளு, துளுவம்
தெ. - தெலுங்கு
பிரா. - பிராகிருதம்
ம. - மலையாளம்
மராத். - மராத்தி
வ. - வடமொழி

**ஆங்கிலம்**

AF.- Anglo - French
AS.- Anglo - Saxon
Du.- Dutch
E.- English
F.- French
G.- German
Gael.- Gaelic
Gk.- Greek
Goth.- Gothic
Heb.- Hebrew
K.- Kannada
Kur.- Kurukh
L., Lat.- Latin
Lith.- Lithuanian
LL.- Late Latin
M.- Malayalam
MDu.- middle Dutch
ME.- middle English
MLG.- middle Low German
OE.- old English
OF.- old French
OHG.- old High German
ON.- old Norse
OS.- old Saxon
S., Skt.- Sanskrit
Slav.- Slavonic
T., Te., Tel.- Telugu
T.- Tulu

**பல்வகைக் குறிப்புகள்**

இ.வ. - இலக்கிய வழக்கு
உ.வ. - உலக வழக்கு
எ - டு. - எடுத்துக்காட்டு
ஒ. நோ. - ஒப்புநோக்க
செ. குன்றிய வி. - செயப்படு பொருள் குன்றிய வினை
செ. குன்றா. வி. - செயப்படு பொருள் குன்றா வினை
நாஞ்.வ. - நாஞ்சில் நாட்டு வழக்கு
யாழ்ப். - யாழ்ப்பாண வழக்கு
நெ.வ. - நெல்லை வழக்கு
c.f., - confer (=compare)

# உள்ளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | பதிப்புரை | .... | iii |
| | வான்மழை வளச்சுரப்பு | .... | iv |
| | சான்றிதழ் | .... | iii |
| | சிறப்பு முன்னுரை | .... | ix |
| | முகவுரை | .... | xi |
| | குறுக்க விளக்கம் | .... | xvii |
| | மொழி பெயர்ப்பு | .... | xx |
| 1. | 'அம்' என்னும் வேர்ச்சொல் | ... | 3 |
| 2. | 'அர்' என்னும் வேர்ச்சொல் | ... | 10 |
| 3. | 'இல்' என்னும் வேர்ச்சொல் | ... | 17 |
| 4. | 'இள்' என்னும் வேர்ச்சொல் | ... | 24 |
| 5. | 'உ' என்னும் வேர்ச்சொல் | ... | 29 |
| 6. | 'உம்' என்னும் வேர்ச்சொல் | ... | 37 |
| 7. | 'உய்' என்னும் வேர்ச்சொல் | ... | 44 |
| 8. | 'உல்' என்னும் வேர்ச்சொல் | ... | 50 |
| 9. | 'உல்' என்னும் வேர்ச்சொல் (உல்$^2$) | ... | 58 |
| 10. | 'உல்' (உ) என்னும் வேர்ச்சொல் | ... | 71 |

11. 'உள்' என்னும் வேர்ச்சொல் ... 78

12. 'ஊது' என்னும் வேர்ச்சொல் ... 85

13. 'ஏ' என்னும் வேர்ச்சொல் (உல்²) ... 90

14. 'ஒல்' என்னும் வேர்ச்சொல் ... 96

15. 'ஓ' என்னும் வேர்ச்சொல் ... 103

# வேர்ச் சொற் கட்டுரைகள்

## முதற்பகுதி

## உயிர் முதல் வேர்ச்சொற்கள்

# 1

# 'அம்' என்னும் வேர்ச்சொல்

***அம்*** *(பொருந்தற் கருத்து வேர்)*

*உம்முதல் = கூடுதல், பொருந்துதல்.*

*உம் – அம்.*

*அம்முதல் = க. நெருங்குதல்.*

*அம் – அமல். அமல்தல் = நெருங்குதல்.*

*''வேயம லகலறை''* ***(கலித். 45)***

*அம் – அமை. அமைதல் = (1) நெருங்குதல். ''வழையமை சாரல்'' (மலைபடு. 181) (2) நிறைதல். ''உறுப்பமைந்து'' (குறள். 761) அமல் = நிறைவு. (ஞானாமிர்தம், 34) (3) போதியதாதல், உளம் நிறைதல். அமைவு = பொந்திகை (திருப்தி). (4) பொருந்துதல். ''பாங்கமை பதலை'' (கந்தபு. திருப்பர. 9)*

*அமர்தல் = 1. பொருந்துதல். ''தன்னம ரொள்வாள்'' (பு.வெ. 4 : 5) 2. ஒத்தல். அமர, ஓர் உவமவுருபு.*

*அம் – அம்பு – அம்பர் = ஒருவகைப் பிசின்.* M. ambar.

*அமைதி = பொருந்திய தன்மை, இலக்கணம்.*

*அமல் – அமலை = சோற்றுத்திரளை.*

*''வெண்ணெறிந் தியற்றிய மாக்க ணமலை''* ***(மலைபடு. 441)***

*அமலை = மிகுதி. அமல் – அமள் – அமளி = மிகுதி.* M. amali.

*அமை = கெட்டி மூங்கில்.*

*''சேரே திரட்சி''* ***(தொல். 846)***

*''அமையொடு வேய்கலாம் வெற்ப''* ***(பழ. 357)***

*அமலை* M. ama. = *படைமறவர் திரண்டு ஆரவாரித்தாடும் ஆட்டம், ஆரவாரம். அமளி = ஆரவாரம்.*

*அம் = [1] நிலத்தொடு பொருந்தும் நீர்.*

*''அந்தாழ் சடையார்''* ***(வெங்கைக்கோவை, 35)***

*''செம்புலப் பெயனீர் போல*
*அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே''* ***(குறுந். 40)***

*என்னுங் குறுந்தொகையடிகளை நோக்குக.*

*அம் – ஆம் = நீ.*

*''ஆமிழி யணிமலை''* ***(கலித். 48)***

*''பூமரு தேன்பட்டுப் புனுகுசவ் வா(து) – ஆம் அழன்மற்று''* ***(நீதிவெண்பா)***

*அம் – அம்பு = நீர். அம்பு* - ambu (S.). *அம் – அப்* (s), M. ambu.

*அம் = [2] அழகு.*

*''கிஞ்சுகவா யஞ்சுகமே''* ***(திருவாச. 19 : 5)***

*அம் – அம்மை = 1. அழகு (பிங்.).*

*ஆம் = அழகு.*

*''ஆம்பாற் குடவர் மகளோ''* ***(சீவக. 492)***

*நீரால் வளம் ஏற்படுவதால் அழகு தோன்றும்.*

*ஒ.நோ : கார் = நீர், அழகு.*

*அமரல் = 2. பொலிவு (திவா.).*

*அமர்தல் = 3. அன்புகூர்தல்.*

*உளத்தாற் பொருந்துதல், காதலித்தல், விரும்புதல்.*

*''அமர்தல் மேவல்''* ***(தொல். 863)***

*''அகனமர்ந் தீதலி னன்றே''* ***(குறள். 92)***

*''ஆத்தி சூடி யமர்ந்த தேவனை''* ***(ஆத்திசூடி, கட. வா.)***

C/f. L. *amare*, love, E. amateur, amatory, amiable, amorist, amorous, amour, paramour *etc*.

*அம்முதல் = உ. கூடுதல், குவிதல்*

*அம் – அம்பு – அம்பல் = குவிந்த மொட்டு.*

*சிலரறிந்து கூறும் புறங்கூற்று.*

*''அம்பலும் அலரும் களவு''* **(தொல். 1085)**

*அம்பல் – அம்பலம் = கூட்டம், கூடுமிடம்.*

K. ambala, M. ampalam, Tu. ambila, S. ambara.

*''வெள்ளியம் பலத்து நள்ளிருட் கிடந்தேன்''*
**(சிலப். பதிகம், 41)**

*அம்பல் – ஆம்பல் = பகலிற் குவியும் அல்லி, பலகோடி கொண்ட ஒரு பேரெண்.*

K.abal, M.,Tu.ambal.

*''ஆம்பலந் தீங்குழற் றெள்விளி பயிற்ற''* **(குறிஞ்சிப். 222)**

*''ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ''***(சிலப். ஆய்.பா.2)**

*இரவில் மலர்வதால் அல்லி என்றும், பகலிற் குவிவதால் குமுதம் என்றும் பெயர் பெற்றிருத்தலும் காண்க.*

*கும்முதல் = குவிதல்.*

*அமர்தல் = 4. இருத்தல். அமர்வு = இருப்பிடம்.*

*''அலிபுரு டோத்தம னமர்வு''* **(திவ். பெரியாழ். 4 : 7 : 8)**

M. amaruka. *கிடையமர்தல் = மந்தையை இருத்துதல்.*

*அமைதல் = (5) தங்குதல்.*

*''மறந்தவண் அமையா ராயினும்''* **(அகம். 37)**

*அமர்தல் = 5. படுத்தல். அமளி = படுக்கை.*

*''அமளி யங்கட் பூவணைப் பள்ளி''* **(சீவக. 1710)**

M. amali *(அமளி)*

*அமர்தல் = 6. வேலையில் அமர்தல்.*

T. amaru, K. amar.

*அமர்தல் = 7. அமைதியாதல், அடங்குதல், படிதல், இளைப்பாறுதல், இசைதல், அணைதல், தாழ்தல்.*

*அம்மை = 2. அமைதி.*

*''அம்மையஞ் சொல்லா''* **(சீவக. 3131)**

*3. சொற்சுருங்கியும் அடி பல்காதும் அடங்கிநிற்கும் பனுவல் வகை.*

*''சின்மென் மொழியாற் சீர்புனைந் தியாப்பின்*
*அம்மை தானே அடிநிமிர் பின்றே''* **(தொல். 1491)**

M. ameyuka – amekka.

அமர்– அமரிக்கை = அடக்கம். T. amarika, M. amarcca.

அமர்தல் = 8. விளக்கணைதல்.

''விளக்கானது காற்றினால் அமருமா போல'' **(குருபரம். 305)**

M. amaral. அமர்– அமர்த்து. அமர்த்துதல் = அழாதிருக்கச் செய்தல்.

அமை – அமைதி. அமைவன் = முனிவன்.

அமர்தல் = 9. அமைதல், ஏற்படுதல்.

வீடமர்தல் = குடியிருக்க வீடு ஏற்படுதல்.

அமைதல் = (6) ஏற்படுதல்.

அமைதல் = (7) சமைதல், பதமாதல், நுகருதற்கேற்ற நிலைமையை யடைதல், அணியமாதல் (ஆயத்தமாதல்).

அமைத்தல் = ஆக்குதல், சமைத்தல்.

''ஐந்துபல் வகையிற் கறிகளும்... அமைப்பேன்''
**(பாரத. நாடுகர. 15)**

அமை– சமை. M. camayuka (சமையுக)

ஒ. நோ ៖ இறகு– சிறகு, இளை– சிளை, உருள்– சுருள், உலவு– சுலவு, உழல்– சுழல், எட்டி– செட்டி, ஏண்– சேண்.

சமைத்தல் = ஆக்குதல், பதப்படுத்தல், தகுதியாக்குதல், அணியமாக்குதல். M.camekka (சமெக்க).

சமைதல் = சோறாதல், பெண் பூப்படைதல், மணஞ்செய்யத் தகுதியாதல், தகுதியாதல்.

சமை– சமையம்– சமயம் = ஆதன் (ஆன்மா) இறைவனை யடையத் தகுதியாகும் ஒழுக்கம் அல்லது நெறி.

அரிசி உண்ணச் சமைதலும், பெண் மணக்கச் சமைதலும் போன்றதே, ஆதன் இறைவனை அடையச் சமைதல்.

சமைவு = நிலைமை.

அமைதல் = (8) நேர்தல்.

அமை – அமையம் = நேரம். ஒ.நோ ៖ நேர்– நேரம். நேர்தல் – நிகழ்தல்.

''ஆனதோ ரமையந் தன்னில்'' **(கந்தபு. திருக்கல். 72)**

அமையம் – சமையம்.

அமர்தல் = 10. பொருந்துதல், கலத்தல், பொருதல், இருவர் அல்லது இரு படைகள் கலந்தே பொருதலால், கலத்தற் கருத்தில் பொருதற் கருத்துத் தோன்றிற்று.

ஒ. நோ : கைகலத்தல் = சண்டையிடுதல்.

கல – கலாம், கலகம். பொரு – போர். பொருதல் = பொருந்துதல், போர் புரிதல்.

அமர் M. amar = போர். அமர் – அமரம். அமர் – அமர்த்தல் = போரிடுதல், மாறுபடுதல்.

அமரி = போர்த்தெய்வமான காளி.

''பேதைக் கமர்த்தன கண்'' **(குறள். 1084)**

அமரகம் = போர்க்களம்.

''அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா'' **(குறள். 814)**

அமர் – சமர் – சமரம். சமம் = ஒப்பு, போர்.

ஒ. நோ : பொருதல் = ஒத்தல், போர்புரிதல். ஒத்தல் ஈண்டுக் கலத்தல்.

''ஒளிறுவாட் பொருப்ப னுடல்சமத் திறுத்த'' **(பரிபா. 22 : 1)**

அமர்க்களம் = போர்க்களம், ஆரவாரம். M. amarkkalam.

அம்முதல் = நு. அமுங்குதல், பதுங்குதல்.

அம் – அம்மி. M. ammi = அமுங்க நெருக்கியரைக்குங் கல்.

அம்முக்கள்ளன் = ஒன்றும் தெரியாதவன்போல் நடிக்குந் திருடன்.

அமர்தல் = 11. அமுங்க நெருங்கித் தழுவுதல்.

''அமரப் புல்லும்'' **(திருக்கோ. 372)**

அம்மு – அமுங்கு – அமுக்கு – அமுக்கி = இரவில் அமுக்குவது போன்ற தோற்றம். (nightmare).

அமுக்கடி = நெருக்கடி. அமுக்கன் = மறைவாக வினை செய்பவன்.

M. amunnuka (அமுங்ஙுக), amukkuka.

அமுக்கலான் = சிலந்தியை அமுக்கி நலமாக்கும் தழை.

அமுக்கம் = கமுக்கம்.

அம் – அமிழ், அமிழ்தல் = நீரில் அமுங்குதல்.

M. amiluka *(அமிழுக).*

*அமிழ் – ஆழ் – ஆழம். ஆழ் – ஆழி.*

*அமிழ் – அமிழ்த்து – ஆழ்த்து –* M. amilttuka *(அமிழ்த்துக).*

*ஆழ் – அழுந்து – அழுத்து – அழுத்தம்.*

*அழுத்து – அழுத்தி.*

***அம் – அமை***

*அமைதல் =* (1a) *நெருங்குதல், கூடுதல்.*

*ம – வ, போலி. அமை – அவை = கூட்டம். கழகம்.*

*ஒ. நோ : அம்மை – அவ்வை, குமி – குவி.*

*அமை, அவை என்பன முதனிலைத் தொழிலாகுபெயர்.*

*இமை, சுவை என்பன முதனிலைத் தொழிலாகு பெயரா யிருத்தலை நோக்குக.*

*அவை – அவையம் – பேரவை.*

*'அம்' ஒரு பெருமைப்பொருட் பின்னொட்டு.*

*ஒ. நோ : மதி – மதியம் (முழுமதி), நிலை – நிலையம், விளக்கு – விளக்கம்.*

*அவை – சவை –* sabha (S).

*ஒ. நோ : இளை – சிளை, ஏமம் – சேமம்.*

> *''அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்''* ***(925)***
>
> *''அவையடக் கியலே அரில்தபத் தெரியின்''* ***(1370)***

*என்று தொல்காப்பியத்திலும்,*

> *''நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து''*

*என்று தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்திலும், அவை, அவையம் என்னும் இருவடிவுச் சொற்களும் வந்திருத்தல் காண்க.*

---

*குறிப்பு : இக் கட்டுரையில் 'அம்முதல்' என்ற சொல்லுக்குரிய பொருளுக்கு க, உ என்னுந் தமிழ் எண்களும், 'அமைதல்' என்ற சொல்லுக்குரிய பொருளுக்கு வளைவுக் குறிக்குள் ( ) எண்களும், 'அமர்தல்' என்ற சொல்லுக்குரிய பொருளுக்குக் குறியில்லாத எண்களும், 'அம்' என்ற சொல்லுக்குரிய பொருளுக்குப் பகரக் ழு ீ குறிக்குள் எண்களும் தொடர்பு தெரியும்பொருட்டுக் கொடுக்கப்பெற்றிருக்கின்றன.*

*சபா என்னும் சொல்லை வடமொழியாளர் ச+பா என்று பிரித்து* bha, to shine *என்று பொருந்தப் பொய்த்தலாகப் பொருளுரைப்பர். பர்.சட்டர்சியோ அதை ஒப்புக்கொள்ளாது,* sib *என்னும் தியூத்தானியச் சொல்லை மூலமாகக் காட்டுவர்.* sib *என்பது உடன்பிறந்தாருள் ஒருவரையோ பலரையோ குறிக்கும் சொல். எருதந்துறைச் சிற்றகராதியை* (The Concise Oxford Dictionary) *எடுத்துப் பார்க்க. இருவகை மூலமும் எள்ளளவும் பொருந்தாமையை அறிஞர் கண்டு கொள்க.*

# 2

# ‘அர்’ என்னும் வேர்ச்சொல்

## அர் (அறுத்தற் கருத்து வேர்)

உல் – உர் – அர். உர் – உர – உரவு – உரசு – உரைசு – உரைஞ்சு. உரசு – உரோசு – உரோஞ்சு. உர் – உரி – உரிஞ் – உரிஞ்சு. உர – உரை – உராய்.

ரகர றகரம் இரண்டனுள்ளும் காலத்தால் முந்தியது ரகரமே. அதன் வல்வடிவே றகரம். றகரம் தோன்றாத முதுபண்டைக் காலத்தில், ரகரமே அதன் தொழிலை ஆற்றிவந்தது.

எ - டு : முரிதல் – முறிதல் = வளைதல்.

‘‘முரிந்து கடைநெரிய வரிந்தசிலைப் புருவமும்’’
**(மணி. 18 : 161)**

பார் = பாறை.

‘‘இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.’’ **(குறள். 1068)**

இவ் வெடுத்துக்காட்டுகள் பிற்காலத்து நூலினவாயினும், சொல்லளவில் முற்காலத்தனவே.

அறுத்தல் என்னும் பொருளில் முதற்காலத்தில் வழங்கிய சொல் ‘அர்’ என்பதே. அது பிற்கால மொழிநிலையில்,

‘‘ரகார ழகாரம் குற்றொற் றாகா’’ **(தொல். 49)**

என விலக்கப்பட்டது.

அர் – அரம் = அராவும் இருப்புக்கருவி.

அர் – அரா – அராவு.

அராவுதல் = அரத்தால் அறுத்துத் தேய்த்தல்.

அரம் – அரம்பு – அரம்பம் = மரமறுக்கும் ஈர்வாள். Te. rampamu.

அரம்பு – அரம்பணம் = வெற்றிலை நறுக்கும் கருவி.

அர – அரம்போற் கூரிய பல்லையுடைய பாம்பு.

அர – அரா. அர – அரவு – அரவம் = பாம்பு.

அரங்குதல் = 1. அறுபடுதல். 2. அம்புபோல் தைத்தல். ''அம்பு.... அரங்கி முழுக'' (சீவக. 293). 3. அழுந்துதல் (உரி. நி.). 4. தேய்தல். 5. வருந்துதல். ''அரக்கர்கண் அரங்க'' (கம்பரா. மூல. 81). 6. உருகுதல். 'செம்பை அரங்கவை' (உ. வ.). 7. அழிதல். ''அரக்கரங் கரங்க'' (திவ். திருச்சந். 32).

அரங்கு = 1. (அறுக்கப்பட்ட கட்டடப்பகுதியாகிய) அறை. 'அவ் வீடு அரங்கரங்காகக் கட்டப்பட்டுள்ளது' (உ. வ.). 2. அறைபோன்ற நடன அல்லது நாடகமேடை. 3. நாடகசாலை. 4. சொற்பொழிவு அல்லது நூலுரைப்பு மேடை. 5. அவை. 6. பாண்டி அல்லது சில்லாக்கு என்னும் விளையாட்டிற்குக் கீறிய கட்டம். 7. கவறாட்டிற்கு வரைந்த கட்டம். 8. கவறாடும் இடம்.

அரங்கு – அரங்கம் = 1. நாடகசாலை. ''ஆடம் பலமும் அரங்கமும்'' (சீவக. 2119). 2. கவறாடும் இடம் (பிங்.) 3. படைக்கலம் பயிலும் இடம் (சூடா.). 4. போர்க்களம் (திவா.). 5. அவை (திவா.). 6. ஆற்றிடைக்குறை. ''ஆற்றுவீ யரங்கத்து'' (சிலப். 10 : 156). 7. திருவரங்கம் (திவ். பெரியதி. 5 : 7 : 1)

அரங்கம் – Skt. ranga.

ஆற்றிடைக் குறைகட்கெல்லாம் பொதுப்பெயரான அரங்கம் என்னும் சொல், திருவரங்கத்திற்குச் சிறப்புப் பெயராயிற்று. ஆற்றுநீரால் அறுக்கப்பெற்ற திட்டு அல்லது தீவு என்பது அதன் பொருள்.

அரங்கன் = அரங்கநாயகனான திருமால். ''அரங்கனைப் பாடிய வாயால் குரங்கனைப் பாடேன்'' என்றார் பிள்ளைப்பெருமா ளையங்கார்.

திருவரங்கம் என்பது பிற்காலத்தில் ஸ்ரீரங்கமென வடமொழி யில் திரிந்தது.

அரங்கு – அரக்கு (பி.வி.)

அரக்குதல் = 1. தேய்த்தல். ''கண்ணரக்கல்'' (சினேந். 456). 2. சிதைத்தல் (சூடா.) 3. அழுத்துதல். ''விரலால் தலையரக்கினான்'' (தேவா. 223 : 11). 4. வருத்துதல். ''எல்லரக்கும்........... இராவணன்'' (கம்பரா.

ஊர்தேடு. 230). 5. கிளைதறித்தல். 6. வெட்டுதல். ''தாளும் தோளும் அரக்கி'' (விநாயகபு. 42 : 4). 7. குறைத்தல். ''காரரக்கும் கடல்'' (தேவா. 46 : 8). 8. முழுதுமுண்ணுதல்.

அரக்கு – அரக்கன் = அழிப்பவன்.

அரப்பு = அழுக்குத் தேய்க்கும் கட்டி அல்லது தூள்.

அரம்பு = குறும்பு. அரம்பன் = குறும்பன்.

அரமகள் = வருத்தும் பெண்தெய்வம், தேவமகள்.

ஒ. நோ : அணங்கு = வருத்தும் பெண்தெய்வம், தேவமகள்.

அரம்பையர் = தேவமகளிர்.

''அரம்பையர்ச் சேருவ ரன்றே'' **(நைடத. நிலா. 13)**

அரளுதல் = அஞ்சுதல்.

அரள் – அரட்டு – அரட்டன் = துன்புறுத்துவோன், துன்புறுத்தும் குறுநில மன்னன்.

அரட்டமுக்கி = துன்புறுத்தும் குறுநில மன்னனை அடக்கும் செங்கோலரசன்.

அரற்றுதல் = துன்பத்திற் கதறுதல்.

அர் – அரி.

அரிதல் = பொடியாய் நறுக்குதல் அல்லது சிறிய பொருளை அறுத்தல்.

அரிதாள் = கதிரறுத்த நெல்தாள்.

அரிவி – இருவி = அரிதாள்.

அரிவாள் – சிறிதாய் அறுக்கும் வாள்வகை.

அரிவாள்மணை = அரிவாள் பதித்த பலகை அல்லது கட்டை.

அரிவாள்முனைப் பூண்டு – அரிவாள் முனையிலுள்ள தேங்காய் திருகிபோன்ற இலையுள்ள பூண்டு.

அரித்தல் = 1. அரித்தொழுகுதல். 2. சிறிது சிறிதாய்க் கறையான் (சிதல்) போல் அறுத்தல். 3. தினவெடுத்தல், புல்லரித்தல், நுண்ணியதாய் வலித்தல். 4. வெட்டுதல். 5. அழித்தல்.

கோடரி = கிளையை வெட்டும் வாள். Skt. kuthara,

கோடரி – கோடாரி – கோடாலி.

அரி, அரிமா = பிற வுயிரினங்களை அழிக்கும் விலங்கு.

*கோளரி = கொல்லும் மடங்கல்* (lion)

*அரி* – Skt. hari.

*அரி = அறுக்கப்பட்டது, அறுக்கப்பட்ட சிறுதுண்டு, சிறியது, நுண்மை, மென்மை.*

*''அரியே ஐம்மை''* ***(தொல். உரி. 58)***

*அரிநெல்லி = சிறுநெல்லி.*

*அரிக்குரல் = நுண்ணியதாய் ஒலிக்கும் குரல்.*

*அரித்தல் = சிறிது சிறிதாய்ச் சேர்த்தல்.*

*அரிக்கன் = அரிக்கும் சட்டி.*

*அரிப்பு வலை = அரிக்கும் மீன்வலை.*

*அரி = பருப்பினும் சிறிய கூல உள்ளீடு.*

*அரி = அரிசி*

*அரிசிக்களா = சிறுகளா.*

*அரிசிப்பல் = சிறு பல்.*

*அர் – அரு – அருவு.*

*அருவுதல் = 1. மெல்லெனச் செல்லுதல். 2. அறுத்தொழுகுதல். ''கரையை ஆற்றுவெள்ளம் அருவுகிறது'' (உ.வ.). 3. துன்பப் படுத்துதல். ''அருவி நோய் செய்து'' (திவ். பெரியதி. 9 : 7 : 6).*

*அருவு – அருவி = மலையுச்சியினின்று மரஞ் செடி கல் மண்ணை அரித்தொழுகும் நீர்வீழ்ச்சி.*

*அருவு – அருகு.*

*அருகுதல் = 1. குறைதல். ''ஒன்னார் மதிநிலை அருக'' (இரகு. யாக. 34). 2. அரிதாதல். ''அருகுவித் தொருவரை யகற்றலின்'' (கலித். 242). 3. அஞ்சுதல். ''அஞ்செஞ் சாய லருகா தணுகும்'' (சிலப். 30 : 120). 4. கெடுதல். ''பருகு வன்ன அருகா நோக்கமொடு'' (பொருந. 77)*

*அரு – அருமை = 1. பொருள்முடை. 2. எளிதிற்பெற அல்லது காணமுடியாமை. 3. அளவிறந்த பற்று அல்லது மதிப்புமிகை. 4. பெருஞ்சிறப்பு.*

*அருமருந்தன்ன – அருமந்தன்ன – அருமந்த – அருமாந்த.*

*அருமைக்காரன் = கொங்குவேளாளர் பூசாரி.*

*அருகு – அருக்கு = அருமை.*

''நிதியின் அருக்கு முன்னி'' **(திருக்கோ. 275).**

அருக்குதல் = அருமை பண்ணுதல்.

அருக்காணி = அருமை.

'அஞ்சு பேருக்கு அருக்காணித் தங்கை' (உ.வ.).

அரு– அருந்தல் = விலையுயர்வு, பொருளருமை.

அருந்தற்படி – Dearness Allowance

அர– அரை. அரைத்தல் = 1. தேய்த்தல். 2. தேய்த்துத் தூள் அல்லது களியாக்கல்.

அரை– அரைவை.

அரு – அரை = அருகிய அல்லது சிறுத்த இடை; உடம்பிற் பாதி, பாதி.

ஒ. நோ ஃ இடு– இடுகு. இடுத்தல் = சிறுத்தல்.

இடு– இடுப்பு. இடு– இடை = இடுப்பு, நடு.

அர்– அறு– அறை = அரங்கு.

அறைக்கீரை = அறையறையாய் வகுக்கப்பெற்ற பாத்தியில் விளையும் கீரை.

''அறைக்கீரை நல்வித்தும்'' (திருமந். 160).

அறை = அறுத்தது, அற்றது.

எ- டு ஃ உறுப்பறை, கண்ணறை, மூக்கறை (யன்).

அறை = அறுத்தது, வரம்பிட்டது.

எ - டு ஃ வரையறை.

அறு– அறுதி.

அறு– அறவு = நீக்கம். எ - டு ஃ வரையறவு.

அறு– அற்றம் = ஆடை நீங்குகை, விழிப்பில்லா நிலை.

அறு– அறுவு = தீர்ந்துபோதல். 'அரிசி அறுவாய்ப் போய்விட்டது' (உ.வ.).

அறு– அறுவு– அறுவடை.

அறு – அறுப்பு = 1. கதிரறுப்பு. 2. கைம்பெண் தாலியறுப்பு. அறுதாலி = கைம்பெண் (தாலியற்றவள்).

*அறு – அறுவை = 1. அறுக்கப்பட்ட ஆடை, சவளி. 2. அறுப்பு மருத்துவம் (இக்காலப் பொருள்).*

*அறு – அறுகு = 1. அகலப் படர்ந்து ஆழ வேரூன்றிப் பயிரை அழிக்கும் புல். 2. பிறவுயிரினங்களை அழிக்கும் அரிமா.*

*அறுகு – அறுகை (அறுகம்புல்).*

*அறுகிடல் = அறுகம்புல்லைத் தூவி அதுபோல் வேரூன்றிப் படருமாறு மணமக்களை வாழ்த்தல்.*

*அறு – ஆறு = 1. நிலத்தூடறுத் தொழுகும் நீரோட்டம். 2. வழி.*

*நிலமுழுதும் சோலையாயிருந்த பண்டைக்காலத்தில் ஆறுகளே வழிகளாயிருந்தன.*

*3. சமயநெறி. 4. ஆறென்னும் எண்.*

*முதற்காலத்திலேயே தெய்வ வழிபாடுகள் அல்லது மதக் கொள்கைகள் அறுவகைப்பட்டிருந்ததினால், ஆறென்னும் நீர் நிலைப் பெயருக்கு ஆறென்னும் எண்ணுப் பொருளும் தோன்றிற்று. மதம் என்னும் சொற்கு ஆறென்னும் பொருள் இருப்பதும் இங்குக் கவனிக்கத்தக்கது.*

*ஆறிருக்கும் ஊர் சில ஆற்றூர் எனப்படும். அப் பெயர் ஆறையென மருவும். எ - டு ஃ பழையாறை.*

*அறு – அறுவாள்.*

*அரிவாள் வேறு; அறுவாள் வேறு. காய்கறியறுக்கும் மணைவாளே அரிவாள் எனப்படும். பிற அறுப்பு வாளெல்லாம் அறுவாள் என்றே கூறப்பெறும். மெலிதாய் அறுப்பது அரிவாள் என்றும், வலிதாய் அறுப்பது அறுவாள் என்றும் வேறுபாடறிதல் வேண்டும். தொழிலின் அல்லது வினையின் மென்மையைக் குறிக்க இடையின ரகரமும், வன்மையைக் குறிக்க வல்லின றகரமும், ஆளப்பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது.*

### அறுவாள் வகைகள்

***1) பன்னறுவாள்*** (sickle)

*பல் – பன். பன் வைத்தது பன்னறுவாள்.*

***2) பாளையறுவாள்***

*தென்னை, பனை முதலியவற்றின் பாளையைச் சீவுவது பாளையறுவாள்.*

**3) வெட்டறுவாள்**

கடா கிளை முதலியவற்றை வெட்டுவது வெட்டறுவாள்.

**4) கொத்தறுவாள்**

இஃது ஆட்டுக்கறியை அறுப்பதற்கும் கொத்து வதற்கும் பயன்படுவது.

**5) வீச்சறுவாள்**

இது வீசிப் பகைவரைக் கொல்வதற்கு உதவுவது.

இங்ஙனம் பல்வேறு அறுவாள்கள் தமிழ்நாட்டில் தொன்று தொட்டு வழங்கி வரவும், அவற்றுள் ஒன்றைக்கூட அறுவாள் எனக் குறியாது எல்லாவற்றையும் அரிவாள் என்றே சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலி குறித்திருப்பது வருந்தத்தக்கது.

# 3

# 'இல்' என்னும் வேர்ச்சொல்

# இல் (இளமைக் கருத்து வேர்)

**இல்**

*உல்– உல்லரி = தளிர். உல்– உலவை = இளந்தழை. உல்– இல்.*

*இன்மை = மென்மை, நொய்ம்மை, இளமை, சிறுமை, எளிமை, வறுமை, இராமை.*

*இல்– இல = இலவு, நொய்ய பஞ்சுள்ளது.*

*இல– இலவு. இலவு–* Skt. laghu *= கனமின்மை, எளிமை.*

*இலவு– இலவம் = இலவு, சிறிது (அற்பம்).*

M. ilavam. *இலவம் (அற்பம்),* Skt. lava.

*இல்– இலை = இலைவகைகளுள் மென்மையானது.*

*இலம் = வறுமை.*

*''இலம்என் கிளவிக்குப் படுவரு காலை''*

**(தொல். எழுத்து. 316)**

*இலம்படுதல் = வறுமையடைதல். இலம்படு – இலம்பாடு = வறுமை,*

*''இலம்படு புலவர் ஏற்றகைந் நிறைய''* **(மலைபடு. 576)**

*இலம் – இலம்பை = வறுமை. இடுக்கண்.* **(யாப்பு.)**

*''இலம்பா டொற்கம் ஆயிரண்டும் வறுமை.''*

**(தொல். உரி. 62)**

*இலம்படு– இலம்படை = வறுமை.*

*''இலம்படை வந்துழி''* **(கந்தபு. மூவா. 46)**

இலை – இலக்கு = வித்தின் முளையூன்றியபின் வரும் முதல் இலைகள்.

இல்– இள்– இள. இளத்தல் = மெல்லிதாதல்.

உடம்பு இளந்துவிட்டது என்னும் உலக வழக்கை நோக்குக,

இளமை = மென்மை, இளம்பருவம், அறிவு முதிராமை.

இளகு– இளகுதல் = மெல்குதல், நெகிழ்தல், உருகுதல். **ம.** இளகு.

இளகு– இளக்கு– இளக்கம். **ம.** இளக்கம்.

இளகு– இளஃகு. இளஃகுதல் = தளிர்த்தல்.

''இன்னுயிர் ........... இளஃகுமே'' **(சீவக. 149)**

இளக்கரித்தல் = தளர்தல், வேகந்தணிதல், கருமத்தில் விழிப்பின்றி யிருத்தல்.

இளக்கரி – இளக்காரம் = கழிகண்ணோட்டம், மனநெகிழ்ச்சி, மதிப்பின்மை.

இளப்பம் = மதிப்புக் குறைவு, தாழ்வு. **ம.** இளப்பம்.

இளவல் = தம்பி, இளைஞன், முற்றாதது.

இளங்கிளை = தங்கை.

'மாலவற் கிளங்கிளை'' **(சிலப். 12 : 68)**

இளந்தலை = இளைமை, எளிமை, கனமின்மை, முற்றா மரப் பகுதி.

இளந்தை– இளைமை.

இளந்தாரி = இளைஞன், இளைஞை.

இளந்தேவி = இளவரசி.

இளமட்டம் = இளைஞன். இளமட்டம்– இளவட்டம்.

இளம்படியர் = இளம்பெண்கள்.

''வாணிளம் படியர்'' **(திவ். பெரியாழ். 3 : 6 : 3)**

இளங்கேள்வி = உதவிக் கோயிற் கண்காணியர்.

இளங்கோ = இளவரசன்.

இளங்கொற்றி = ஈன்றணிமை ஆவு.

இளங்கதிர் = எழுஞாயிற்றின் கதிர். **ம.** இளங்கதிர்.

இளங்கம்பு = கம்புவகை.

*இளங்கலையன் = நெல்வகை.*

*இளங்கருக்கு = சிறிது காய்ச்சிய கருக்கு (கஷாயம்)*

*இளங்காட்டுத் தரிசு = பத்தாண்டுப் புறம்போக்கு.*

*இளங்கார் = நெல்வகை.*

*இளங்கால் = தென்றல், வெற்றிலை யிளங்கொடி, இளமைப் பருவம்.*

*இளங்காலை = வைகறை, இளமைப்பருவம்.*

*இளங்குரல் = குழந்தையின் குரல்.*

*இளங்குழம்பு = திண்ணமில்லாத சாறு, ஒருவகைக் குழம்பு.*

*இளங்கொடி = ஆவின் நஞ்சுக்கொடி, இளம்பெண்.*

*இளங்கோயில் = பழங்கோயில் பழுதுபார்க்கப்படும் பொழுது கட்டப்பெறும் குறுங்காலக் கோயில்.*

*இளஞ்சாயம் = சிறிது தோய்த்த சாயம்.*

*இளஞ்சார்வு = குருத்தோலை (யாழ்).*

*இளஞ்சிவப்பு = வெளிறிய சிவப்பு.*

*இளஞ்சூடு = சிறிது சுடுகை.*

*இளஞ்சூல் = முதிராக் கரு.*

*இளந்தண்டு = முளைக்கீரை.*

*இளந்தெய்வம் = சிறு தெய்வம்.*

*இளந்தோய்ச்சல் = தயிர் சிறிது திரைதல், அலகைச் சிறிது பதப் படுத்துதல்.*

*இளநகை = புன்சிரிப்பு,* ***க.*** elanage

*இளநாக்கடித்தல் = உடன்பாடின்மைபோற் காட்டுதல்.*

*இளநிலா = அந்தி நிலா.*

*இளநீர் = முற்றாத தேங்காய்நீர், மணியின் இளநிறம்.* T. edaniru, K.elaniru, ***ம.*** *இளநீர்.*

*இளநீர்க்கட்டு = உண்ணாக்கு நோய்* (tonsillitis)

*இளநீலம் = வெளிறிய நீலம்.*

*இளநெஞ்சு = இரக்கமுள்ள மனம்.*

*இளம்பசி = சிறுபசி.*

*இளம்பதம் = முற்றாநிலை, சிறிது வெந்த அல்லது காய்ந்த நிலை, இளவரசு பதவி.*

*இளம்பறியல் = முற்றாத நிலையில் பறிக்குங் காய்.*

*இளம்பிறை = சிறுபிறை.*

*இளமணற்பாய்தல் = மனமிளகி ஈடுபடுதல்.*

*இளமழை = சிறு பெயல்முகில்.*

*இளமார்பு = கருப்பூரவகை.*

*இளமையாடுதல் = திரிபுணர்ச்சியுறுதல்.*

*''மந்தி....... இளமையாடி யிருக்கும் வனத்து''* **(சீவக. 2491)**

*இளவடி = இளம்பதத்தில் வடிக்கை.*

*இளவணி = காலாட்படை.*

*''நின்ற இளவணி கலங்கி''* **(ஈடு. 7, 4, 1)**

*இளவன் = ஒருவகை நஞ்சு.*

*இளவாடை = வடக்கிருந்து வரும் மென்காற்று.*

*இளவாளிப்பு = ஈரம்.*

*இளவிளவெனல் = பயிர் பசுஞ் செழிப்பாயிருத்தல்.*

*இளவுச்சி = நண்பகற்கு அணித்தான முற்பொழுது.*

*இளவெந்நீர் = சிறிது சுடும் நீர்.*

*இளவெயில் = காலை வெயில்.*

*இளவெழுத்து = திருந்தா வெழுத்து.*

*இளவேனில் = வெப்பம் முதிராக் கோடை.*

*இள– இளை = இளைமை.* K. ele.

*இளைச்சி = தங்கை.*

*''அகில முண்டார்க்கு நேரிளைச்சி''* **(திருப்புகழ், 1037)**

*இளைத்தல் = மெலிதல், சோர்தல், பின்னடைதல், வறுமைப் படுதல், வளங்குறைதல்.*

*இளைப்பு = சோர்வு, களைப்பு.*

*இளைது = முதிராதது. இளைது – இளைசு – இளசு.*

*இளையர் = இளைஞர், வேலைக்காரர்.*

*இளையவன் = அகவையிற் குறைந்தவன், தம்பி.*

*இளையவள் = திருமகள்.*

*இளையன் = தம்பி.*

*இளையாள் = தங்கை, திருமகள், பின்முறை மனைவி.*

*இள் = எள்.*

*எள்ளல் = குறைவாய் மதித்தல், இகழ்தல்.*

*எள் = 1. மிகச் சிறு கூல வகை. 2. ஒரு சிற்றளவு (8 கடுகு).* **க., ம.** *எள்.* **து.** *எண்மெ.*

*எள்– எண் = எள்.*

*''எண்ணெ ணுணவுப்பெயர்''* ***(தொல். எழுத்து. 308)***

*எண்மை = எளிமை.*

*எள்ள = இகழ, ஓர் உவமவுருபு.*

*''எள்ள விழைய இறப்ப நிகர்ப்ப''* ***(தொல். உவ.11)***

*எள் – எள்கு. எள்குதல் = 1. இகழ்தல். ''எள்கலின்றி... ஈசனை வழிபாடு செய்வாள்'' (தேவா. 1049 : 10). 2. கூசுதல், ஒடுங்குதல். ''பழிவந்து மூடுமென் றெள்குதுமே.'' (திருக்கோ. 92). 3. அஞ்சுதல். ''எண்டிசை யோரும் எள்க'' (சீவக. 1749). 4. வருந்துதல். ''செங்களம் பற்றிநின் றெள்கும் புன்மாலை'' (திவ்.இயற். திருவிருத். 77).*

*எள்கு– எஃகு, எஃகுதல் = நெகிழ்தல், அவிழ்தல், உருகுதல்.*

*எஃகு– உருக்கு, உருக்கினாற் செய்யப்படும் படைக்கலப் பொது.*

*ஒ. நோ : இள– இளகு.*

*எஃகுபடுதல் = இளகினநிலை யடைதல்.*

*''உருகக் காய்ச்சியெறிதற்கு எஃகுபட்டிருக்கும் உலையினையும்''*
***(சிலப். 15 : 210, உரை)***

*எள்– எளி. எளிதல் = எளிமையடைதல்.*

*''பொருதிறல் வன்மைய திலனா யெளிந்தான்''*
***(கந்த பு. அக்கினிமுகா. 90)***

*அளித்தல் = தாழ்த்திக் கூறுதல்.*

*''எளித்தல் ஏத்தல்''* ***(தொல். பொருள். 207)***

*எளிமை = எளிதாய்ச் செய்யும் நிலை, தாழ்வு, வறுமை, தளர்வு.*

*எளிய விலை– குறைந்த விலை.*

*எளியன் = வறியவன், தாழ்ந்தோன், எளிதாய் அடையப் படுபவன்.*

*எளிவு– எளிய தன்மை.*

*''உரலினோ டிணைந்திருந் தேங்கிய எளிவே''*
***(திவ். திருவாய். 1 : 3 : 1)***

*எளுமை = எளிமை.*

*எள்– எய். எய்த்தல் = 1. இளைத்தல். ''எய்த்த மெய்யே னெய்யே னாகி'' (பொருந. 68). 2. உடம்பு வருந்துதல். ''எய்யாமை யெல்லா வறமுந் தரும்'' (குறள். 296). 3. குறைவுறுதல். ''எய்த்தெழு பிறையினை விளைவின் றாக'' (இரகு. யாகப். 8).*

*எய்ப்பு = 1. இளைப்பு. ''எய்ப்பானார்க் கின்புறு தேனளித்து'' (தேவா. 189 : 3). 2. வறுமைக் காலம். ''எய்ப்பினில் வைப்பென் பது'' (பழ. 358). ''எய்ப்புழி வைப்பாம் என'' (பழ. 136).*

*எய்ப்பில் வைப்பு = இளைத்த காலத்தில் உதவுதற்கு ஈட்டி வைக்கப்படும் ஏமப்பொருள்.*

*''அப்பாவென் னெய்ப்பில் வைப்பே''* ***(தாயு, பராபர. 25)***

*எய்ப்பினில் வைப்பு = எய்ப்பில் வைப்பு* (provident fund)

*''நல்லடி யார்மனத் தெய்ப்பினில் வைப்பை''****(தேவா. 818 : 2)***

*எள்– ஏள்– ஏளனம் = இகழ்ச்சி.*

*ஏள்– ஏளிதம் = இகழ்ச்சி.*

*ஏள்– ஏசு. ஏசுதல் = இகழ்தல்.*

*ஏள் = ஏழ்– ஏழை.*

*ஏழை = 1. வறியவன். 2. அறியாமை. ''ஏழைத் தன்மையோ வில்லை தோழி'' (கலித். 55 : 23, உரை). 3. அறிவிலான், அறிவிலாள். ''ஏமுற்ற வரினும் ஏழை'' (குறள். 873). 4. பெண். ''எருதேறி யேழையுடனே'' (தேவா. 1171 : 2).*

*ஏழைமை = வறுமை, அறியாமை.*

*ஏள் – ஏட்டை = 1. வறுமை. ' ஏட்டைப் பருவத்தும் இற்பிறந்தார் செய்வன'' (நாலடி. 358). 2. இளைப்பு. ''வெண்ணிணத்த*

*செந்தடிக்கே யேட்டைப் பட்டு'' (சீவக. 1552). இன்மை = வறுமை, குறைவு, இல்லாமை.*

Cf. E. less, deficient, minus.

*வளங்குன்றிய நாடு, செயப்படுபொருள் குன்றிய வினை என்னும் தொடர்ப்பொருள்களையும் ஒப்புநோக்கி யுணர்க.*

*இல் = இல்லை. இல்– இல்லை. இல், இல்லை என்பன, உள் உண்டு என்னும் வினைகட்கு எதிர்மறையாம். உள் என்னும் வினை மலையாளப் பழமொழிகளில் இன்றும் வழங்குகின்றது.*

## 4

# 'இள்' என்னும் வேர்ச்சொல்

# இள் (இணைதற் கருத்து வேர்)

உல்– ஒல். ஒல்லுதல் = பொருந்துதல்.

உல்– (இல்)– இள்.

இள்– இழை.

இழைதல் (செ.குன்றியவி.) 1. நெருங்கிப் பழகுதல். அவர்களிருவரும் இப்போது நிரம்ப இழைகிறார்கள் (உ.வ.) 2. கூடுதல். ''இழைந்தவர் நலத்தை யெய்தி'' (சீவக. 2720). 3. பிணைதல். பாம்புகள் ஒன்றோடொன்று இழையும். (உ.வ.). 4. மனம் பொருந்துதல். ''இழையச் சொல்லி'' (சீவக. 1593).

இழைத்தல் (செ. குன்றாவி.) = 1. பின்னுதல். ''பாயிழைத்தல்'' (யாழ்ப்பாண உ.வ.). 2. பதித்தல். ''மணியினிழைத்த செய்குன்றின்'' (நைடத. நகர, 6). 3. திரட்டி வைத்தல். ''பொங்கரி னிழைத்த'' (மாறன. ப. 294). 4. செய்தல். ''இழைத்தவிச் சிற்றிலை'' (திவ். நாய்ச். 2.2). 5. அமைத்தல். ''பொறபா விழைத்துக் கொளற்பாலர்'' (சீவக. 4). 6. கூறுதல். ''கிழவனை நெருங்கி யிழைத்து'' (தொல். பொருள் 150)

இள் – (இண்) – இணர் = 1. பூங்கொத்து. ''இணரூழ்த்து நாறா மலரனையர்'' (குறள். 650). 2. காய்க்குலை. ''இணர்ப் பெண்ணை'' (பட்டினப். 18). 3. வழி மரபு. 4. இணரோங்கி வந்தாரை. (பழ. 72). இண் – இணகு = உவமை. ''இணகிறந் தகன்ற பாசம்'' (ஞானா. 45).

இணகு– இணங்கு (பெ.) = 1. இணக்கம். ''உள்ளப் பெறா ரிணங்கை யொழிவேனோ'' (திருப்பு. 288). 2. ஒப்பு. ''இணங்காகு முனக்கவளே'' (திருக்கோ. 68). 3. நட்பின– ன்– ள். ''அவனது இணங்கு'' (தொல், சொல். 80, சேனா.).

(வினை) = 1. மனம் பொருந்து. 2. நட்புச் செய். இணங்கு – இணங்கல் = உடன்பாடு. 2. இரண்டு. இணங்கற் பிஞ்சு (உ.வ.)

இணங்கன் = நண்பன்.

''வணங்குவோ ரிணங்கன் வந்தான்'' **(திருவாலவா. 28 : 27)**

இணங்கி = தோழி. (பிங்.)

இணங்கர் = ஒப்பு.

''கற்பிற் கிணங்க ரின்மையான்'' **(கம்பரா. மீட்சி. 147)**

இணங்கலர் = பகைவர். இணங்கார் = பகைவர்.

இணங்கு (செ. குன்றியவி.)– இணக்கு (செ. குன்றாவி.) = இசைவி.

(பெ.) = 1. இசைவு. ''இணக்குறுமென் னேழைமைதான்'' (தாயு. பராபர. 273). 2. ஒப்பு. ''இணக்கி லாததோ ரின்பமே'' (திருவாச. 30 : 1). இணக்குப் பார்வை = பார்வை விலங்கு. இணக்கு – இணக்கம் = 1. இசைப்பு. 2. பொருத்தம். 3. நட்பு. ''நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்'' (கொன்றைவே.). 4. உடன்பாடு. 5. திருத்தம்.

இணக்கோலை = உடன்படிக்கை முறி.

இணாப்புதல் = ஏய்த்தல் (யாழ்).

இணாப்பு = ஏய்ப்பு (யாழ்).

ஏய்த்தலாவது பொருந்தச் சொல்லி ஏமாற்றுதல்.

இணைதல். (செ. குன்றியவி.) = 1. சேர்தல். ''இணைந்துடன் வருவதிணைக்கை'' (சிலப். 3 : 18, உரை). 2. உடன்படுதல். 3. ஒத்தல் (தணிகைப்பு. நாட்டு. 53).

இணைத்தல் (செ. குன்றாவி.) = 1. சேர்த்தல். 2. கட்டுதல். ''இணைத்த கோதை'' (திருமுருகு. 200).

இணை = 1. சேர்வு. 2. ஒப்பு. 3. இரண்டு. 4. இரட்டை. ''குறிலே நெடிலே குறிலிணை குறில்நெடில்'' (தொல். 1261). 5. துணை. 6. உதவி.

இணைப்பு = 1. இசைப்பு. 2. ஒப்பு. ''இணைப்பரும் பெருமை'' (திருவாச. 3 : 46).

இணைபிரியாமை = ஆணும் பெண்ணும் துணைபிரியா திருத்தல்.

இணையடித்தல் = முட்டுக்கால் தட்டுதல்.

இணையணை = பலவணை.

''இணையணை மேம்படத் திருந்து துயில்'' **(சிலப். 4 : 67)**

இணைவன் = இணைந்திருப்பவன்.

''இணைவனா மெய்ப்பொருட்கும்''

**(திவ். திருவாய். 2 : 8 : 1)**

இணைவிழைச்சு = புணர்ச்சி.

''இணைவிழைச்சு தீதென்ப'' **(இறை. 1, உரை, ப. 9)**

இள்– (இய்)– இயை,

இயைதல் (செ. குன்றியவி.) = 1. பொருந்துதல். ''என்போடியைந்த தொடர்பு'' (குறள். 73). 2. இணங்குதல். 3. நிரம்புதல். ''மாக்கடல்கண் டியைய மாந்தி'' (திணைமாலை. 100).

(செ. குன்றாவி.) = ஒத்தல் (நன். 367).

இயைதல்– இயைத்தல் (செ. குன்றாவி.) = பொருந்துதல்.

இயைவு = சேர்க்கை (திவா.).

இயைவு – இயைபு = 1. புணர்ச்சி. (தொல். சொல். 308). 2. பொருத்தம். ''பண்ணென்னாம் பாடற் கியைபின்றேல்'' (குறள். 573).

3. இது கேட்டபின் இது கேட்கத்தக்க தென்னும் தொடர்பு முறை (நன். சிறப்புப். விருத்.) 4. எழுத்தொத்துவரும் தொடைவகை (யா. கா. உறுப். 16). 5. மெல்லின இடையின மெய்களுள் ஒன்றில் முடியும் செய்யுள்களைக் கொண்ட வனப்புவகை. (தொல். பொருள் 552).

இயை – இசை. இசைதல் (செ. குன்றியவி.) = 1. பொருந்துதல். 2. ஒத்துச்சேர்தல். 3. உடன்படுதல். ''விண்பெறினு மிசையார்'' (திருநூற். 83). 4. கிடைத்தல். ''கனக மிசையப் பெறாஅது'' (திருவாச. 2 : 39). 5. இயலுதல். ''இசையா வொருபொருள்'' (நாலடி. 111).

இசைத்தல் (செ. குன்றாவி.) = 1. கட்டுதல் (திவா.). 2. உண்டுபண்ணுதல். ''இறுதியை யிசைத்த கந்தனை'' (விநாயக பு. 75 : 573). 3. ஒத்தல். ''கூற்றிசைக்கு மென'' (பாரத. இராச. 52). 4. மிகக் கொடுத்தல் (பிங்.).

இசைவு = 1. பொருந்துகை. ''இசைவில வெல்லாம்'' (பெருங். மகத. 15 க 9). 2. தகுதி. 3. உடன்பாடு. ''மறையோ ரிசைவினால்'' (பெரியபு. சண்டேசுர. 24). 4. ஏற்றது.

*இசைவுகேடு = 1. பொருத்தமின்மை. 2. கருமத் தவறு.*

*இசைகுடிமானம் = நாட்டுக்கோட்டைச் செட்டியாரால் எழுதப் பெறும் திருமண ஒப்பந்தம்.*

*இசையோலை = ஒப்பந்த வோலை.*

*இயை– (எய்)– ஏய்.*

*ஏய்தல் (செ. குன்றியவி.) = 1. பொருந்துதல். ''ஏய்ந்த பேழ்வாய்'' (திவ். பெரியதி. 1 ፡ 7 ፡ 3). 2. தகுதல். ''தில்லையூரனுக்கின் றேயாப்பழி'' (திருக்கோ. 374).*

*(செ. குன்றாவி.) = 1. ஒத்தல். ''சேலேய் கண்ணியரும்'' (திவ். திருவாய். 5 ፡ 1 ፡ 8) 2. எதிர்ப்படுதல். ''ஏயினா ரின்றி யினிது'' (ஐந். ஐம். 11).*

*ஏய்த்தல் (செ. குன்றா வி.) = 1. பொருந்தச் சொல்லுதல். ''பொய்குறளை யேய்ப்பார்'' (பழ. 77). 2. ஒத்தல். ''அல்லிப்பாவை யாடுவனப் பேய்ப்ப'' (புறம். 33 ፡ 17) 3. ஏமாற்றுதல்.*

*ஏய = ஓர் உவமவுருபு.* ***(தண்டி. 33)***

*ஏய்ப்ப = ஓர் உவமவுருபு.* ***(தொல். பொருள் 290)***

*ஏய்வு = உவமை (திவா).* ***(திவா.)***

*ஏயான் = ஒரு தொழிலைச் செய்தற்குத் தகாதவன்.*

*''மாவலியை யேயா னிரப்ப''* ***(திவ். பெரியதி. 1 ፡ 5 ፡ 6)***

*ஏய்– ஏ = உம்மைச் சொற்போல் எண்ணுப்பொருளில் வரும் ஓர் இடைச்சொல்.*

*எ - டு ፡ இரண்டேகால்– (எண்ணல்)*

*கழஞ்சே குன்றி– (எடுத்தல்)*

*கலனே பதக்கு– (முகத்தல்)*

*முழமே விரல்– (நீட்டல்)*

*''தோடே மடலே ஓலை யென்றா''* ***(தொல். 1586)***

*''நிலமே நீரே தீயே.''*

*இயை என்னும் சொல்லின் திரிபான ஏய் என்னும் சொற்குப் பொருந்தல் அல்லது கூடுதற்பொரு ளுண்மையால், அதன்*

*கடைக்குறையான ஏகார விடைச்சொல், எண்ணுப்பொருளில் வந்ததென வறிக.*

*இதுகாறும் கூறியவற்றால்,* ***இள்*** *என்னும் வேர்ச்சொல்லின் அடிப்படைப் பொருள் பொருந்துதல் என்பது உணரப்படும்.*

# 5

# ‘உ’ என்னும் வேர்ச்சொல்
# (உகரச்சுட்டு)

## முன்மைச்சுட்டு

*உ (முன்மைக் கருத்து வேர்)*

*உகரத்தை ஒலிக்குங்கால், இதழ் குவிந்து முன்னோக்குவதால், உகரச்சுட்டு, முதற்கண் பேசுவோனின் முன்னிடத்தைக் குறித்தது.*

*உதுக்காண் = என்முன் பார்!*

*உதா, உதோ*

*உந்தா, உந்தோ = என் முன்னே!*

*உதோள், உதோளி = எனக்கு முன்னிடத்தில்.*

*உந்த = எனக்கு முன்னுள்ள.*

*உங்கு, ஊங்கு = எனக்கு முன்.*

*உவன் = எனக்குமுன் நிற்பவன்.*

*இங்ஙனமே, உவள், உவர், உது, உவை என ஏனைப் பாலிலும் ஒட்டுக.*

*உகரச்சுட்டு தமிழ்நாட்டில் வழக்கற்றது. ஆயினும், யாழ்ப்பாணத்தில் வழங்குவதாகத் தெரிகின்றது. இது குடியேற்றப் பாதுகாப்பு என்னும் நெறிமுறைப்பட்டது.*

*முன் என்னும் சொல் முன்னிடத்தையும், முற்காலத்தையும் உணர்த்துவதுபோல், உகரச்சுட்டும் உணர்த்தும்.*

*ஊங்கு = முன்பு.*

*‘‘உணரா வூங்கே’’* **(குறுந். 297)**

*ஊங்கண் = முற்காலம்.*

*"ஊங்க ணோங்கிய வுரவோன் றன்னை"* **(மணிமே. 21 : 181)**

*ஊங்கணோர் = முன்னோர்.*

*"தூங்கெயி லெறிந்தநின் னூங்கணோர் நினையின்"*
**(புறம். 39)**

## முன்னிலைப் பெயர்

*முன்னிலை யிடப்பெயர்கள் முன்னால் நிற்பவனைச் சுட்டுவதால், அவை உகரச்சுட்டடியினின்றே தோன்றியுள்ளன.*

| முதல்நிலை | எழுவாய் | வேற்றுமையடி | |
|---|---|---|---|
| | ஒருமை : ஊன் | உன் | |
| | பன்மை : ஊம் | உம் | |
| இரண்டாம் நிலை | ஒருமை : நூன் | நுன் | |
| | பன்மை : நூம் | நும் | |
| மூன்றாம் நிலை | ஒருமை : நீன் | நின் | |
| | பன்மை : நீம் | நிம் | |
| நாலாம் நிலை | ஒருமை : நீ | | |
| | பன்மை : நீயிர், நீவிர், நீர் | | |
| ஐந்தாம் நிலை | இரட்டைப் பன்மை | ஊங்கள் | உங்கள் |
| | | நூங்கள் | நுங்கள் |
| | | நீங்கள் | நிங்கள் |

*சில சொற்களின் ஊகாரமுதல், ஈகாரமுதலாகத் திரியும்.*

*ஒ. நோ :* *தூண்டு – தீண்டு*

*தூண்டா விளக்கு – தீண்டா விளக்கு*

*நூறு – நீறு*

*பூளை – பீளை*

*பூறு – பீறு*

*தமிழர் தமக்குள் பிறரை இழிந்தோன், ஒத்தோன், உயர்ந்தோன் என மூவகைப்படுத்தி, அதற்கேற்பப் பெயரும் வினையும் அமைத்த காலத்தில், ஒருமைப் பெயர் இழிந்தோனையும், ஒற்றைப்பன்மைப் பெயர் ஒத்த*

*மதிப்புள்ளோனையும் இரட்டைப் பன்மைப் பெயர் உயர்ந்தோனையும் குறிக்க ஆளப்பெற்றன.*

*நீயிர், நீவிர், நீர் என்பன செயற்கை முறையில் திரிந்ததனாலும், நீங்கள் என்னும் சொல் வழக்குண்மையாலும், கள்ளீறு பெறா.*

*உகரச்சுட்டு இற்றைத் தமிழ்நாட்டில் வழக்கற்றது போன்றே, முன்னிலைப் பெயர்களின் பல முன்னை வடிவங்களும் வழக்கற்றன. இவையெல்லாம் குமரிநாட்டில் வழங்கி வந்தவையே.*

### உயரச்சுட்டு

*நிலத்தினின்று மேலெழும் மரஞ்செடிகொடிகட்கும், மண்ணி னின்று விண்ணிற்கெழும் பறவையினங்கட்கும், முன்னேற்றம் மேற்செலவா யிருத்தலால், உகரச்சுட்டு உயரக் கருத்தையும் தழுவலாயிற்று.*

*உக்கம் = 1. தலை.*

*''உக்கத்துமேலும் நடு''* ***(கலித். 94)***

*2. கட்டித் தூக்கும் கயிறு.*

Te. uggamu, K. ugga, Tu. uggi.

*உகத்தல் = உயர்தல்.*

*''உகப்பே உயர்வு''* ***(தொல். சொல். 306)***

*உகலுதல் = குதித்தல்.*

*''உகலியாழ் கடலோங்கு பாருளீர்''* ***(தேவா. 75 : 1)***

*உகளுதல் = குதித்தல்.*

*''இரலை... யுகள''* ***(குறுந். 6)***

*உச்சம் = உயரம். உச்சம்* – Skt. ucca.

*உச்சி = முடி, மீமிசை.* K., M. ucci.

*உச்சாணி = எல்லாவற்றினும் உயரமானது.*

*எ - டு : உச்சாணிக் கிளை.*

*உத்தரம் = 1. உயரத்திலுள்ள விட்டம். 2. உயரமான வடதிசை.* Skt. uttara. *3. வடவனல் (பிங்.)*

*உத்தி = திருமகளுருவம் பொறித்த தலையணி.*

*''தெய்வ வுத்தியொடு''* ***(திருமுருகு. 23)***

உப்பு = பொருமியெழும் உவர்மண், உப்புக்கல்.

உம்பர் = 1. மேல், மேலே. ''யான்வருந்தி உம்பரிழைத்த நூல்வலயம்'' (பெரியபு, கோச்செங். 5). 2. மேலிடம். ''மாடத்தும்பர்'' (ஞானா. 9, 6). 3. வானம். ''உம்ப ருச்சியிற்...... கதிர்பரப்பு கடவுள்'' (திருவிளை. தண்ணீர். 29). 4. தேவருலகம். ''உம்பரிற் கிடந்துண்ண'' (நாலடி. 37). 5. தேவர். M. umbar. ''ஒலியடங்கு முலகாளு மும்பர் தாமே'' (திவ். பெரியதி. 7 : 8 : 10).

உம்பரார் = தேவர்.

''உம்பரார்க்கு முரைப்பருந் தகைய ரானார்'' **(சீவக. 1678)**

உம்பன் = உயர்ந்தோன்.

''உம்பரீச ரும்பன்'' **( ஞானா. பாயிரம். 7 : 4)**

உம்பர்– உம்பரம்– அம்பரம் = வானம்.

உம்பல் = 1. எழுச்சி (பிங்.). 2. யானை (உயரமான விலங்கு). ''யானைக் கமர ரும்பல்'' (திருவள்ளுவ. 36).

உமண் = உப்புமண், உப்பு.

உயர் = உயரம், உயர்வு, உயர்த்தி, உயர்ச்சி. M. uyar.

உவ்வி = தலை (திவா.)

உவண் = மேலிடம். **(சீவக. 2858)**

உவணம் = 1. உயர்ச்சி (திவா.). 2. பருந்து, கலுழன். ''உயரவுயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?'' (பழமொழி).

கலுழன்– கருட (வ.)

உவணன் = பருந்து, கலுழன் (திவா.)

உவணம்– சுவணம்– சுபர்ண (**வ.**)

உவணை = தேவருலகம்.

''ஆதரித் துவணைமே லுறைந்தான்'' **(சேதுபு. விது. 54)**

உவர் = மேலெழும் உப்பு, உவர் நிலம்.

உவப்பு = உயரம் (பிங்.)

உவர்– இவர். இவர்தல் = உயர்தல்.

''விசும்பிவர்ந் தமரன் சென்றான்'' **(சீவக. 959)**

உவச்சன் = காளியை ஏத்தும் பூசாரி.

*உவச்சன் = ஓச்சன்.*

*உறி = உயரக் கட்டித் தூக்கும் தொடர்.*

*உன்னுதல் = மேலெழுதல்.*

*ஊர்தல் = ஏறிச்செல்லுதல்.*

*ஊர்தி = ஏறிச் செல்லும் விலங்கு, பறவை, வண்டி முதலியன.*

*''ஊர்தி வால்வெள் ளேறே''* ***(புறம். 1)***

## மோனைத் திரிபு

*உ - ஒ - ஓ. ஒய்யாரம் = 1. உள்ளத் துயர்ச்சி. 2. அட்டோலகம் (ஆடம்பரம்)*

*ஒயில் = 1. ஒய்யார நடை. 2. குதித்தாடும் கும்மிவகை.*

*ஓங்குதல் = உயர்தல்.*

*ஓங்கு– ஓக்கு (பிறவினை). ஓக்கு– ஓக்கம் = உயர்ச்சி, பெருக்கம்.*

*ஓங்கல் = 1. உயர்ச்சி. 2. எழுச்சி. 3. மலை. 4. யானை.*

*ஓச்சுதல் = உயர்த்துதல்.*

*ஓச்சம் = உயர்வு.*

*''வெவ்வர் ஓச்சம் பெருக''* ***(பதிற். 41 : 20)***

*ஓவர் = ஏத்தாளர்.*

*''ஓவரும் பாட''* ***(சீவக. 1844)***

## பக்கத் திரிபு

*உ - அ. உம்பரம்– அம்பரம்.*

*அண் = மேல், மேல்வாய். அண்ணம் = மேல்வாய்.*

*அண்ணன் = மேலோன், மூத்த உடன்பிறந்தோன்.*

*அண்ணல் = தலைவன், அரசன்.*

*அண்ணாள்வி = அண்ணாவி = விளையாட்டுத் தலைவன்.*

*அண்ணாத்தல் = மேனோக்குதல், தலைநிமிர்தல்.*

*அணத்தல் = தலையெடுத்தல்.*

*அணர்தல் = மேனோக்கிச் செல்லுதல்.*

*அணர் = மேல்வாய்ப்புறம்.*

*அணர் - அணரி = மேல்வாய்ப்புறம்.*

**பின்னைத் திரிபு**

*உ - இ. ஒ.நோ : புரண்டை– பிரண்டை. முடுக்கு– மிடுக்கு. உவர்– இவர்.*

*இ– ஈ– எ– ஏ (மோனை)*

*உ - எ. ஒ. நோ : குழுமு– கெழுமு.*

*எக்குதல் = வயிற்றுப் பக்கத்தை மேலெழுவித்தல்.*

*எஃகுதல் = பஞ்சை மேலெழச் செய்தல்.*

*எட்டுதல் = உயர்ந்து தொடுதல்.*

*எடுத்தல் = தூக்குதல்.*

*எண்ணுதல் = மேன்மேற் கருதுதல், மேன்மேல் தொகையைப் பெருக்குதல்.*

*எத்துதல் = மேனோக்கி வெட்டியிழுத்தல் அல்லது உதைத்தல்.*

*எத்து = எற்று.*

*எம்புதல் = எழுதல்.*

*எவ்வுதல் = குதித்தெழுதல்.*

*எழுதல் = உயர்தல், படுக்கைவிட்டெழுதல்.*

*எழும்புதல் = உயர்தல், படுக்கைவிட்டெழுதல்.*

*ஏ = உயர்ச்சி, பெருமை.*

*''ஏபெற் றாகும்''* ***(தொல். உரி. 7)***

*ஏங்குதல் = நுரையீரலை யெழுவித்துப் பெருமூச்சு விடுதல்.*

*ஏண் = உயர்ச்சி. ஏண்– ஏணி = உயரச் செல்லும் கருவி.*

*ஏண்– சேண் = உயர்ச்சி.*

*ஏண்– ஏணை = தொங்கும் தொட்டில்.*

*ஏத்தாப்பு (ஏத்த யாப்பு) = மேலணியும் வல்லவாட்டு.*

*ஏத்துதல் = உயர்த்திப் புகழ்தல், வழுத்துதல்.*

*ஏந்துதல் = உயரக் கையில் தாங்குதல், ஏந்தல் = குடிகளைத் தாங்கும் காவலன்.*

*ஏப்பம் = வயிற்றினின்று மேலெழுங் காற்று.*

*ஏர்தல் = எழுதல்.*

ஏலுதல் = கையால் அல்லது மனத்தால் ஏந்துதல்.

ஏறுதல் = மேற்செல்லுதல்.

**மெய்ம்முதற் சேர்க்கை**

உங்கு – (துங்கு) – துங்கம் = உயர்வு.

உங்கு – (புங்கு) – புங்கம் = உயர்வு.

(துங்கு) – தூங்கு – தொங்கு.

தூங்குதல் = நிலத்திற் படாது உயரத்திலிருத்தல், தொங்குதல், தொங்கும் ஏணையில் அல்லது கட்டிலில் உறங்குதல்.

தூங்கு = தூக்கு (பி.வி.).

தூக்குதல் = உயர்த்துதல், தொங்கவிடுதல்.

தூக்கு = தூக்கணம்.

தொங்கு – தொங்கல் = குறை. தொங்கு – தொகு – தொகை = குறை.

உங்கு – நுங்கு – நூங்கு – நூக்கு – நூக்கம் = உயரம்.

உம் – சும் – சும. சுமத்தல் = தலைமேற் பொறை கொள்ளுதல்.

சும – சுமை – சிமை = மலையுச்சி.

சிமை = சிமையம்.

ME. f. AF., OF summe, somme f. L. summa, f. *summus*, highest. E. sum.

ME. f. OF. sohmet, sommette;

*som*. top, f. L. summum, neut. g. summus, E. summit.

சும – (சுமல்) – சுவல் = சுமக்கும் தோட்பட்டை.

உயர்வும் மேலும் குறித்து வடமொழியாளர் ஆளும் உத் (ut, ud) என்னும் முன்னொட்டு தமிழ் உகரச்சுட்டடிப் பிறந்ததே.

எ - டு : உத்துங்கன் (uttunga).

உத்தூளனம் (uddhulana).

துங்கன், தூள் என்பனவும் தமிழ்ச் சொற்களே.

துங்கம் – துங்கன். துகள் – தூள் – தூளி.

### பின்மைச்சுட்டு

*கால முன்பின்கள் ஒன்றோடொன்று மயங்குவதாலும், குறுக்காக வளரும் விலங்குகளின் (மக்கள் ஏறிச்செல்லும்) உயர்ந்த உடற்பகுதி முதுகாயிருத்தலாலும், உகரச்சுட்டு பின்புறத்தையும் குறிக்கலாயிற்று.*

*உப்பக்கம் = பின்பக்கம், முதுகு.*

*''ஊழையும் உப்பக்கம் காண்பர்''* **(குறள். 620)**

*உம்பல் = வழிப் பிறந்தோன், பின்னோன்.*

*''நல்லிசைச் சென்றோ ரும்பல்''* **(மலைபடு. 540)**

*பண்டைக்காலம் முற்காலம் எனப்படுதலால், அதற்கெதிரான வருங்காலம் பிற்காலம் எனப்படும்.*

*உத்தரம் = வினாவிற்குப் பின் தரும் விடை அல்லது மறுமொழி.*

*உத்தரவு= வேண்டுகோட்குப் பின் தரும் விடையோலை.*

*உம்மை = மறுமை.*

*''உம்மை எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல்''* **(நாலடி. 58)**

*செய்யும் என்னும் வாய்பாட்டு எதிர்கால வினைமுற்றின் உம்மீறும், உகரச்சுட்டடிப் பிறந்ததே.*

*''ஆறைங் காதம்நம் அகனாட் டும்பர்''* **(சிலப். 10 : 42)**

*என்னுமிடத்து உம்பர் என்னும் சொல் அப்பால் என்று பொருள் படுவதாலும், உகரச்சுட்டு தமிழிலும் வழக்கற்றுப் போனதினாலும், அண்மையொடு ஒப்புநோக்கின் முன்மை சிறு சேய்மையாதலாலும், தமிழை அடிப்படையாகக் கொண்ட வடநாட்டு மொழிகளில் உகரம் சேய்மைச் சுட்டாகவே வழங்கிவருகின்றது.*

*எ - டு : உதர் (இ.) = அங்கே.*

*உங்கு (சாட்டு* Jhat*) = அங்கே.*

*உயர்வுக் கருத்தில் மிகுதிக் கருத்தும் கலந்திருத்தலால், உகரச்சுட்டு அல்லது அச் சுட்டடிச் சொல் சிறுபான்மை மிகுதிப் பொருளையும் உணர்த்தும்.*

*எ - டு : ஊங்கு = மிகுதி (சூடா.)*

*நூங்குதல் = மிகுதல்*

*நூங்கு = மிகுதி*

# 6

# ‘உம்’ என்னும் வேர்ச்சொல்

## உம் (கூடுதற் கருத்து வேர்)

*உம்முதல் = கூடுதல், இணைதல், உடனிருத்தல், பொருந்துதல், ஒட்டுதல், ஒத்தல்.*

*உம் என்னும் சொற்குக் கூடுதற்பொருள் இருத்தலாலேயே, அது இன்றும் எண்ணுப்பொரு ளிடைச்சொல்லாக வழங்குகின்றது.*

*எ - டு : அறமும் பொருளும் இன்பமும் வீடும்*
*வந்தும் போயும்.*
***ம.**உம், **க.**உம்.*

*எண்ணும்மை இடைச்சொல் பல பொருள்களை அல்லது சொற்களை ஒன்றுசேர்த்தல் காண்க.*

*உம்மிடைச் சொற்குக் கூடுதற்பொரு ளிருப்பதை, இருவகைச் சிறப்பும்மைக்கும் பகரமாக (பதிலாக), கூட என்னும் சொல் ஆளப் பெறின் பொருள் மாறாதிருப்பதாலும் அறியலாம்.*

*எ - டு : புலவர்க்கும் தெரியாத பொருள் =*
*புலவர்க்குக்கூடத் தெரியாத பொருள்.*

*புலையனும் விரும்பாப் புன்புலால் யாக்கை =*
*புலையன்கூட விரும்பாப் புன்புலால் யாக்கை.*

*யாம், நாம், நீம், தாம் முதலிய மூவிடப் பெயர்களின் பன்மையுணர்த்தும் மகரவொற்றும், உம்மிடைச் சொற் குறையே.*

*உம் – உமி = கூலங்களில் அரிசி பருப்பொடு கூடியிருக்கும் கூடுபோன்ற மெல்லிய தொலி.*

***ம.** உமி, **து.** உமி, **க.** உம்மி, **தெ.** உமக்க.*

*உமிதல் = இதழ் (உதடு) கூட்டித் துப்புதல்.*

*உமி– உமிழ். **ம.** உமி, உமிழ்; **தெ.** உமியு, **து.*** ubbi.

*உவமை– உவமம்– உவமன்.*

*உம்– உவ்– உவ– உவமை = ஒப்பு.*

*உவமை– உவமி. உவ– உவமானம்– உவமானி.*

*ம்– வ். ஒ.நோ. : அம்மை– அவ்வை, செம்மை– செவ்வை.*

*உவமை– உபமா (**வ**). உவமானம்– உபமான (**வ**).*

*உவத்தல் = உளத்தாற் பொருந்துதல், விரும்புதல்.*

*உம்– உன்– உன்னு, உன்னுதல் = பேச இதழ் (உதடு) கூட்டுதல். பேச வுன்னுகிறான் என்னும் வழக்கை நோக்குக.*

*ம்– ன். ஒ. நோ. : அம்மை– அன்னை, நிலம்– நிலன்.*

*உன்– உன்னியம் = சொந்தம்.*

*உன்னியம்– உன்னியன் = சொந்தக்காரன்.*

*உன்னியர் = சுற்றத்தார்.*

*உவ– உக. உகத்தல் (1) = விரும்புதல்.*

*வ்– க்.*

*ஒ.நோ : சிவப்பு– சிகப்பு, ஆவா– ஆகா (இடைச்சொல்).*

*உகத்தல் (2) = இணைதல்.*

*உக– உகம் = நுகம், இணை.*

OE. geoc, E. yoke, OHG, G. Joch, OS., Goth. juk, ON. ok, L. jugum, Skt. yuga.

*உன்– உல்– உர்.*

*ன்– ல். ஒ. நோ : திறன்– திறல், செய்வன்– செய்வல்.*

*ல்– ர். ஒ. நோ : குடல்– குடர், பந்தல்– பந்தர்.*

*உர்– ஊர் = கூட்டமான மக்கட் குடியிருப்பு.*

***ம.** ஊர், **க.** ஊர், **தெ.** ஊரு, **து.** ஊரு.*

*ஊர்தல் = நிலத்தொடு அல்லது உடம்பொடு பொருந்தி நகர்தல். ம.ஊர்.*

*உர்– உரம் = பொருந்தித் தழுவும் மார்பு, செறிவால் ஏற்படும் திடம், உறுதி, வலிமை. ம. உரம் = வலிமை.* Skt. uras *= மார்பு.*

*உர்– உர– உரசு. உரசுதல் = பொருந்தித் தேய்த்தல்.*

உரசு— உரைசு— உரைஞ்சு. உரைஞ்சுதல் = பொருந்தித் தேய்த்தல்.

உர்— உரை. உரைதல் = உரசுதல். உரைத்தல் = தேய்த்தல்.

உரை— உராய். உராய்தல் = பொருந்தித் தேய்த்தல்.

உராய்— உராய்ஞ்சு. உராய்ஞ்சுதல் = பொருந்தித் தேய்த்தல்.

**ம.** உரசு, **தெ.** ராயு.

உர்— உரி— உரிஞ் = உராய்தல்.

உரிஞ்— உரிஞ்சு. உரிஞ்சுதல் = உராய்தல்.

உர்— உரி = உடம்பொடு பொருந்தியுள்ள தோல், மரப்பட்டை.

உரி— உரிவை = தோல். **ம.** உரி.

உரித்தல் = தோலைப் பெயர்த்தல்.

**ம.** உரி, **க.** உரிச்சு, **தெ.** ஒலுத்சு.

உரி = பொருந்திய உறவு அல்லது உடைமை.

உரி - உரிமை. உரி— உரித்து.

உர்— உரு. உருத்தல் = ஒத்தல்.

''நின் புகழுருவின கை'' **(பரி. 3 : 32)**

ர்— ற். ஒ. நோ : ஒளிர்— ஒளிறு, முரி— முறி.

உர் — உறு. உறுதல் = பொருந்துதல், உறழ்தல், நேர்தல், அடைதல், தங்குதல், பெறுதல், வலுத்தல். **க.** உறு.

உறு— உறுப்பு = பொருந்திய பாகம் அல்லது பகுதி.

உற்றுக்கேட்டல் = பொருந்திக் கேட்டல்.

உறு— உறவு. உறவன், உறவினன், உறவாளி, உறவாடுதல்; உறல், உறன்முறை; உற்றார்.

உறாதான் = பொருந்தாதான், பகைவன்.

உறார் = பகைவர். உறாமை = பகைமை.

உறு— உறுத்து, உறூஉ.

செவியறிவுறூஉ = செவியுறுத்தும் அறிவுரை.

உறுத்துதல் = அழுத்துதல்.

உறு — உறை. உறைத்தல் = அழுந்திப் பொருந்துதல், நாவைக் கடுமையாய்த் தாக்குதல், காரமாதல்.

உறை = ஓரிடத்திற் பொருந்தியது, இட்டது, இடுவது.

கண்ணுறை – மேலிடுவது, மேலீடு.

கையுறை – காணிக்கை. வாயுறை = உணவு, மருந்து.

செவியுறை = காது மருந்து, அறிவுரை.

உறுதல் = ஒத்தல். உறு – உறழ். உறழ்தல் = ஒத்து மாறுபடுதல், மாறுபட்டுச் சொற்போர் நிகழ்த்துதல், சொற்புணர்ச்சியில் இயல்பும் திரிபுமாதல், பெருக்கல்.

உறழ – ஓர் உவமவுருபு. **(தொல். 1232)**

உறு – உறை. உறைத்தல் = ஒத்தல்.

''இலங்குமுத் துறைக்கும் எயிறு'' **(ஐங். 185)**

உறுநன் = சேர்ந்தவன்.

உறுதல் = நேர்தல், உற்றது, உறுவது.

உற்றுழி, உற்றவிடத்து = துன்பம் நேர்ந்தவிடத்து.

உறு – உறுவல் = துன்பம். உறு – ஊறு = துன்பம்.

உறுகண் = துன்பம், நோய், வறுமை.

உறுதல் = பொருந்தித் தங்குதல், தங்கிக் குடியிருத்தல்.

உறு – உறை, உறையுள் = குடியிருக்கும் வீடு.

உறை = கத்தியிருக்கும் கூடு; தலையணை, மெத்தை முதலிய வற்றை மூடும் பை.

உறு – உறவி = உடலில் தங்கும் உயிர், ஆதன் (ஆன்மா)

உறுதல் = செறிதல். மிகுதல், வலிமையுறல்.

உறு = உற. உறப்பு = செறிவு.

''விறப்பும் உறப்பும் வெறிப்பும் செறிவே''
**(தொல். உரி. 49)**

''உறுதவ நனியென வரூஉம் மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப'' **(தொல். உரி. 3)**

உறு = மிக்க. உறுவன் = மிக்கோன்.

உறு – உறுதி, உறுதலை.

**ம.** உறுதி, **தெ.** உறுதி, **க.** உறுபு.

உறு – உறை. உறைதல் = திரைதல், கட்டியாதல், இறுகுதல்.

உறைமோர்– பாலை உறையச் செய்யும் மோர்.

உறைபனி = இறுகிய பனி.

உல்– உள் = பொருந்தியுள்ளது, உள்ளது.

இச் சொல் இப் பொருளில் இன்று சோழ பாண்டி நாடுகளில் வழக்கற்று, சேரநாடாகிய மலையாள நாட்டில் மட்டும் வழங்கி வருகின்றது.

எ - டு : கேளியே உள்ளு, கண்டிட்டில்ல = கேள்விப் பாடாகத்தான் உள்ளது, கண்டதில்லை. **ம.** உள், **க.** உள்.

உள் + அது = உள்ளது. உள் + து = உண்டு.

உள்ளது– உளது, உண்டு.

**ம.** உண்டு, **து.** உண்டு, க. உண்ட்டு.

ஒன்றன்பாற் படர்க்கைக் குறிப்பு வினைமுற்றும், வினையாலணையும் பெயருமாகிய உண்டு என்னும் சொல், இன்று பால் வழுவமைதியாக இருதிணை யைம்பால் மூவிட ஈரெண்கட்கும் பொதுவாக வழங்கிவருகின்றது.

இன்றும் அதுவுண்டு, மரமுண்டு என்பவற்றில் ஒன்றன்பாற் படர்க்கைக் குறிப்பு வினைமுற்றாகவும், உண்டுபண்ணு (உள்ளது பண்ணு), உண்டாக்கு (உள்ளதாக்கு) என்பவற்றில் ஒன்றன்பாற் படர்க்கை வினையாலணையும் பெயராகவும், ஆளப்பெறுதல் காண்க. ம. உண்டாக்கு.

உள்– உண்மை = உள்ளதாயிருக்கும் தன்மை. 'உள்ளத்தொடு பொருந்தியது' என்னும் பொருள் மொழிநூற்கு ஒவ்வாது. வாய்மை = வாய்ப்பது, நிறைவேறுவது. மெய்ம்மை = உடம்புபோல் உண்மை யானது (substance, substantiality)

உண்மை, வாய்மை, மெய்ம்மை என்னும் சொற்களின் முக்கரணத் தொடர்பு, தன்னேர்ச்சியான (accidental) போலியே. ம. உண்ம.

உள்– உளி = பொருந்திய இடம், இடம்.

உளி– உழி = பொருந்திய இடம், இடம், அமையம்.

உள்– உடு. ஒ. நோ. : தொள் = தொடு, பள்– படு.

உடு– உடன்– கூட. **ம.** உடன், **க.** ஒடன்.

உடனே = கூடிய அதே நேரத்தில்.

உடன்– உடந்தை– கூட்டு, கூட்டாளி.

உடன்– உடங்கு = கூட, ஒருங்கு.

உடன்படுதல் = ஒத்திசைதல். உடன்படு – உடன்பாடு – **தெ.** ஒடபாட்டு.

உடன்படு– உடன்படிக்கை.

உடன்படு– உடம்படு– உடம்படிக்கை.

ம. உடம்படி, **தெ.** ஒடம்படிக்க, **க.** ஒடபடிக்கெ. **து.** ஒடம்படிக்கை.

உடு– ஒடு = கூட (3ஆம் வேற்றுமை யுருபு).

ஒடு– ஓடு = கூட (3ஆம் வே. உ.)

உடு– உடை – உடைமை– உடமை.

**ம.** உடம, **தெ.** ஒடமெ, **க.** ஒடமெ.

உடை – உடையான், உடையார்.

உடையவன்– ம. உடையவன், **தெ.** ஒடயடு.

உடைமை = உடன்கொண்டிருப்பது.

உடைமை = உடன்கொண்டிருக்கும் பொருள், சொத்து.

உடுத்தல் = உடம்போடு அணிதல். **ம.** உடு, **க.** உடு.

உடு– உடுப்பு, உடுக்கை, உடை – **ம.** உட, **க.** உடெ.

உடுப்பு – **ம.** உடுப்பு, **தெ.** உடுபு, **க.** உடுபு.

உடு– உடைபோற் கோட்டை மதிலைச் சுற்றியிருக்கும் அகழி.

உடு– உடுவை = அகழி.

ஒ. நோ : ''நீராரும் கடலுடுத்த நிலமடந்தை''
**(மனோன்மணீயம், தமிழ்த் தெய்வ வணக்கம்)**

உடு – உடும்பு = உடன்சேரச் சுவரைப் பற்றும் ஊருயிரி. **க.** உடு, **து.** உடு, **ம.** உடும்பு, **தெ.** உடுமு.

உடு– உடல் = உடனிருக்கும் கூடு.

**ம.** உடல், **து.** உடல், **க.** ஒடல், **தெ.** ஒடலு.

உடல்– உடர், உடலம், உடம்பு, உடக்கு. ம.உடம்பு, க.ஒடம்பி.

உடல்வினை = உடலொடு (பிறவியொடு) கூடிய நிகழ்கால நுகர்ச்சிவினை (பிராரத்த கருமம்).

*உடன்வந்தி = உடன்வந்த நிகழ்கால நுகர்ச்சிவினை.*

*உடு – உடன்– உடம்பை = மண்ணொடு கலந்த கலங்கல் நீர்.*

*உடு – உடல். உடலுதல் = 1. உறழ்ந்து மாறுபடுதல். ''உடலினே னல்லேன்'' (ஐங். 66). 2. சினத்தல். ''உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை'' (புறம். 77).*

*உடல் = மாறுபாடு (பு.வெ. 8 : 1)*

*உடலுநர் = பகைவர்.*

*உடல்– உடறு. உடறுதல் = சினத்தல்.*

*உடல்– உடற்று (பிறவினை).*

*உடற்றுதல்– சினப்பித்தல்.*

*உல்– உ. ஒ. நோ : பொல்– பொ, குல்– கு.*

*பொத்தல் = துளைத்தல்.*

*கு = குறு, சிறு. எ - டு : குக் (கிராமம்).*

*உத்தல் = பொருந்துதல், தகுதல்.*

*உ – உத்தம் = பொருத்தம், தகுதி. உத்தம்– யுக்த (வ.).*

*உ – உத்தி = 1. விளையாட்டிற் கன்னை (கட்சி) பிரித்தற்கு இவ்விருவராய்ச் சேர்தல். 'உத்திகட்டுதல்' என்பது உலக வழக்கு.* Tel. uddi. *2. சேர்க்கை. 3. பொருந்தும் முறை. 'நுதலிப்புகுதல்' முதலிய முப்பத்திரு நூலுரை நெறிமுறைகள். 4. மதிநுட்பம்.*

*உத்தி– யுக்தி (வ.)*

*உ – உக்கம் = பொருந்திய பக்கம், இடை* (waist).

''உக்கம் சேர்த்திய தொருகை'' ***(திருமுருகு. 108)***

*ஒ. நோ : மருங்கு (பக்கம்)– மருங்குல் (இடை).* M. ukkam.

*உக்கம்– உக்கல் = பக்கம்.* M. ukkal.

*உக்கல்– உக்கலை = மருங்கின் பக்கம்* (hips).

# 7

# ‘உய்’ என்னும் வேர்ச்சொல்

## உய் (செல்லுதற் கருத்து வேர்)

***உ – உய்***

*உய்தல் (த.வி.) = 1. முற்செல்லுதல், செல்லுதல். 2. நீங்குதல். ‘‘தாவ லுய்யுமோ’’ (பதிற். 41 : 17). 3. துன்பத்தினின்று தப்புதல். ‘‘சார்புடைய ராயினும் உய்யார்’’ (குறள். 900). 4. ஈடேறுதல். ‘‘தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ’’ (தேவா. 5 : 1). 5. பிழைத்தல், வாழ்தல். ‘‘உண்ணா வறுங்கடும் புய்தல் வேண்டி’’. (புறம். 181).* M. uy. *உய்த்தல் (பி.வி.) = 1. செலுத்துதல். ‘‘நன்றின்பா லுய்ப்ப தறிவு’’ (குறள். 422). 2. படைக்கலம் விடுத்தல். ‘‘அம்புய்க்கும் போர்’’ (கம்பரா. மாரீச. 186). 3. நடத்துதல். ‘‘உய்த்திடு மிச்சை செய்தி’’ (சி. சி. சி. சி. 1 : 62 நிரம்ப). 4. அனுப்புதல். ‘‘பட்டிமை யோலை யுய்ப்பான்’’ (திருவிளை. மெய்க்கா. 13). 5. கொண்டு போதல். ‘‘கோட்டுவ ருய்த்தன ரோவென’’ (சீவக. 425). 6. ஆட்சி செலுத்துதல். ‘‘ஞாலமுழுது முய்த்திடு மகவு’’ (பாரத. சம்பவ. 10). 7. கொடுத்தல். ‘‘மீளியாளர்க்கு மிகவுய்த்தன்று’’ (பு. வெ. 3 : 9, கொளு). 8. அறிவித்தல். ‘‘அவ்வழி யரசற் குய்த்தார்க்கு’’ (சீவக. 1407). 9. நீக்குதல். ‘‘பல்விளக் கிருளின் துன்னற வுய்க்கும்’’ (திருக்கோ. 175). 10. ஈடேறச் செய்தல். ‘‘உய்த்த வியோம ரூபர்’’ (சதாசிவ. 29). 11. நுகர்தல், பட்டறிதல். ‘‘காதல காத லறியாமை யுய்க்கிற்பின்’’ (குறள். 440).* K., M. uy. *12. மதியைச் செலுத்தி ஆராய்தல்.*

*உய்த்தறிதல், உய்த்துணர்தல், உய்த்தலில் பொருண்மை என்னும் தொடர்களை நோக்குக.*

*உய்தி = 1. நீங்குகை (புறம். 34, உரை). 2. கழுவாய் (பரிகாரம்) ‘‘செய்தி கொன்றார்க் குய்தி யில்லென’’ (புறம். 34). 3. ஈடேற்றம். ‘‘சார்பறுத் துய்தியும்’’ (மணிமே. 25 : 5)*

*உய்வனவு = 1. பிழைப்பு வாழ்வு. 2. செழிப்பு, செழிம்பு. 3. ஈடேற்றம், வீடுபேறு.*

*உய்யக்கொண்டான், உய்யவந்த தேவநாயனார் முதலிய பெயர்களில் உய்தல் ஈடேற்றத்தை உணர்த்தும்.*

*உய்தடி = தளிர்த்து வளரும் வேலிக் கொம்பு.*

*உய்– உயல் = 1. தப்புதல்.*

*‘‘உயலாகா வூழ்த்திறந்த வென்னார்’’* ***(நீதிநெறி. 30)***

*2. வாழ்தல்.*

*3. உளதாதல்.*

*‘‘செல்வ முயற்பால தன்றிக் கெடும்’’* ***(குறள். 437)***

*உயலுதல் = 1. அசைதல்.*

*‘‘உயலுங் கோதை’’* ***(பதிற். 52 : 17)***

*2. செல்லுதல், நடத்தல்.*

*உயல்– துயல். துயலுதல் = அசைதல்.*

*‘‘துயல்கழை நெடுங்கோட்டு’’* ***(சிறுபாண். 265)***

***உய – உய்வு*** *= செல்லுகை.*

*உயவு நெய் = வண்டிச் சக்கரத்திற்கு இடும் ‘மசகு’.*

*உய – உயவை = 1. செல்லும் வழி.*

*2. காடு (பிங்.)*

*3. காட்டாறு (பிங்.)*

*உய் – உயா = அசைவால் அல்லது வழிச்செலவால் உண்டாகும் வருத்தம், வருத்தம்.*

*‘‘உயாவே உயங்கல்’’* ***(தொல். சொல். 369)***

***உய – உயவு.*** *உயவுதல் = வருந்துதல்,*

*‘‘உண்டென வுணரா வுயவு நடுவின்’’* ***(பொருந. 38)***

*உயவு– 1. வருத்தம்.*

*‘‘உயவுநோய் கைம்மிக’’* ***(கலித். 58)***

*2. உயிர் பிழைக்கச் செய்யும் வழி.*

*‘‘உய்யா வருநோய்க் குயவாகும்’’* ***(கலித். 139)***

*உயவு– உயவல் = வருத்தம்.*

*''சிதாஅ ரோம்பி யுடுத்த யுயவிற் பாண''* **(புறம். 69)**

***உய – உயங்கு.*** *உயங்குதல்– வருந்துதல்.*

*''உயங்குவள் கிடந்த கிழத்தியை''* **(தொல். பொருள். 146)**

*2. மெலிதல்.*

*''உயங்குசாய் சிறுபுறம்''* **(அகம். 19)**

*3. துவளுதல்.*

*''உயங்கு செங்கழு நீர்''* **(திருவாத. பு. மண் சுமந்த. 4)**

*உயக்கம் = வருத்தம்.*

*''உண்ணா வுயக்கத்து''* **(மணிமே. 7 : 66)**

*உய்– ஒய். ஒய்யல் = 1. செலுத்துகை (பிங்.)*

*2. கொடுக்கை.*

I. *ஒய்தல்– செ.குன்றிய வினை;*

*1. விட்டொதுங்குதல்.*

*''ஒய்யெனத் தெழித்தாங்கு''* **(சிலப். 15 : 48, உரை)**

*2. தப்புதல்.*

*''ஓடியொளித் தொய்யப் போவான்''* **(பரிபா. 20 : 39)**

II. *செ. குன்றாவினை.*

*1. செலுத்துதல்.*

*''ஒய்யு நீர்வழிக் கரும்பினும்''* **(பதிற். 87 : 4)**

*2. நீக்குதல்.*

*''ஒய்யா வினைப்பய னுண்ணுங் காலை''* **(சிலப். 14 : 33)**

*3. இழுத்தல்.*

*''கன்றுகா லொய்யும் கடுஞ்சுழி நீத்தம்''* **(அகம். 68)**

*4. கொடுத்தல்.*

*''வளராத பார்ப்பிற் கல்கிரை யொய்யும்''* **(நற். 356)**

*ஒய்– ஓய்– ஓசு– ஓசுநன் = மீகாமன் (மரக்கலஞ் செலுத்துவோன்).*

*உய்– இய்– இயவு = 1. செலவு.*

*2. வழி.*

*''இயவிடை வருவோன்''* **(மணிமே. 13 : 16)**

*''இடைநெறிக் கிடந்த இயவுக்கொண் மருங்கின்''*
**(சிலப். 11 : 168)**

*இயவு– இயவுள் = 1. நடத்தும் தலைமை.*

*''இயவுள் யானை''* **(அகம். 29)**

*2. எப்பொருட்கும் இறைவன்.* M. iyavul.

*''பெரியோர் ஏத்தும் பெரும்பெய ரியவுள்''*
**(திருமுருகு. 274)**

*3. தெய்வம் (பிங்.)*

*4. புகழாளன் (திவா.)*

*5. வழி (அகம். 29, உரை)*

*இய– இயவை = 1. வழி (திவா.)*

*2. காடு (அக. நி.)*

*இய – இயல். இயலுதல் (செ. குன்றியவி.) = 1. அசைதல். ''முழவுறழ் தடக்கையி னியல வேந்தி'' (திருமுருகு. 215). 2. நடத்தல். ''அரிவையொடு மென்மெல வியலி'' (ஐங். 175). 3. உலாவுதல். ''பீலி மஞ்ஞையி னியலி'' (பெரும்பாண். 331). 4. நேர்தல். ''இயன்றதென் பொருட்டினா லிவ்விட ருனக்கு'' (கம்பரா. குக. 40). 5. கூடியதாதல். ''இயல்வது கரவேல்'' (ஆத்திசூடி). 6. செய்யப்படுதல். ''சிறியவர்கட் கெற்றா வியன்றதோ நா'' (நாலடி. 353). 7. பொருந்துதல். ''வெயிலியல் வெஞ்சுரம்'' 8. தங்குதல். ''மாவியல்கின்ற வீரமகேந்திர புரத்துக்கு'' (கந்தபு. ஏமகூ. 4).*

*(செ. குன்றாவி.)– 1. அணுகுதல். ''திருந்தடி நூபுர மார்ப்ப வியலி'' (கலித். 83 : 16). 2. ஒத்தல். ''பொன்னியலுந் திருமேனி'' (திருவாச. 49 : 6). 3. உடன்படுதல். ''யாதுநீ கருதிற் றன்னதி யன்றனன்'' (ஞானவா. வைராக். 42).*

*இயல் – 1. செலவு. ''புள்ளியற் கலிமா'' (தொல். பொருள். 194). 2. ஒழுக்கம் (சூடா.) 3. தன்மை. ''ஈண்டுசெலன் மரபிற் றன்னியல் வழாஅது'' (புறம். 25 : 2). 4. தகுதி. ''இயலன்றெனக் கிற்றிலை'' (திருக்கோ. 240). 5. மென்மை (சூடா.) 6. ஒப்பு. ''மின்னியற் சடைமாதவர்'' (திருவிளை. குண்டோ. 2). 7. உழுவலன்பு.*

*''தொல்லியல் வழா அமை'' (கலித். 2). 8. இயல்பு. 9. இயற்றமிழ். 10. நூல். 11. நூற்பகுதி. இயல்– இயற்று (பி.வி.) இயற்றுதல் = 1. நடத்துதல்.*

*''நெஞ்சே யியற்றுவா யெம்மொடு''*

***(திவ். இயற். பெரிய திருவந். 1).***

*2. செய்தல். ''இசையா தெனினும் இயற்றியோ ராற்றால்'' (நாலடி. 194). 3. நூல் செய்தல். 4. படைத்தல். ''கெடுக வுலகியற்றி யான்'' (குறள். 1062). 5. ஈட்டுதல். ''ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க்கு'' (குறள். 760).*

*இயற்று – இயற்றி = 1. முயற்சி (பிங்.) 2. ஆற்றல். ''தனக்கு இயற்றியுள்ள காலத்திலே'' (ஈடு. 9 : 1 : 4). இயல்– இயல்பு = 1. தன்மை. 2. ஒழுக்கம். 3. வரலாறு. 4. நற்குணம். 5. நேர்மை. 6. முறை.*

*இயல்– இயற்கை = 1. இயல்பு. 2. தன்மை 3. வழக்கம். 4. நிலைமை. 5. இலக்கணம். 6. கொள்கை.*

*இய – இயங்கு. இயங்குதல் = 1. அசைதல். 2. போதல் (திவா.). 3. உலாவுதல் (பிங்.).*

*இயங்கு = செல்லுகை.* M. iynnu.

*''இயங்கிடை யறுத்த கங்குல்''* ***(சீவக. 1360)***

*இயங்கு = இயக்கு (பி.வி.)*

*இயக்கு = போக்கு.*

*''நீரியக் கென்ன நிரைசெல னெடுந்தேர்''* ***(மலைபடு. 571)***

*இயக்குதல் = 1. செலுத்துதல். ''தோணி யியக்குவான்'' (நாலடி. 136). 2. தொழிற்படுத்துதல். 3. பழக்குதல். 4. ஒலிப்பித்தல். ''கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி'' (திருமுருகு. 246).*

*இயக்கம் = 1. அசைவு, இயங்குகை. ''நாணகத் தில்லா ரியக்கம்'' (குறள். 1020). 2. கண்ணியக்கக் குறிப்பு. ''கண்ணிணை யியக்கம்'' (மணிமே. 25 : 8) 3. வழி. ''எறிநீ ரடைகரை யியக்கந் தன்னில்'' (சிலப். 10 : 90). 4. முதனடை, வாரம், கூடை, திரள் என்னும் நால்வகை இசைப்பாட்டியக்கம். 5. மெலிவு, சமன், வலிவு என்னும் மூவகை இசைநிலை யியக்கம். 6. மலநீர்க் கழிப்பு. ''ஈரியக்க நடைவழி...... விடுதல்'' (காஞ்சிப்பு. ஒழுக்க. 42).*

*இய்– எய். எய்தல் = அம்புவிடுதல்.*

*''மன்னுங் கணையாலிவ னெய்திட''* ***(பாரத. சம்பவ. 49)***

Te. eyu, K. ey, M., Tu, ey.

*எய் = 1. எய்யப்படும் அம்பு. ''இவளாகத் தெய்யேறுண்டவா றெவன்'' (திருவிளை. பழியஞ். 24). 2. அம்புபோற் கூரிய முள்ளுள்ள பன்றி.*

(Te. edu, K. ey, M.eyyan, Tu. eyi.)

*எய்த்தல் = அறிதல்.*

*''நொந்தவென் றெய்த்தடிச் சிலம்பி ரங்கும்'' **(சீவக. 2683)***

*எய்யாமை = அறியாமை.*

*''எய்யா மையே அறியா மையே'' **(தொல். சொல். 342)***

*எய் - எய்நன்– எயினன் = அம்பெய்யும் வேடன்.*

*''கொடுவி லெயினர் குறும்பில்'' **(பெரும்பாண். 129)***

*எயினன் = எயின்.*

*''எயினிடு கடனிது'' **(சிலப், 12. பாடல் 19, 'அணி மூடி')***

*எயில் = ஏவறை யுள்ள மதில்.*

*எய்– எயிறு = 1. அம்புபோற் கூரிய பல். 2. பல்லரணை. எய்– எய்து. எய்துதல் = 1. நீங்குதல். ''எய்தலில்லாத் திருவின்'' (தஞ்சைவா. 386). 2. அணுகுதல். ''நெடியோ யெய்த வந்தனம்'' (புறம். 10). 3. சேர்தல். ''தூநிறக் கங்கையாள் சூழ லெய்தினான்'' (பாரத. குருகுல. 39). 4. அடைதல். ''ஏமம் வைக லெய்தின்றா லுலகே'' (குறுந். கட. வா.). 5. பொருந்துதல். ''காலத்தோ டெய்த வுணர்ந்து'' (குறள். 516). 6. நிகழ்தல். ''எட்டி குமரன் எய்திய துரைப்போன்'' (மணிமே. 4 : 64). 7. உண்டாதல். ''மாசெனக் கெய்தவும்'' (கம்பரா. சிறப். 6). 8. போதியதாதல். ''சுனைவாய்ச் சிறுநீரை யெய்தாதென் றெண்ணி'' (ஐந். ஐம். 38).*

Te. eyidu, M. eydu.

*எய்– ஏ = 1. அம்பு. ''ஏமுத லாய வெல்லாப் படைக்கலத் தொழிலு முற்றி'' (சீவக. 370). 2.அம்பெய்யுந் தொழில். ''ஏமாண்ட நெடும்புரிசை'' (பு. வெ. 5 : 51). ஏ– ஏவு = அம்பு. ''மாறிலேவு பூட்டி'' (கந்தபு. காமதக. 66).*

*ஏவுதல் = 1. செலுத்துதல். 2. தூண்டிவிடுதல். 3. கட்டளை யிடுதல்.*

*ஏ– ஏகு. ஏகுதல் = 1. செல்லுதல். 2. நடத்தல்.*

Te. egu, M. ehu.

*ஏ– ஏது = ஒரு கருமம் அல்லது முடிபுசெய்யத் தூண்டுவது.*

Skt. hetu.

*உய் = (அய்)* – Ay (Skt), to go

Ay, going

Ayana, going; walking, a road, a path; course, circulation: the sun's road north and south of the equator; the half year; way, progress, manner; place of refuge, a treatise, *etc*.

*உய்– இய்* - i (Skt.), to go, walk; to advance, to arrive at, reach, obtain; to undertake anything; to escape; perfect tense; iyaya, *ஒ. நோ. : இயவு, இயல்,* infinitive, etum, *ஒ. நோ : எ– ஏகு.*

cf. Gk. ei-mi, i-men: L. e-o, i-mus, i-ttr, &c; Lith. ei-mi, 1 go; Slav. i-ae, I go; i-ti, to go; Goth. i-ddja, I went.

# 8

# 'உல்' என்னும் வேர்ச்சொல்

## உல்[1] (எரிதற் கருத்து வேர்)

*உல்– உல. உலத்தல் = காய்தல், வற்றுதல், சாதல், அழிதல், முடிதல், கழிதல்.*

*உல– உலவை = வற்றிய கிளை.*

*''அலங்க லுலவை யேறி யொய்யென''* *(குறுந். 79)*

*உல்– உலர். உலர்தல் = காய்தல், வாடுதல்,* M. ular.

*உலர்– உலறு. உலறுதல் = வற்றுதல், வாடுதல், சினத்தல்.*

*உலறல் = கடுஞ்சினம் (திவா.)*

*உல் – உலை = நெருப்புள்ள அடுப்பு, சமைத்ததற்குக் காய்ச்ச வேண்டிய நீர், கொல்லன் உலை.*

M. ula, K. ole.

*உல்– உள்– உண்– உண்ணம் = வெப்பம்.*

*''உண்ண வண்ணத் தொளிநஞ்ச முண்டு''* ***(தேவா. 510 : 6)***

*உண்ணம்– உஷ்ண*(S.), un (Mhr.)

*உண்– உண. உணத்தல் = காய்தல்.*

*மிளகாய்வற்றலை உணந்த மிளகாய் என்பது வடார்க்காட்டு ஆம்பூர் வட்டத்து வழக்கு.*

*உண– உணத்து. (பி.வி.). 'தலை உணந்துவிட்டது'*

*'தலையை உணத்து' என்பன நெல்லை மாவட்ட வழக்கு.*

*உண– உணங்கு. உணங்குதல் = காய்தல்.*

*''தினைவிளைத்தார் முற்றந் தினையுணங்கும்''*

***(தமிழ்நா. 154)***

M. unannu *(உணங்ங)*, K. onagu.

*உணங்கு– உணக்கு (பி.வி.)*

*‘‘தொடிப்புழுதி கஃசா வுணக்கின்’’* ***(குறள். 1037)***

*உல்– உர்– உரு.*

*உருத்தல் = 1. அழலுதல். ‘‘ஆக முருப்ப நூறி’’ (புறம். 25 ஃ 10). 2. பெருஞ்சினங் கொள்ளுதல். ‘‘ஒருபக லெல்லா முருத்தெழுந்து’’ (கலித். 39 ஃ 23). 3. முதிர்தல். ‘‘பண்டை யூழ்வினை யுருத்தென்’’ (சிலப். 16 ஃ 217). உரு = நெருப்பு.*

K., Tu. uri, to burn; L. uro, to burn; Armenian or, fire; Afghan or, wur; Heb. ur, fire or, light.

*உரு– உருகு. உருகுதல் = வெப்பத்தால் இளகுதல், மனநெகிழ்தல், மெலிதல்.*

M. uruhu.

*உரு – உருக்கு (பி.வி.). உருக்குதல் = இளகச் செய்தல், அழித்தல், வருத்துதல்.*

*உருகு– உருக்கு = எஃகு, உருக்கின பொருள்.*

M. urukku, K. urku, T. ukku.

*உரு – உரும் – உருமி. உருமித்தல் = வெப்பமாதல், புழுங்குதல்.*

*உரும் – உருமம் = வெப்பம், வெப்பமிக்க நண்பகல், கோடைக்காலம்.*

*உரும் – உரும்பு = கொதிப்பு.*

*‘‘உரும்பில் கூற்றத் தன்னநின்’’* ***(பதிற். 26 ஃ 13)***

*உரு – உருப்பு = 1. வெப்பம். ‘‘கன்மிசை யுருப்பிறக் கனைதுளி சிதறென’’ (கலித். 16 ஃ 7). 2. அடுக்களை. 3. சினத்தீ. ‘‘உருப்பற நினைத்தனை யாதலின்’’ (பதிற். 50 ஃ 16). 4. கொடுமை. ‘‘உருப்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகி’’ (பெரும்பாண். 447).*

*உருப்பு– உருப்பம் = 1. வெப்பம். ‘‘அவணுறைந்தன உருப்பமெழ’’ (அரிச். பு. விவா. 104). 2. சினம். உள் – ஒள் – ஒண்மை = 1. விளக்கம். ‘‘ஒப்பின் மாநக ரொண்மை’’ (சீவக. 535) 2. இயற்கையழகு. ‘‘ஒண்மையு நிறையு மோங்கிய வொளியும்’’ (பெருங். உஞ்சைக். 34, 151) 3. நல்லறிவு. ‘‘ஒண்மை யுடையம் யாம்’’ (குறள். 844).*

*ஒண்ணுதல் = ஒள்ளிய நெற்றியுடைய பெண்.*

''ஒண்ணுதற் கோஒ உடைந்ததே'' **(குறள். 1081)**

ஒள்– ஒள்ளி = வெள்ளி (சுக்கிரன்), செம்பொன்.

ஒள்ளிமை = அறிவு விளக்கம்.

ஒள்ளியன் = அறிவுடையோன்.

''ஒளியார்முன் ஒள்ளிய ராதல்'' **(குறள். 714)**

ஒள்ளியோன் = வெள்ளி (சுக்கிரன்)

ஒள்ளொலி = மிக்கவொளி.

ஒள்– ஒப்பு– ஒட்பம் = அறிவு.

''கல்லாதா னொட்பம் கழியநன் றாயினும்'' **(குறள். 454)**

ஒள்– ஒளி = வெளிச்சம், மின்னல், கதிரவன், திங்கள், உடு, நெருப்பு, வெயில், விளக்கு, கண், அறிவு, புகழ் பெருமை, கடவுட்டன்மை.

K. ola, M. oli.

ஒளியவன் = கதிரவன்.

ஒளி– ஒளிர்– ஒளிறு.

ஒளிர்தல் = விளங்குதல்.

''உள்ளத் தொளிர்கின்ற வொளியே'' **(திருவாச. 37, 5)**

ஒளிறுதல் = விளங்குதல்.

''ஒளிறுவாள் மறவரும்'' **(மணிமே. 1 : 68)**

உல்– எல் = 1. நெருப்பு. 2. ஒளி. 3. கதிரவன். ''எற்படக் கண்போல் மலர்ந்த'' (திருமுருகு. 74). cf. Gk. helios, sun. 4. வெயில் (பிங்.). 5. பகல். ''எல்லடிப் படுத்த கல்லாக் காட்சி'' (புறம். 170). 6. நாள் (பிங்.).

எல்– எல்லவன் = 1. கதிரவன். ''எல்லவன் வீழு முன்னம்'' (பாரத. பதினெட். 119). 2. திங்கள் (அக. நி.). எல்– எல்லார் = தேவர். ''பனிவானத் தெல்லார் கண்ணும்'' (சீவக. 364). எல்– எல்லோன் = கதிரவன் (பிங்.)

எல் – எல்லி = 1. கதிரவன் (பிங்.) 2. பகல். ''இரவோ டெல்லியு மேத்துவார்'' (தேவா. 344 : 8).

எல்லினான் = கதிரவன்.

''புயங்கமுண் டுமிழ்ந்த வெல்லினான்'' **(கந்தபு. அக்கினி. 223)**

*எல்– எர்– எரி.*

*எரிதல் = 1. சொலித்தல் (சுவாலித்தல்). ''எரியுந் தீயொடு'' (திவ். திருவாய். 3 : 6 : 5). 2. விளங்குதல் (பிரகாசித்தல்). ''எரியுஞ் செம்பொன் மணிமுடி'' (சூளா. மந்தி. 6). 3. எரிச்சலுண்டாதல். 4. பொறாமைப்படுதல். 5. மனம் வருந்துதல். 6. சினத்தல். 7. முதிர்தல். ''எரிகின்ற மூப்பி னாலும்'' (கம்பரா. மருத்து. 17).*

T. eriyu, K. uri, M.eri, Tu. eri.

*எரி = நெருப்பு, ஒளி, அளறு (நரகம்)*

*எரி = நெருப்புநிறம், சிவப்பு.*

*எரிநகை = வெட்சிமலர்.*

*''எரிநகை யிடையிடு பிழைத்த நறுந்தார்''* ***(பரிபா. 13 : 59)***

*எரிப்பூ = செம்மலர்.*

*''எரிப்பூம் பழனம்''* ***(புறம். 249)***

*எரிமலர் = 1. முருக்கமலர். ''எரிமலர்ப் பவளச் செவ்வாய்'' (சீவக. 2741). 2. செந்தாமரை. ''செல்வ னெரிமலர்ச் சேவடியை'' (சீவக. 2741).*

*எர்– எரு. எருமணம் = செங்குவளை (பிங்.). எரு – எருவை = 1. குருதி (திவா.). 2. செம்பு. ''எருவை யுருக்கினா லன்ன குருதி'' (கம்பரா. கும்பக. 248). 3. உடல் சிவந்திருக்கும் பருந்து. ''விரும்பா டெருவை பசுந்தடி தடுப்ப'' (புறம். 64 : 4).*

*நெருப்புச்சிவந்திருப்பதால் நெருப்புக் கருத்தில் சிவப்புக் கருத்துத் தோன்றுமென்பதை, அழல்வண்ணன், தீவண்ணன் செந்தீவண்ணன் முதலிய சிவன் பெயர்களால் உணர்க.*

*''அழல்வண்ணன்''* ***(தேவா. 1055 : 5)***

*''தீவண்ணர் திறமொருகாற் பேசா ராகில்''* ***(தேவா. 1230 : 6)***

*எல்– என்று = கதிரவன்.*

*''என்றைத் தொடவிண்ணி லெழுந்துறலால்''*
***(கந்தபு. விந்தகிரி. 4)***

*என்று – என்றூழ் = 1. கதிரவன். ''என்றூழ் மாமலை மறையும்'' (குறுந். 215) 2. வெயில். ''என்றூழ் நின்ற குன்றுகெழு நன்னாட்டு'' (சிலப். 14 : 121). 3. கோடைக்காலம். ''என்றூழ் வாடு வறல்போல'' (புறம். 75).*

*எருப்பு (தெ.) = சிவப்பு.*

*எரங்காடு = செந்நிலம்.*

*இல் – இலந்தை = செம்பழமுள்ள முட்செடி. இலந்தை இரந்தை (இலந்தை)*

*''இரந்தையின் கனி''* **(சேதுபு. காசிப. 46)**

*இல் – இர் – இரத்தி = இலந்தை.*

*''இரத்தி நீடிய வகன்றலை மன்றத்து''* **(புறம். 34 : 62)**

*இர் – இராகி = சிவந்த கேழ்வரகு,*

M., T., K., Tu. ragi.

*உல் – அல் – அலத்தம் = 1. செம்பருத்தி. 2. செம்பஞ்சுக் குழம்பு.*

*அலத்தம் – அலத்தகம் = செம்பஞ்சுக் குழம்பு.*

*அலத்தம் – அலத்தை = செம்பஞ்சு.*

*அல் – அலந்தல் = செங்கத்ரி.*

*அலந்தல் – அலந்தலி = செங்கத்தரி*

*அலத்தம், அலத்தகம் என்னும் தென்சொற்களை ஆரியப் படுத்துவான் வேண்டி முறையே, அ – லக்த, அ – லக்தக என உடலை இரு துண்டாய் வெட்டுவதுபோல், இரு கூறாய்ச் சிதைத்துப் பொருள் கூறுவர் வடமொழியாளர்.*

*அல் – அர் – அரக்கு = 1. சிவப்பு.* Skt. rakta. *2. சாதிலிங்கம். 3. செம்மெழுகு.* Skt. raksha. *அரக்காம்பல் = செவ்வாம்பல் (பிங்.)*

*அரக்குக் காந்தம் = செங்காந்தக் கல்.*

*அரக்குச் சாயம் = செஞ்சாயம்.*

*அரக்கு நீர் = 1. அரத்தம். ''புண்ணிடை யரக்குநீர் பொழிய'' (சூத. முத்தி. 7, 25). 2. சாதிலிங்கம் கலந்த நீர். ''அரக்குநீர்ச் சிவிறி யேந்தி'' (சீவக. 2657). 3. சிவந்த ஆலத்தி நீர். ''அரக்குநீர் சுழற்றி'' (விநாயகபு. 80 : 277).*

*அரக்குமஞ்சள் = செம்மஞ்சள்.*

*அரக்கு (செம்மெழுகு)* – M. arakku. K., Tu. aragu. Hindi, lakh; Skt, laksha, raksha; E. lac.

*அரக்கு – அரக்கம் = 1. அரத்தம். 2. அரக்கு. (பதிற். 30 : 27) அர் – அருணம் = 1. சிவப்பு. 2. சிந்தூரம். 3. செம்மறியாடு.*

*அருணமலை = நெருப்புப் பிழம்பாய் நின்றதாகக் கூறப்பெறும் செம்மலை.*

*அருணமலை – அண்ணாமலை (திருவண்ணாமலை).*

*அருணம் – அருணன் = புறப்படும்போது சிவந்து தோன்றும் கதிரவன்.*

*அர் – அரத்தம் = 1. சிவப்பு. ''அரத்த வேணியர்'' (கந்தபு. முதனா. 82). 2. குருதி. ''அரத்தமுன் டொளிரும் வாளவுணர்'' (நைடத. நளன்தூ. 14). 3. பவழம் (திவா.) 4. செம்பருத்தி. 5. செம்பரத்தை. 6. செங்கழுநீர். 7. செவ்வாடை வகை. 8. அரக்கு (திவா.)*

*அரத்தம் – அரத்தன் = செவ்வாய்க்கோள் (பிங்.)*

*அரத்தம் – அரத்தகம் = செம்பஞ்சுக் குழம்பு.*

*''அரத்தக மருளச் செய்த சீறடி''* ***(சீவக. 2459)***

*இனி, அலத்தகம் – அரத்தகம் என்றுமாம்.*

*அரத்தம் (குருதி)* – Skt. rakta.

*அரத்தம் (சிவப்பு)* – OE, read, OS. rod, E. red, OHG. rot, ON. rauthr, Coth. rauths, L. rufus, rubeus.

*ஓவிய வேலைப்பாடமைந்த செந்நிறப் பட்டாடை பண்டை நாளில் அரத்தப் பூம்பட்டாடை யெனப்பட்டது.*

*''அரத்தப் பூம்பட் டரைமிசை யுடீஇ''* ***(சிலப். 14 : 86)***

*வடமொழியிலுள்ள சொற்களெல்லாம் வடசொல்லேயென்று இடைக்காலத்தில் ஒரு தவறான கருத்து மக்கள் மனத்தில் வேரூன்றி யிருந்ததினால், அரத்தம் என்னும் தென்சொல்லின் வடசொல் வடிவான ரக்த என்பதையே மூலமாகக் கொண்டு, அதைத் தமிழ் முறைக்கேற்ப இகரம் முன்னிட்டு இரத்தம் எனச் சொல்லவும் எழுதவும் தலைப்பட்டனர். இது, அரங்கன் என்னும் தென்சொல்லை ரங்கன் என்னும் வடசொல் வடிவின் திரிபாகக் கொண்டு, இரங்கன் என்று தமிழில் தவறாக எழுதுவ தொத்ததே. திவாகரம் (8 ஆம் நூற்றாண்டு), பிங்கலம் (10ஆம் நூற்றாண்டு?), சூடாமணி (16ஆம் நூற்றாண்டு) முதலிய சொற்றொகுதிகள் (நிகண்டுகள்) இடைக் காலத்தனவாதலின், அவற்றுள்ளும் இரத்தம் என்னும் வடிவு இடம்பெற்றுள்ளது. இது பிற்கால இலக்கியங்கள் அவ் வடிவை யாள இடந்தந்துவிட்டது. ஆயினும், இது மொழிநூலறிவாராய்ச்சி மிக்க காலமாதலாலும், இலக்கிய வழுவைக் களைதற்கு ஒரு கால வரம்பின்மையானும், இனி, தனிச்சொல்லாயினும்*

தொடர்ச் சொல்லாயினும் இரத்தம் என்னும் வடிவை அரத்தம் என்றே சொல்லாகக் கொண்டு இருவகை வழக்கிலும் பெரும்பான்மையாக வரும் தொடர்ச்சொற்கள் அரத்தக்கட்டி, அரத்தக்கட்டு, அரத்தக் கண்ணன், அரத்தக் கலப்பு, அரத்தக் கவிச்சு, அரத்தக் கழிச்சல், அரத்தக் கறை, அரத்தக் கனப்பு, அரத்தக் காட்டேறி, அரத்தக் காணிக்கை, அரத்தக் குழல், அரத்தக் குழாய், அரத்தக் குறைச்சல், அரத்தக் கொதிப்பு, அரத்தக் கொழுப்பு, அரத்தக் கோமாரி, அரத்தக் குமுதம், அரத்தக் குன்மம், அரத்தச் சிவப்பு, அரத்தச் சுரப்பு, அரத்தச் சுருட்டை, அரத்தச் சூறை, அரத்தப் பலி, அரத்தப் பழி, அரத்தப் பிண்டம், அரத்தப் பித்தம், அரத்தப் புடையன், அரத்தப் பெருக்கு, அரத்தப் போளம், அரத்த மடக்கி, அரத்த மண்டலம், அரத்த மண்டலி, அரத்த மாடன், அரத்த மானியம், அரத்த முடி, அரத்த மூத்திரம், அரத்த மூலம், அரத்த வடி, அரத்த வலிப்பு, அரத்த வழலை, அரத்த வள்ளி, அரத்த விந்து, அரத்த விரியன், அரத்த வுறவு, அரத்த வெட்டை, அரத்த வெறி, அரத்த வேர்வை, அரத்த வோட்டம் என்பன.

அர்– அரளி = செம்பருத்தி.

நெருப்புச் சிவந்த பொருள்களுள் ஒன்று. அதனால் நெருப்பு நிறம் என்பது செந்நிறத்தைக் குறிக்கும். செந்நிறமான சிவனை அழல் வண்ணன் என்றும், தீவண்ணன் என்றும், தேவாரம் குறித்தல் காண்க.

''அழல் வண்ணன்.....'' **(தேவா. 1055 : 5)**

''தீவண்ணர் திறமொருகாற் பேசா ராகில்'' **(தேவா. 1230 : 6)**

சிவந்த பொருட் பெயர்களே பண்பியாகு பெயராகச் செந்நிறத்தை உணர்த்துவதுமுண்டு.

எ - டு : பவழவாய் = சிவந்த உதடு.

குருதிக் காந்தள் = செங்காந்தள்.

இம் முறையிலேயே அரக்கு, அரத்தம் என்னும் பெயர்களும் செந்நிறத்தை யுணர்த்தும்.

எல் என்னும் சொற்போன்றே, அதற்கு மூலமான உல் என்னும் வேர்ச்சொல்லும் நெருப்பை யுணர்த்து மென்பது முந்தின கட்டுரையிற் கூறப்பட்டது.

அலத்தம், அரத்தம் என்னும் சொற்கட்கு மூலமான அல், அர் என்பனவும்; இலந்தை, இலத்தி என்னும் சொற்கட்கு மூலமான இல், இர் என்பனவும்; எல்லி, எரி, என்னும் சொற்கட்கு மூலமான எல், எர் என்பனவும்; ஒன்றோடொன்று தொடர்புடையனவாய், உல் என்னும் அடி

*வேரினின்று தோன்றி, நெருப்பையோ, நெருப்பின் நிறத் தையோ, அந் நிறமுள்ள பொருள்களையோ, உணர்த்து மென்பதும்; அரத்தம், அரக்கு, அலத்தகம் என்னும் சொற்கள் இலந்தை, இரத்தி என்பன போன்றே தூய தென்சொற்கள் என்பதும்; இதுகாறும் கூறியவற்றால் தெற்றெனத் தெரிந்து கொள்க.*

*அரக்கு என்பது சிவப்பு நிறத்தையும், அரக்கம் என்பது அரக்கு, அரத்தம் முதலிய செந்நிறப் பொருள்களையும் குறிப்பதனாலும்; அமெரிக்கப் பழங்குடி மக்களுள் ஒருசாரார் செவ்விந்தியர் எனப்படுவதாலும்; அரக்கர் என்னும் வகுப்பார் பழங்காலத்தினராகத் தொல்கதைகள் கூறுவதனாலும், அரக்கன் என்னும் பெயர் செந்நிறம் பற்றிய அரக்கு என்னுஞ் சொல்லினின்று திரிந்திருப்பதாக அறிஞர் சிலர் கருதினர். அஃது அரக்கு என்னும் வினைச் சொல்லினின்று திரிந்ததாகும். அரக்குதல் = வருத்துதல், அழித்தல். ''எல்லரக்கும் அயில்நுதிவே லிராவணனும்'' (கம்பரா. ஊர்தேடு. 230). அரக்குகின்றவன் அரக்கன்; அரட்டுகின்றவன் அரட்டன் என்பது போல். அரக்கரெல்லாம் மக்களை வருத்தினவராகவே கூறப்படுவர். அரக்கன் என்பது மீட்டல் (இரட்சித்தல்) என்று பொருள்படும். ரக்ஷஸ் என்னும் வடசொல்லினின்று திரிந்ததன்று.*

## 9

# ‘உல்’ என்னும் வேர்ச்சொல்

## உல்$^2$ (வளைதற் கருத்து வேர்)

*உல் – உலம் = 1. உருண்டு திரண்ட கல். ‘‘உலஞ்செய்த.... தோளான்’’ (சீவக. 2915). 2. திரட்சி. ‘‘உலங்கொள் சங்கத் தார்கலி’’ (தேவா. 112 : 8).*

*உலம் – உலவு. உலவுதல் = 1. சுற்றுதல். 2. திரிதல். 3. உலாவுதல். ‘‘ஒருங்குதிரை யுலவுசடை’’ (திருவாச. 38 : 1).*

*உலவு – உரவு. உரவுதல் = உலாவுதல். ‘‘உரவுநீ ரழுவத் தோடு கலம்’’ (பெரும்பாண். 350).*

*உல் – உல – உலக்கை = 1. உரலிற் கூலம் முதலியன குற்றும் உருண்டு நீண்ட கருவி. ‘‘மிளகெறி யுலக்கையின்’’ (பதிற். 41). 2. ஒரு படைக்கலம். ‘‘உலக்கை சூலம் வேல்’’ (கந்தபு. சதமுகன். 15). 3. உருண்ட வெருகன் கிழங்கு.*

**ம.** *உலக்க.* **க.** *ஒலக்கெ.*

*உலண்டு = உருண்டு நீண்ட கோற்புழு.*

*உல – உலவை = 1. சுற்றி வீசும் காற்று (திவா.). 2. ஊதை (வாத நோய். ‘‘வழுத்துலவைக் குலமுழுதும்’’ (தைலவ. தைல. 88). உலவையான் = காற்றுத் தெய்வம். (கந்தபு. அரசு. 7).*

*உலவு – உலகு = 1. உருண்ட ஞாலம். 2. உருண்ட அல்லது சுற்றிவரும் கோள். ம.உலகு.*

*உலகு – உலகம் = 1. பெரிய உலகு. 2. ஞாலம் (பிங்.). 3. உலகப் பொது (திவ். திருவாய். 6 : 10 : 1). 4. நிலப்பகுதி. ‘‘மாயோன் மேய காடுறை யுலகமும்’’ (தொல். அகத். 5). 5. மக்கட்டொகுதி. 6. நன்மக்கள். ‘‘உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர்’’ (திருமுருகு. 124). 7. உயிரினங்கள். ‘‘உலக முவப்ப வலனேர்பு திரிதரு’’ (திருமுருகு. 1). 8. உயர்*

*குணம் (பிங்.). 9. ஒழுக்கநடை. ''ஒழுக்க நடையே யுலகம தாகும்'' (மாறன. 320).*

*உலகம் – வ. லோக, இ.லோக்.*

*'லோக' என்னுஞ் சொற்கு வடவர் கூறும் பொருட் கரணியம் பார்க்கப்படுவது என்பது இதன் பொருந்தாமையை அறிஞர் காண்க.*

*''காலம் உலகம் உயிரே உடம்பே'' என்னும் தொல்காப்பிய நூற்பா (541) 'காலம்' என்னும் சொல்லைத் தென்சொல்லாகவே கொள்ளுதலையும் நோக்குக.*

*உலம் வருதல் = 1. சுழலுதல். 2. நெஞ்சு உழலுதல். ''உயிர்க்கும் உசாஅம் உலம்வரும்'' (கலித். 145 : 4).*

*உலம்வா – உலமா. உலமருதல் = 1. சுழலுதல். 2. உழலுதல். ''புலம்பியா முலமர'' (கலித். 83 : 2).*

*உலம்வரல் – உலமரல் = 1. உழலுதல். 2. துன்பம் (சூடா.).*

*உலம் வருதல் – அலம் வருதல். உலமருதல் – அலமருதல். உலமரல் – அலமரல்.*

*உல் – உலா = 1. சுற்றிவரல். 2. அரசன் நகர்வலம் சுற்றிவரும் பவனி. ''போந்தானுலா'' (சங்கர. உலா.). 3. அரசனுலாப் பற்றிய பனுவல். ''கலிவெண்பா வுலாவாம்'' (வெண்பாப். செய். 27). உலாமடல் = ஒரு பனுவல் (இலக். வி. 857).*

*உலா – உலாம் = ஓர் உவமவுருபு.*

''வேயுலாந் தோளினார்'' **(சீவக. 1581)**

*உலா – உலாவு. உலாவுதல் = 1. சுற்றி வருதல். ''நிலவு லாவிய நீர்மலி வேணியன்'' (பெரியபு. பாயி. 1). 2. பவனி வருதல். 3. சூழ்தல். ''தூசுலாய்க் கிடந்த'' (சீவக. 550). 4. பரவுதல். ''உயிரென உலாய தன்றே'' (கம்பரா. ஆற்றுப். 20). 5. இயங்குதல். ''வந்துலாய்த் துயர்செய்யும் வாடை'' (பு. வெ. 8 : 16, கொளு).*

*ம. உலாவு.*

*உலா – உலாத்து. உலாத்துதல் = (செ. குன்றியவி.) உலாவுதல். (செ. குன்றாவி.). 1. உலாவச் செய்தல். 2. பரவச் செய்தல். ம. உலாத்து.*

*உலாத்துக் கட்டை = கதவு நின்றாடுஞ் சுழியாணி. உலாத்து – உலாத்தி. கொண்டை யுலாத்தி = ஒரு குருவி. உலா – உலாஞ்சு. உலாஞ்சுதல் = 1. தலை சுற்றுதல். 2. அசைந்தாடுதல். கப்பல் உலாஞ்சுகிறது (உ.வ.).*

*உல் – உலு – உலுக்கு. உலுக்குதல் = 1. அசைத்தல். 2. அசைத்து உதிர்த்தல். தெ., க. உலுக்கு.*

*அசைத்தல் என்பது, ஒன்றை வலமும் இடமும் அல்லது முன்னும் பின்னும் பன்முறை விரைந்து சாய்த்தல். சாய்தல் வளைதல் வகைகளுள் ஒன்று.*

*உலு – உலுத்து. உலுத்துதல் = அசைத்துதிர்த்தல்.*

*உலு – உலுப்பு. உலுப்புதல் = அசைத்துதிர்த்தல்.*

*உல் – உள் – உழல். உழலுதல் = 1. சுழலுதல் (பிங்.). 2. காற்றியங்குதல். ''சிறுகாற் றுழலும்'' (கல்லா. கண.). 3. அலைதல். ''ஆட்பார்த் துழலும் அருளில்கூற் றுண்மையால்'' (நாலடி. 20). 4. நிலைகெடுதல். 5. துன்புறுதல்.*

*உழல் – உழலை = 1. சுழன்று வரும் செக்குலக்கை. 2. உருண்டு நீண்ட குறுக்குமரம். ''உழலை மரத்தைப்போற் றொட்டன'' (கலித். 106). 3. கணைய மரம். ''வேழம்..... உழலையும் பாய்ந்திறுத்து'' (பு. வெ. 12 : 8).*

*உழலைத்தடி (உழலைமரம்) = மாட்டின் கழுத்திற் கட்டும் கழுந்து.*

*உழல் – உழற்சி = 1. சுழற்சி. 2. அலைகை. 3. வருத்தம்.*

*உழல் – உழற்று. உழற்றுதல் = 1. சுழற்றுதல். 2. அலையச் செய்தல். ''என்னை யவமே யுழற்றி'' (திருக்கோ. 100, உரை).*

*உழல் – உழறு. உழறுதல் = அலைதல். ''உழறலர் ஞானச் சுடர் விளக்காய்'' (திவ். இயற். திருவிருத். 58). உழல் – உழன்றி = மாட்டின் கழுத்திற் கட்டும் கழுந்து.*

*உழிதல் = 1. அலைதல். ''உழிதலை யொழிந்துள ருமையுந் தாமுமே'' (தேவா. 553 : 10). 2. வளைதல்.*

*உழி – உழிஞை = பகையரண் முற்றும் (சூழும்) மறவர் சூடும் கொற்றான் மாலை. ''உழிஞை முடிபுனைந்து'' (பு.வெ. 6 : 1). 2. உழிஞைத்திணை (தொல். பொருள் 64).*

*ம. உழிஞ்ஞ.*

*உழிதருதல் = 1. திரிதல். உன்மத்தம் மேற்கொண் டுழிதருமே'' 'திருவாச. 5 : 7). 2. இடமாறி யலைதல். ''மண்மேல்..... உழிதரக் கண்டோம்'' (திவ். திருவாய். 5 : 2 : 1).*

உல் – உர் – உருள். உருளுதல் = 1. புரளுதல். ''திண்வரை யுருள்கிலேன்'' (திருவாச. 5 : 39). 2. உருண்டு திரளுதல். 3. புரண்டழிதல். ''உலகெலா முருளு மின்றென்'' (சீவக. 2452).

**ம., க.** உருள்., **தெ.** உரலு.

உருள் = 1. தேர்ச்சக்கரம். ''உருள்பூந் தண்டார்'' (திருமுருகு. 11). 2. வண்டி (திவா.). 3. சகடமீன் (சூடா.).

**ம., க.** உருள்.

உருள் – உருளி = 1. வட்டம். ''உருளி மாமதி'' (சீவக. 532). 2. சக்கரம். ''வல்வா யுருளி கதுமென மண்ட'' (பதிற். 27 : 11). க. உருளி.

உருள்– உருளை = 1. சக்கரம். ''சகடிரு சக்கர வுருளைக ளுய்க்கவே'' (பாரத. வேத்திர. 50). 2. உருண்ட கிழங்குவகை. 3. கமலை யேற்றத்தில் வாற்கயிறு படும் உருளை.

ம. உருள.

உருளை– உருடை – ரோதை – L. rota, wheel.

ஒ. நோ. புருள்– புருளை– புருடை – பிருடை.

உருடை = வண்டி. ''உருடையூடு திரியும்'' (சேதுபு. முத்தீர். 42).

உருள்– உருண்டை = 1. உருண்டையான பொருள். 2. கவளம். 3. திரட்சி.

உருண்டை– உண்டை. **தெ.** உண்ட. ''அண்டப் பகுதியி னுண்டைப் பிறக்கம்'' (திருவாச. திருவண்.)

உருள்– உருட்டு = 1. உருட்டுகை. 2. சக்கரம். ''உருட்டோட வோடிய தேர்'' (குலோத். கோ. 212). 3. திரட்சி. 4. வெருட்டு. 5. புரளும் குரலிசை. 6. மலைச்சரிவு. 7. ஏமாற்றுகை. உருட்டுப் புரட்டு. பொய்யும் புரட்டும் உருட்டும் திருட்டும்.

உலம் – அலம் = 1. கவைக்கால் அல்லது கொடுக்குள்ள (தேள் திவா.). 2. நளியோரை (விருச்சிகராசி).

அலவன் = கவைக்கால் நண்டு. ''ஆடு மலவனை யன்ன மருள் செய'' (சீவக. 516)

அலம்[2] = சுழற்சி, துன்பம். ''அலமகல் முத்தி யுண்டாம்''

(சூத. எக்கிய. பூ. 2 : 8). அலக்கண் = துன்பம் (பிங்.).

அலம் – அலவு. அலவுதல் = வருந்துதல். ''அன்பனைக் காணா தலவுமென் னெஞ்சன்றே'' (சிலப். 18 : 17).

அலவு – அலகு = 1. வளைந்த குறடு. 2. உயிரிகளின் கொடிறு. ''அரணை அலகு திறக்காது.'' (பழமொழி). 3. தாடை. 4. வளைந்த நெற்கதிர். ''அலகுடை நீழ லவர்'' (குறள். 1034).

அலகு – அலக்கு = துறட்டுக்கோல்.

உல்– அல்– அல்லல் = துன்பம். ''அழிவின்கண் அல்ல லுழப்பதாம் நட்பு'' (குறள். 787).

ம. அல்லல், க. அல்ல, தெ. அல்லரி.

அல்– அல்லா. அல்லாத்தல் = துன்பமுறுதல்.

''வயவுநோய் நலிதலி னல்லாந்தார்'' **(கலித். 29)**

அல்லாடுதல் = 1. அலைதல். 2. தொந்தரவு படுதல்.

தெ., க. அல்லாடு.

அல்– அல்லை = துன்பம். அல்லைதொல்லை = மிக்க துன்பம்.

அலத்தல் = 1. துன்பமுறுதல். ''அலந்தாரை யல்லனோய் செய்தற்றால்'' (குறள். 1303). 2. வறுமைப்படுதல். ''அலந்தவர்க் குதவுதல்'' (கலித். 133).

அலந்தோன் = துன்பமடைந்தவன் (திருமுருகு. 271). கறிக்கு அலந்தவன் என்பது உலக வழக்கு.

அலந்தை = துன்பம். அலந்தை – அரந்தை = துன்பம். அலந்தலை = 1. துன்பம் (திவா.). 2. கலக்கம். ''இவள் பேச்சும் அலந்தலையாய்'' (திவ். பெரியாழ். 3 : 7 : 1).

அலங்குதல் = 1. அசைதல். ''அலங்குளைப் புரவி'' (புறநா. 2). 2. மனந் தத்தளித்தல். 3. இரங்குதல் (பிங்.).

ம. அலங்ங. **து.** அலங்கு. **தெ., க.** அல்கு.

அலங்கல் = அசையும் பூமாலை. அலக்குதல் = அசைவித்தல். ''சங்கலக்குந் தடங்கடல்வாய்'' (தேவா. 739 : 3).

அலக்கழிதல் = வருந்துதல். ''நானலக் கழிந்தேன்'' (தேவா. 507 : 3)

அலக்கழித்தல் = 1. அலைத்து வருத்துதல். (பணவிடு. கண்ணி. 177). 2. கெடுத்தல். ''தக்கன் பெருவேள்வியங் கலக்கழித்து'' (தேவா. 236 : 1).

*அலசுதல் = (செ. குன்றியவி.) 1. அலைதல். ''இறுநுசுப் பலச வெறுநிலஞ் சேர்ந்தாங்கு'' (மணிமே. 9 ፡ 7). 2. வருந்துதல். 'திருஷ்டம் பலச நோற்கின்றான்'' (கம்பரா. சூர்ப்ப. 18). 3. சோர்தல்.*

*ம. அலசுக, தெ., க. அலச்சு.*

*(செ. குன்றாவி.) 1. ஆடையை நீரிற் கசக்கிக் கழுவுதல். 2. வாயடங்குமாறு திறம்படக் கடிந்து பேசுதல். அவனை நன்றாய் அலசிவிட்டான் (உ.வ.).*

*து. அலசு, தெ., க. அலச்சு.*

*அலசடி = துன்பம்.*

*அலம்புதல் = (செ.குன்றியவி.) அலைதல். ''வண்டலம்புஞ் சோலை'' (திவ். திருவாய். 2፡8፡11). (செ. குன்றா வி.) 1. அலைத்தல் (திவ். பெரியாழ். 4 ፡ 2 ፡ 1). 2. கழுவுதல். ''வடிம்பலம்ப நின்றான்'' (புறநா. 9, உரை).*

*அலப்புதல் = 1. வாயசைத்தல். 2. வீண்பேச்சுப் பேசுதல். 3 பிதற்றுதல். ''அலப்பிய தக்கன் பெருவேள்வி'' (தேவா. 236 ፡ 1).*

*அலுங்குதல் = சிறிது அசைதல். அலுக்குதல் = சிறிது அசைத்தல்.*

*அலுங்கு – அனுங்கு. அனுங்குதல் = 1. அசைதல். 2. வருந்துதல். ''பஞ்சனுங் கடியினார்'' (சூளா. நகர. 25).*

*அலுக்கு– அனுக்கு. அனுக்குதல் = 1. அசைத்தல். 2. வருத்துதல்.*

*அல் – அலு. அலுத்தல் = 1. அசைதல். 2. களைத்தல். 3. சோர்தல். அலுத்துப் புலுத்து = மிகக் களைத்து.*

**க.** *அல,* **தெ.** *அலயு.*

*அலுப்பு = தளர்வு, களைப்பு.*

**ம., தெ., க.** *அலுப்பு.*

*அலு – அலுவல் = 1. உடல் தளரச் செய்யும் வேலை. 2. வேலை. ''சமய மிதுவென் றலுவ லிட்டு'' (மீனாட்சி. பிள்ளைத். 70.)*

*அல்– அலை. அலைதல் = 1. அசைதல். ''அலைந்தன நாகம்'' (கந்தபு. முதனாட். 50). 2. திரிதல். ''புசிப்புக் கலைந்திடல்'' (தாயு. சித்தர். 5). 3. வருந்துதல்.*

**ம., தெ.,** *அல.,* **க., துளு.** *அலெ.*

அலைத்தல் = 1. அசைத்தல். ''காலலைத் தலைய வீழ்ந்து'' (திருவிளை. பழியஞ். 8). 2. அலையச் செய்தல். 3. வருத்துதல். ''பெருமுலை யலைக்குங் காதின்'' (திருமுருகு. 50). 4. அடித்தல். (கலித். 128). ஆறலைத்தல் = அடித்து வழிப்பறித்தல். ''வன்கண்ண ராட்டிவிட் டாறலைக்கு மத்தம்'' (ஐந். ஐம். 34).

அலைச்சல் = 1. திரிதல். 2. நீள்வழிச் சென்ற வருத்தம்.

அலை = அலைந்து செல்லும் நீர்த்திரை.

ம., தெ., அல. க., துளு. அலெ.

அல்– அலை– அசை.

அசைதலாவது, இடமும் வலமும் அல்லது மேலுங் கீழும் சாய்தல். சாய்தல் வளைதல் வகைகளுள் ஒன்று; வளைதலின் தொடக்கம் எனினுமாம். பொழுது சாய்தல் என்னும் வழக்கை நோக்குக.

அசைதல் = 1. நுடங்குதல். ''அசையியற் குண்டு'' (குறள். 1098). 2. ஆடுதல் (பிங்.). 3. இயங்குதல். ''அவனன்றி யோரணுவு மசையாது'' (தாயு. எங்கு. 1). 4. மெல்லச் செல்லுதல். 5. விட்டுப் போதல். ''அசைந்திடா தொழிகவென'' (ஞானவா. சிகித். 70). 6. நீங்குதல். ''அசையாது நிற்கும் பழி'' (ஆசாரக். 74). 7. ஓய்தல். ''நடைமெலிந் தசைஇய நன்மென் சீறடி'' (சிறுபாண். 32). 8. கலங்குதல். ''அந்தக னசைந்து நின்றான்'' (கந்தபு. சிங்க. 310). 9. இளைப்பாறுதல். ''புன்மேய்ந் தசைஇ'' (பு.வெ. 1 : 11). 10. சோம்புதல். ''இலமென் றசைஇ யிருப்பாரை'' (குறள். 1040). 11. தங்குதல். ''கல்லென் சீறூர். எல்லியி னசைஇ'' (அகம். 63). 12. கிடத்தல். ''குறங்கின்மிசை யசைஇய தொருகை'' (திருமுருகு. 109).

தெ. அசியாடு.

அசைத்தல் = 1. ஆட்டுதல். ''நந்திபிரான் திருப்பிரம்பை யசைத்தருள'' (காஞ்சிப்பு. மணிகண். 34). 2. அசைத்துக் கட்டுதல். ''புலித்தோலை யரைக்கசைத்து'' (தேவா. 322 : 1). 3. அலகசைத்துத் தின்னுதல். 4. நாவசைத்துச் சொல்லுதல். ''சேடனாயிர நாவினாலு மசைக்கினும்'' (குற்றா. தல. திருக்குற்றா.70). 5. தட்டுதல். ''கதவஞ் சேர்த் தசைத்தகை'' (கலித். 68). 6. வருத்துதல். ''உயங்குநாய் நாவின் நல்லெழி லசைஇ'' (சிறுபாண். 17).

அசை = 1. அசைச்சொல். 2. செய்யுளுறுப்பு வகை. 3. தாளக் காலப்பகுதி. ''கொட்டு மசையும்'' (சிலப். 3 : 16, உரை). 4. விலங்குகள் இரை மெல்கை. 5. சுவடித் தூக்கு.

*அசைவு = 1. சலனம். 2. தளர்வு. 3. சோம்பு. 4. நிலைமை கெட்டு வருந்தும் வருத்தம். ''இளிவே யிழவே யசைவே'' (தொல். மெய்ப். 5). 5. தோல்வி. ''அசைவில படை'' (தேவா. 568 : 6).*

*அசைவு செய்தல் = உண்ணுதல். ''நஞ்சினை யசைவு செய்தவன்'' (தேவா. 568 : 6).*

*அசை– வ. அச்– அசன (உணவு).*

*அசை– அசங்கு. அசங்குதல் = அசைதல்.*

*''சங்கர நான்முகர் கைத்தலம் விண்டசங்க''*

**(கம்பரா. இராவணன் வதை. 28)**

*அசங்கு – அசக்கு. அசக்குதல் = அசைத்தல். ''அகடசக் கரவின் மணியா'' (கந்தபு. கடவுள்வா.).*

*ஒ. நோ. :* OE. scacan, OS. skakan, ON. skaka, E. shake.

*அசக்கு– அயக்கு. அயக்குதல் = அசைத்தல். ''குன்றுக ளயக்கலின்'' (கம்பரா. சேதுப. 10).*

*அசை – அயை – அயர். அயர்தல் = 1. தளர்தல். ''அயலார் போ லயர் வேனோ'' (திருவாச. 32 : 9). 2. உணர்வழிதல். அயர்ந்து உறங்குகிறான் (உ. வ.). 3. மயக்கமடைதல். 4. மறத்தல். ''ஆயா தறிவயர்ந்து'' (பு. வெ. 10, காஞ்சி. 2). 5. அறிவிழத்தல். ''ஐம்புல வேடரி னயர்ந்தனை மறந்தென'' (சிவஞா. 8). 6. மதிமயங்குதல். ''அணைவுறு வைகலி னயர்ந்தனன் மயங்கி'' (சிலப். 3 : 173). 7. வழிபடுதல். ''பலிசெய் தயரா நிற்கும்'' (திருக்கோ. 348). 8. தெய்வமேறி யாடுதல். ''சுறவ முண்மருப் பணங்கயர்வனகழிச் சூழல்'' (பெரியபு. திருக்குறி. 7). 9. விளையாடுதல். ''பிரிவி லாய முரியதொன் றயர'' (குறுந். 144). 10. தளருமளவு வேலை செய்தல். 11. செய்தல் (திவா.).*

*ம. அயர்(க்க). தெ. அயிலு.*

*அயர்தி = 1. சோர்வு. 2. மறதி. அயர்– அசர்*

*அயர்தி – அசர்தி – அசதி.*

*அசரப் போடுதல் = தளரவிடுதல், காலந்தாழ்த்துதல்.*

*அயை– அயா = தளர்ச்சி. (திவா.).*

*அயாவுயிர்த்தல் = செ. குன்றிய வி.) 1. களைப்பு நீங்கல். 2. வருத்தந் தீர்தல். ''அமரர் கற்பம் புக்கயா வுயிர்த்த தன்றே'' (சீவக. 600). 3 நெட்டுயிர்த்தல். ''அழுதன ளேங்கி யயாவுயிர்த் தெழுதலும்'' (மணி. 21 : 26). (செ. குன்றா வி.) இளைப்பாற்றுதல். ''எம்மைச் சுமந் தயாவுயிர்த்த வாண்மை'' (சீவக. 2947).*

அயா – அயாவு. அயாவுதல் = வருந்துதல். ''மானயா நோக்கியர்'' (சீவக. 1822).

அயை – ஆய். ஆய்தல் = 1. அசைதல். ''ஆய்மறியே'' (திருக்கோ. 125, உரை). 2. சோர்தல். 3. வருந்துதல். ''ஐய விடைமடவா யாய'' (திணைமாலை. 17). 3. கொண்டாடுதல். ''ஆயு மடுதிறலாற்கு'' (பு. வெ. 4 : 16).

ஆய் = வருத்தம். (அக. நி.).

ம., க, து. ஆய்.

அல் – ஆல். ஆலுதல் = 1. சுற்றுதல். 2. சுற்றியாடுதல். ''கரைநின் றாலு மொருமயில் தனக்கு'' (மணி. 4 : 11). 3. களித்தல். (திவ். திருமாலை. 14, வியாக்.) 4. தங்குதல். (கலித். 36 : 2, உரை). க. ஆல்.

ஆல் – ஆலை = 1. சுற்றியாடும் கரும்பாலை. ''ஆலை நீள் கரும் பன்னவன் றாலோ'' (திவ். பெருமாள். 7 : 1). 2. கரும்பு. ''ஆலை யஞ்சிலை வேள்'' (கந்தபு. காமதக. 90).

ஆலைபாய்தல் = 1. ஆலை யாட்டுதல். ''ஆலைபா யோதை'' (சேதுபு. நாட்டு. 93). 2. அலைவுறுதல். 3. மனஞ் சுழலுதல். ''நெஞ்ச மாலைபாய்ந் துள்ள மழிகின்றேன்'' (அருட்பா, விண்ணப்பக்கலி, 406).

ஆலைமாலை = தொந்தரவு.

ஆல் – ஆலா = வட்டமிட்டுப் பறக்கும் பறவை வகை.

கம் (நீர்) + ஆலை = கம்மாலை – கமலை = கிணற்று நீரிறைக்கும் காளை யேற்றம். முதற் காலத்தில் கமலை சுற்றிவரும் அமைப்பாயிருந்தது. இக்காலத்தும் தொண்டைநாட்டின் தென் பாகத்தில் சுற்றுக் கவலை ஆடுதல் காண்க.

காளையேற்றத்தைக் கமலை யென்பது பாண்டி நாட்டு வழக்கு; கவலையென்பது சோழ கொங்குநாட்டு வழக்கு.

**தெ.** கபிலெ, **க.** கபிலெ, கபலி, **ம.** கப்பி, **து.** கபி.

கன்னடத்திலும் தெலுங்கிலும் வகரம் பகரமாகத் திரிவதால், அதைத் துணைக்கொண்டு கவலையைக் கபிலை என்று திரித்து, அதை வடசொல்லாகக் காட்டியுள்ளது சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலி.

'கபிலை' என்பது குரால் (புகர்நிற ஆன்). ஆவைக் கட்டி நீரிறைக்கும் வழக்கம் தமிழகத்தில் இல்லை. கவலை என்னும் தென்சொல்லை வடசொல்லாக்கவே, கபிலை என்னும் வட சொல்லை

*ஆண்டுள்ளனர் தமிழ்ப் பகைவர். கம் என்பதும் தென்சொல்லே. அம் = நீர். அம் – கம்.*

*இனி, கருமம் என்பதன் குறுக்கமான கம் என்னுஞ் சொல், முதல் தொழிலான பயிர்த்தொழிலைக் குறித்தது எனினுமாம்.*

*ஆல் – ஆலத்தி = வழிபாட்டிலும் கண்ணெச்சில் கழித்தலிலும், விளக்கு முத்து சோறு முதலியவற்றைச் சுற்றியெடுத்தல். ''கூத்தும் ஆலத்தியுங் கண்டு'' (சீவக. 2468, உரை).*

*ஆலத்தி யெடுத்தல், ஆலத்தி சுற்றுதல், ஆலத்தி வழித்தல் என்பன உலக வழக்கு.*

*''மரமதைக் கண்டுமாதர் மரமொடு மரமெடுத்தார்'' (தனிப்பா. 2 ஆம் பாகம்). மரமொடு மரம் = ஆலத்தி.*

*''வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டுங் கையிலே'' (ஈடு, 1 : 8 : 9).*

*முத்தைத் தட்டில் வைத்துச் சுற்றுதல் முத்தாலத்தி. ''முத்தா லத்திகொண் டெண்ணாயிர மடவார் சூழ'' (தமிழ்நா. 240).*

*சோற்றுருண்டையைத் தட்டில் வைத்துச் சுற்றுதல் சோற்றாலத்தி (அன்னாலத்தி).*

*ஆலத்தி – வ. ஆரத்தி.*

*ஆலத்தி – ஆலாத்தி.*

*''ஆலாத்தி சுழற்ற லென்கோ''* ***(சௌந்தரி. 103)***

*ஆலத்தி – ஆளத்தி = மெலிவு, சமன், வலிவு என்னும் முந்நிலைகளிலும் இசை வட்டமிட்டுப் பாடுதல்.*

*''மகரத்தி னொற்றாற் சுருதி விரவும்*
*பகருங் குறினெடில்பா ரித்து – நிகரிலாத்*
*தென்னா தெனாவென்று பாடுவரே லாளத்தி*
*மன்னாவிச் சொல்லின் வகை.''*

*''குன்றாக் குறிலைந்துங் கோடா நெடிலைந்து*
*நின்றார்ந்த மந்நகரந் தவ்வொடு – நன்றாக*
*நீளத்தா லேழு நிதானத்தா னின்றியங்க*
*ஆளத்தி யாமென் றறி''*

*என்பன அடியார்க்குநல்லா ருரை மேற்கோள் (சிலப். 3 : 26).*

*ஆளத்தி – வ. ஆலப்தி.*

ஆல்– ஆள்– ஆழி = 1. வட்டம் (பிங்.). 2. மோதிரம். ‘‘ஆழிவாய் விரலில்’’ (சீவக. 833). 3. கணவனைப் பிரிந்த மனைவி இழைக்குங் கூடற் சுழி. ‘‘ஆழியாற் காணாமோ யாம்’’ (ஐந். ஐம். 43). 4. சக்கரம் (பிங்.). 5. குயவன் சக்கரம். ‘‘மட்கலத் தாழி யென்ன’’ (கம்பரா. வாலிவ. 37). 6. சக்கரப் படைக்கலம். ‘‘ஆழியெழச்சங்கும் வில்லுமெழ’’ (திவ். திருவாய். 7 : 4 : 1). 7. கட்டளைச் சக்கரம். ‘‘ஆழி வேந்தன்’’ (கம்பரா. தைல. 70). 8. கட்டளை. ‘‘ஆழி நிற்குதி யல்லையேற் பழிவரும்’’ (உபதேசகா. சிவவிரத. 16).

ஆழிமால்வரை = சக்கரவாளமலை. ‘‘ஆழி மால்வரைக் கப்புறம் புகினும்’’ (புறத். ஆசிரியமாலை).

ஆல் – ஆர்– ஆரம் = 1. பறவைக் கழுத்து வட்ட வரி. 2. பதக்கம் (திவா.).

ஆள்– ஆடு. ஆடுதல் = 1. அசைதல். ‘‘ஆடுகழை’’ (கலித். 41). 2. உலாவுதல். ‘‘இளமழை யாடும்’’ (கலித். 41). 3. சுற்றுதல். பம்பரம் ஆடுகிறது. 4. சுற்றிவருதல். செக்காடுகிறது. 5. நடஞ்செய்தல். ‘‘அம்பலத் தாடுவான்’’ (பெரியபு. கடவுள்). 6. கூத்தாடுதல் (பிங்.). 7. நாடகம் நடித்தல். 8. விளையாடுதல். ‘‘அகன்மலை யாடி’’ (மணிமே. 10 : 55). 9. அலைதல். ‘‘ஆடித் திரிந்துநான் கற்றதுங் கேட்டதும்’’ (தாயு. சச்சிதா. 5). 10. சண்டையில் திரிதல். ‘‘வருந்தி – ஆடினாள் பாடினாள்’’ (ஔவை. தனிப்பாடல்). 11. அளவிற்கு மிஞ்சி அதிகாரஞ் செலுத்துதல். 12. ஒரு துணைவினை. எ - டு : நீராடு, போராடு, சொல்லாடு, மல்லாடு, சேறாடு, நீறாடு.

**ம.**, **தெ.**, **க.**, து. ஆடு.

ஆடு– ஆடகன் = ஆடுவோன் (நடிகன், விளையாடி).

ஆடு – ஆட்டு = 1. கூத்து. ‘‘பாட்டு மாட்டும் விரைஇ’’ (மதுரைக். 616). 2. விளையாட்டு. ‘‘அன்னவகை யாட்டயர்ந்து’’ (பரிபா. 10 : 97). 3. அசைப்பு. ஓர் ஆட்டு ஆட்டினான். 4. ஆடுவிப்பு. ம. ஆட்டு.

ஆட்டு– ஆட்டம் = 1. அசைவு. 2. உலாவல். ‘‘அஞ்சன மேனியை யாட்டங் காணேன்’’ (திவ். திருவாய். 10 : 3 : 3). 3. கூத்தாட்டு. 4. விளையாட்டு. 5. நாடக நடிப்பு. 6. ஒருமுறை நாடகமாடுகை அல்லது விளையாடுகை. ஒரு நாளைக்கு எத்தனை ஆட்டம்? 7. அளவிற்குமிஞ்சி அதிகாரஞ் செலுத்தம். ஆடாத ஆட்டம் ஆடினான். 8. அலைக்கழிப்பு. என்னை ஆட்டங்காட்டுகிறான். 9. முரண்டு. ஊருக்குப் போக வேண்டுமென்று ஒரே ஆட்டம் ஆடினான்.

**ம.** ஆட்டம். **தெ.**, **க.**, **து.**, ஆட்ட.

ஆட்டு – ஆட்டகம் = நீராட்டுசாலை, ''ஆட்டகத்தி லானைந் துகந்தார் போலும்'' (தேவா. 720 : 4).

ஆட்டு– ஆட்டை = ஒருமுறை விளையாட்டு. எ - டு : முதலாட்டை, கடைசியாட்டை.

ஆட்டு – ஆட்டாளி = கருமத்தலைவன். உங்கள் கருமங்களுக் கெல்லாம் நான் ஆட்டாளியா? (உ. வ.).

ஆடு – ஆடி = 1. கூத்தாடி. ''மணிப்பை யரவி னாடி'' (பாரத. அருச்சுனன்றவ. 113). 2. விளையாடி. 3. உருவ நிழலாடுங் கண்ணாடி. ''பொன்னி னாடியிற் பொருந்துபு நிற்போர்'' (மணிமே. 19 : 90). 4. பளிங்கு. ''விதிமா ணாடியின் வட்டங் குயின்று'' (மணிமே. 8 : 47).

கண் + ஆடி = கண்ணாடி. ம. கண்ணாடி.

ஆடு – ஆடை = 1. அசையும் மெல்லிய துணி. 2. உடை (பிங்.). 3. ஆடைபோற் பரக்கும் காய்ச்சிய பாலேடு. ''ஆடைதனை யொதுக்கிடும்'' (அழகர்கல. 87).

பால் + ஆடை = பாலாடை.

பனை + ஆடை = பனையாடை – பன்னாடை.

பனையரையில் ஆடைபோன் றிருப்பதால், நெய்யரி பனையாடை யெனப்பட்டது.

பன்னாடை = 1. பனை தெங்கு முதலியவற்றின் மட்டை யடியில், அலசலான முரட்டுச் சணல் துணிபோல் ஒட்டிக் கொண்டிருக்கும் உறுப்பு. 2. அலசலான முரட்டுத் துணிவகை (W.). 3. நல்லதைத் தள்ளி அல்லதைக் கொள்ளும் பேதை அல்லது முட்டாள்.

பன்னாடை நெய்யரியாகப் பயன்படுத்தப் பெறுவதாலும், சாற்றைப் போக்கிச் சக்கையைப் பற்றிக்கொள்வதாலும், பய னுள்ளதை விட்டுவிட்டுப் பயனற்ற செய்தியைப் பற்றிக்கொள்ளும் பேதைக் குவமையாயிற்று.

''அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடம்ஆ டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்''

என்பது நன்னூற் பாயிரம் (38).

பனையுறுப்பின் பெயர் தென்னை யுறுப்பிற்கானது ஒப்புமை பற்றி யென்க. ஒ. நோ : எண்ணெய் = எள் நெய், வேறு நெய்.

*பல்வகைப்பட்ட வளைதற் கருத்தே இக் கட்டுரை மூலச் சொல்லின் அடிப்படைக் கருத்தென்றும், ஏனையவெல்லாம் அதினின்று தொடர்முறையாய்க் கிளைத்த கிளைக் கருத்துக ளென்றும், அறிந்து கொள்க.*

*ஆரத்தி, ஆலத்தி என்னும் வடமொழித் தென்சொற் றிரிபுகளை, ஆ– ரத்தி, ஆ– லப்தி எனச் சிதைத்து, வெவ்வேறு மூலப்பொருளைக் கட்டிக் கூறுவது உத்திக்கும் உண்மைக்கும் பொருந்தாது.*

# (10)

# ‘உல்’ (உ) என்னும் வேர்ச்சொல்

## உல்$^{3}$ (உள்ளொடுங்கற் கருத்துவேர்)

*உல்— உலகு. உல்குதல் = உள்வளைதல், ஒடுங்குதல், சிறுத்தல்,*

*உல்— உல்லி = ஒல்லி. உல்லி— ஒல்லி. ஒல்லொல்லி = மிக மெலிந்த ஆள்.*

*உல்லாடி — ஒல்லியான ஆள்.*

*உல்லாடி — ஒல்லாடி = மெல்லிய ஆள்.*

*உல் — உள் — உள்கு. உள்குதல் = உள்ளிழிதல், ஒடுங்குதல், மனந்தளர்தல்.*

‘‘சிந்தையுள்கி’’ ***(இரகு. அயனுதய. 20)***

*உள்கு— உளுக்கு— உளுக்கா.*

*உளுக்காத்தல் = 1. சுவர் கீழிறங்குதல். 2. கீழிருத்தல், ஒடுங்கியிருத்தல், இருத்தல். ‘‘சோளேந்திர சிங்கனை உளுக்காக்கப் பண்ணுகிறேன்’’ ( ஈடு. 6 : 4 : 9)*

*உளுக்கா— உளுக்கார். உளுக்கார்தல் என்பது இன்றும் நாட்டுப்புற வழக்காம்.*

*உளுக்கார்— உட்கார். உட்கார்தல் = கீழ் அல்லது இருக்கையில் இருத்தல்.*

*எங்ஙனம் அமர்ந்திருப்பினும், நிற்கும் நிலையினும் உட்கார்ந் திருக்கும் இருப்பு உருவ அளவில் ஒடுங்கியிருத்தல் காண்க.*

*உட்கார்— உட்கார்ந்து (பி.வி.) உட்கார்த்துதல் = உட்கார வைத்தல்.*

*உள்கு— உட்கு. உட்குதல் = 1. அஞ்சுதல்.* K. ugi. *'உல்' (உ) என்னும் வேர்ச்சொல். ''நண்ணாரும் உட்குமென் பீடு'' (குறள். 1088). 2. நாணுதல். ''சேரன் ........... உட்காதே'' (தமிழ்நா. ஔவை).*

*உட்கு— உக்கு. ஒ. நோ : மட்கு— மக்கு.*

*உக்குதல் = 1. மெலிதல். துயரத்தால் மெலிதலை உக்கிப் போதல் என்பர். 2. உளுத்தல், உரங்கெடுதல்.*

*உக்கின மரம் என்பது உலக வழக்கு.* M. ukku.

*உக்கு— உக்கம் = ஒடுங்கிய இடை.* M. ukkam.

*''உக்கஞ் சேர்த்திய தொருகை''* ***(திருமுருகு. 108)***

*உக்கல் = 1. உளுத்தது. 2. பதனழிவு.*

*உக்கம்— உக்கல்— ஒக்கல் = இடுப்பு (எனினுமாம்).*

*உக்கல் — உக்கலை — ஒக்கலை = இடுப்பு (எனினுமாம்).* M. ukkal.

*உக்கி = இருகாதையும் இரு கையால் மாறிப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தெழும் தோப்புக்கரணம் என்னும் தண்டனை வகை.*

*உக்கிடு = நாணத்தைக் குறிக்கும் குறிப்புச் சொல்.*

*உடுக்கு— இடையொடுங்கு பறை.*

*உடுக்கு— உடுக்கை = இடையொடுங்கு பறை.*

*''நிலையாய் உடுக்கை வாசிப்பான்''* (S. I. I. Vol. II, 254)

*உடுக்கை—* Skt. Hudukka.

*உடு— இடு— இடை = ஒடுங்கின அல்லது சிறுத்த உறுப்பு.*

*இடு— இடுப்பு = இடையின் பக்கம்.*

*இடு— இடுகு. இடுகுதல் = ஒடுங்குதல், சிறுத்தல்.*

*இடுகு— இடுக்கு = ஒடுங்கிய இடைவெளி.*

*இடுக்கு— இடுக்கல் = ஒடுங்கிய இடைவெளி*

*இடுக்குதல் = ஒடுக்கி அல்லது நெருக்கிப் பிடித்தல்.*

*இடுக்கு— இடுக்கி = நெருக்கிப் பிடிக்கும் கருவி.*

*இடுக்கம் = நெருக்கம், இடைவெளி யொடுக்கம்.*

*இட்டளம் = நெருக்கம், தளர்வு.*

*''பரமபதத்தில் இட்டளமுந் தீர்ந்தது''* ***(ஈடு, 3 : 8 : 2)***

இட்டறுதி = இக்கட்டான சமையம், வறுமை.

இட்டிடை = 1. சிறுத்த இடை. ''இட்டிடையின் மின்னிப் பொலிந்து'' (திருவாச. 7 : 16). 2. சிறிது. ''இட்டிடை யிடைதனக்கு'' (கந்தபு. தெய்வயா. 183). 3. இடையூறு. ''மிகுபிணி யிட்டிடைசெய'' (திருப்பு. 1053).

இட்டிடைஞ்சல் = வறுமை, துன்பம்.

இட்டிது = 1. சிறிது. ''ஆகா றளவிட்டி தாயினும்'' (குறள். 478). 2. அண்மை. ''இட்டி தாகவந் துரைமினோ'' (தேவா, 1240 : 2).

இட்டிமை = சிறுமை, ஒடுக்கம்.

இட்டிய = சிறிய (ஐங். 215)

இட்டு = சிறிது. இட்டிடை = சிறிய இடைவெளி.

இட்டேறி = சிறிய வண்டிப்பாதை.

இட்டி – சிறு செங்கல்

இட்டி = இட்டிகை = மிகச் சிறிய செங்கல்.

இடுக்கண் = துன்பம், இரக்கம்.

இடுக்கணி = நெருக்கமான (இடுக்கான) இடம்.

இடுக்கிடை = நெருக்கம்

இடுகுதல் = 1. ஒடுங்குதல். ''கண்களை யிடுகக் கோட்டி'' (சீவக. 2086). 2. சிறுகுதல். ''இடுகிடைத் தோகாய்'' (கம்பரா. சித்திர. 19).

இடுங்குதல் – உள்ளொடுங்குதல்.

''கண்ணிடுங்கி'' **(திவ். பெரியதி. 1 : 3 : 4)**

இடும்பை = 1. துன்பம். ''ஏமஞ்சாலா இடும்பை'' (தொல். பொருள் 50). 2. வறுமை. ''இடும்பையால் அடர்ப்புண்டு'' (திவ். பெரியதி. 1 : 6 : 5). 3. நோய். ''கரப்பிடும்பை இல்லாரைக் காணின்'' (குறள். 1056) 4. தீமை. ''பூதம்... இடும்பை செய்திடும்'' (மணிமே. 1 : 22)

இடுவல் – இடுக்கு.

இண்டு = மிகச் சிறிய இடைவெளி அல்லது துளை.

இண்டும் இடுக்கும் என்பது உலக வழக்கு.

உச்சட்டை = ஒல்லி.

*உச்சட்டை – ஒச்சட்டை = ஒல்லி.*

*உச்சட்டை – உஞ்சட்டை = ஒல்லி.*

*உச்சட்டை – ஒஞ்சட்டை = ஒல்லி.*

*உச்சந்தம் = தணிவு. உச்சந்தம் – ஒச்சந்தம் = தணிவு.*

*உறத்தல் = மிகச் சிறிதாதல்.*

*‘‘உறக்குந் துணையதோர் ஆலம்வித் தீண்டி’’* ***(நாலடி. 38)***

*உற – உறகு. உறகுதல் = ஒடுங்கித் தூங்குதல்.*

*‘‘பறவை யரையா வுறகல்’’* ***(திவ். பெரியாழ். 5 : 2 : 9)***

K. oragu.

*உறகு – உறங்கு. உறங்குதல் = 1. ஒடுங்குதல். ‘‘தண்டலைக்கா வுறங்கின’’ (தமிழ்நா. 132). 2. தூங்குதல். ‘‘உறங்குவது போலுஞ் சாக்காடு’’ (குறள். 339). 3. சோர்தல். 4. தங்குதல். ‘‘தாமரை யுறங்குஞ் செய்யாள்’’ (கம்பரா. நாட்டுப். 6).*

K. oran'gu, M. urannu,

*உறங்காப்புளி = இரவில் இலைகுவியாத புளிய மரம்.*

*உறங்கு – உறக்க (பி.வி.).* M. urakku.

*உறங்கு – உறக்கம் (தொ.பெ.).* M. urakkam

*உறண்டுதல் = மெலிதல், நோய்தல்.*

*உறண்டு – உறட்டு (பி.வி.).*

*உறட்டலன் = மெலிந்தவன், உடல்வற்றியவன்.*

*உறை = மிகக் குறைவானது.*

*‘‘உறைவிற்குலா நுகலாள்விலை’’* ***(திருக்கோ. 266)***

*உறையிடுதல் = பேரெண்ணைக் குறிக்க ஒன்று என்னும் சிற்றெண்ணைக் குறியாய்க் கொள்ளுதல்.*

*‘‘உறையிடத் தேய்ந்திடும் இவ்வந்தி வானத் துடுக்குலமே’’*
***(அஷ்டப். திருவேங்கடத் தந்தாதி, 34)***

*உல் – ஒல் – ஒல்லட்டை = ஒல்லியானவன்.*

*ஒல் – ஒல்கு. ஒல்குதல் = 1. தளர்தல். ‘‘ஒல்க வுள்ளமொடு’’ (புறம். 135 : 8). 2. மெலிதல். ‘‘ஒல்குதேவியை’’ (கந்தபு. காமதகன. 61). 3. குழைதல். ‘‘ஒல்கு தீம்பண்டம்’’ (சீவக. 62). 4. சுருங்குதல். ‘‘ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்’’ (குறள். 136). 5. ஒதுங்குதல். ‘‘பொன்னலங்கல்*

காலசைப்ப வொல்கி'' (சீவக. 595). 6. வறுமைப் படுதல். ''ஒல்கிடத் துலப்பிலா வுணர்விலார்'' (கலித். 25). 7. மனம் அடங்குதல். ''ஒல்காதார் வாய்விட்டுலம்புப'' (நீதிநெறி. 72).

ஒல்கு– ஒஃகு, ஒஃகுதல் = பின்வாங்குதல், தோற்றல்.

''ஏற்ற தெவ்வருக் கொல்கினன்'' **(கம்பரா. பள்ளியடை. 106)**

ஒல்கு– ஒற்கு. ஒற்குதல் = 1. குறைதல்.

''ஒற்கா மரபிற் பொதியி லன்றியும்'' **(சிலப். 25 : 117)**

2. தளர்தல்.

''ஒற்கா வுள்ளத் தொழியா னாகலின்'' **(மணிமே. 15 : 18)**

ஒற்கு– ஒற்கம் = 1. குறைவு. ''ஒற்க மில்வளன்'' (கந்தபு. மேரு. 70). 2. தளர்ச்சி. ''ஒற்கத்தி னூற்றாந் துணை'' (குறள். 414). 3. வறுமை. (தொல். சொல். 360). 4. அடக்கம். ''ஒற்கமின் றூத்தைவா யங்காத்தல்'' (நீதிநெறி. 23).

ஒஞ்சுதல் = நாணுதல். ஒஞ்சு– ஒஞ்சி. ஒஞ்சித்தல் = நாணுதல்.

ஒஞ்சு– ஒச்சம் (தொ.பெ.) = 1. குறை, குறைவு.

2. நாணம்.

ஒச்சித்தல் = நாணுதல்.

ஒச்சியம் = கூச்சம்.

ஒச்சி – ஒசி. ஒசிதல் = 1. நாணுதல். ''கண்ணரக்கி நோக்கா தொசிந்து'' (சீவக. 2541). 2. சாய்தல். ''வாயருகு வந்தொசிந்து'' (சீவக. 595). 3. நுடங்குதல். ''மாந்துண ரொசிய வேறி'' (சூளா. இரத. 44). 4. முறிதல். 5. ஓய்தல். 6. வருந்துதல். ''நுண்ணிடை யொசியப் புல்லினான்'' (சீவக. 989).

ஒசிந்தநோக்கு = ஒதுக்கப் பார்வை.

ஒடு – ஒடுங்கு. ஒடுங்குதல் = 1. சுருங்குதல். 2. குவிதல். ''தாமரையின் தடம்போ தொடுங்க'' (திவ். இயற். திருவிருத். 76). 3. ஒதுங்குதல். ''மேலையோன் புடைதனி லொடுங்கியே'' (கந்தபு. தாரகன் வதை. 164). 4. அடங்குதல். ''என்னிதயமு மொடுங்க வில்லை'' (தாயு. ஆனந்தமா. 9). 5. கீழ்ப்படிதல். 6. உள்ளொடுங் குதல், உட்கலத்தல்.

ஒடுங்கி = ஆமை.

ஒடுக்கு = 1. கலங்களின் அதுக்கு. 2. அடக்கம்.

ஒடு – ஒடி. ஒடிதல் = முறிதல். ஒடித்துக் கேட்டல் = விலையைக் குறைத்துக் கேட்டல்.

ஒடி – ஒசி (மேற்காண்க). ஒ. நோ : குடவன்– குசவன், பிடி – பிசி (பொய்).

பொய் சொல்லுதலைப் பொய் பிடித்தல் என்பது சேலம் வட்டார வழக்கு.

ஒடுங்கு– அடங்கு– அடக்கு– அடக்கம். அடங்குதல் = சுருங்குதல், உள்ளமைதல், உட்படுதல், கீழ்ப்படிதல், புலனொடுங்கு தல், உறங்குதல், சாதல். ஒடுங்கு – ஒதுங்கு – ஒதுக்கு – ஒதுக்கம்.

ஒதுங்குதல் = 1. ஒடுங்குதல். 2. விலகுதல். 3. வறுமையடைதல். 4. சாதல்.

ஒதுங்கு – அதுங்கு – அதுக்கு – அதுக்கம்.

அதுங்குதல் = உள்ளொடுங்குதல், கலம் நெளிதல்.

அதுக்குதல் = வாயிலடக்குதல், அமுக்குதல்.

அதுக்கு = ஒடுக்கு, கலநெளிவு.

ஒதுங்கு – ஒருங்கு. ஒருங்குதல் = 1. ஒடுங்குதல். ''உரமொருங் கியது.... வாலியது மார்பு'' (கம்பரா. யுத்த. மந்திர. 90). 2. அழிதல்.

''நமரெல்லாரும் ஒருங்கினர் சமரில்'' **(பிரபோத, 38 : 1)**

ஒ. நோ : விதை – விரை.

ஒருங்கு– ஒருக்கு. ஒருக்குதல் = 1. அடக்குதல். ''மனத்தை யொருக்கு மொருக்கத்தி னுள்ளே'' (பதினொ. திருவிடைமும். 24). 2. அழித்தல். ''இன்றொருக்கினே னித்தனை வீரரை'' (கம்பரா. பிரமா. 195).

இனி, ஒடுங்கு – ஒருங்கு என்றுமாம்.

ஒ. நோ : அடுப்பங்கடை – அடுப்பங்கரை, படவர் – பரவர்.

ஒன்றுசேர்தலைக் குறிக்கும் ஒருங்கு என்னும் சொல்லும், ஒடுங்குதலைக் குறிக்கும் ஒருங்கு என்னும் சொல்லும், வெவ்வேறாம். ஒன்றுசேர்தற் கருத்திற் சாதற்கருத்திற் கிடமின்மை காண்க.

ஒல்கு– அல்கு. அல்குதல் = 1. சுருங்குதல். 2. அழிதல். ''அளியினாற் றொழுவார்வினை யல்குமே'' (தேவா. 168 : 10). 3. தங்குதல் (பிங்.).

ஒ. நோ : ஒதுங்குதல் = புகலடைதல். ஒதுக்கு = 1. பிறர் வீட்டிற் குடியிருக்கை. 2. புகலிடம். ஒதுக்கிடம் = 1. ஒதுங்குமிடம். 2. தங்கும் விடுதி. 3. அண்டி வதியுமிடம்.

ஒதுக்கம் = இருப்பிடம்.

''ஏற்றினுக் கொதுக்கம் செல்வ நின்னிணை மலர்ச்சேவடி கொடுத்த''
**(சீவக. 3100)**

ஒதுக்கக்கருத்தில் தங்கற்கருத்துத் தோன்றிற்று.

அல்கல்– 1. குறைவு. ''அல்கலின் மொழிசில வறைந்து'' (நைடத. அன்னத்தைக் கண். 66). 2. வறுமை. (திவா.). 3. தங்குகை (அகம். 20).

அல்குநர் = தங்கும் குடிகள்.

''அல்குநர் போகிய வூரோ ரன்னர்'' **(கலித். 23)**

அல்கு – அஃகு. அஃகுதல் = 1. அளவிற் குறுகுதல். (நன். 60). 2. சுருங்குதல். ''கற்பக் கழிமடம் அஃகும்'' (நான்மணி. 20). 3. குவிதல். ''ஆம்பல்... மீட்டஃகுதலும்'' (காஞ்சிப்பு. திருக்கண். 104). 4. நுண்ணிதாதல். ''அஃகி யகன்ற வறிவு'' (குறள். 175). 5. மனங்குன்றுதல். 6. கழிந்துபோதல்.

''அல்லாயிர மஃகினவால்'' **(கம்பரா. அதிகா. 69)**

அஃகல் = 1. சிறிதாகை (திவா.). 2. வறுமை (திவா.).

அல்கு– அற்கு. அற்குதல் = நிலைபெறுதல்.

''அற்கா வியல்பிற்றுச் செல்வம்'' **(குறள். 333)**

தங்கற்கருத்தில் நிலைபேற்றுக் கருத்துத் தோன்றும்.

அற்கு– அற்கம் = அடக்கம்.

''அற்க மொன்றும் அறிவுறாள்'' **(திவ். திருவாய். 6 : 5 : 4)**

குடிகள் அரசனுக்கு அடங்கி வரி கொடுப்பதால், உல்கு என்னும் சொல் தென்சொல்லாகவு மிருக்கலாம். சுல்க (sulka) என்னும் வடசொல் மணமகட் கொள்ளும் பரிசத்தையே சிறப்பாய்க் குறிக்கும். உல்கு என்னும் சொல்லேனும், சுல்க என்னும் வடசொல்லின் திரிபான சுங்கம் என்னும் சொல்லேனும், தமிழிற் பரிசத்தைக் குறிப்பதில்லை. 'உல்கு' தென்சொல்லாயின், உல்கு - சுல்க (வ.) – சுங்கம் என்று திரிந்திருத்தல் வேண்டும். தென்சொல்லின் திரிபான வடசொல்லினின்று திரிந்த சொல்லும் பிற்காலத் தமிழில் வழங்கும்.

| எ - டு : | தென்சொல் | வடசொல் | தென்சொல்திரிபு |
|---|---|---|---|
| | அரத்தம் | ரக்த | ரத்தம் |
| | திரு | ஸ்ரீ | சீ |

## 11

# ‘உள்’ என்னும் வேர்ச்சொல்

## உள் (துளைத்தற் கருத்து வேர்)

*உ – உல் – உள்.*

*உள் என்பது ஈண்டுத் துளைத்தற் கருத்துள்ள வேர்ச்சொல்.*

*உல் = 1. தேங்காயுரிக்கும் கூரிய கருவி. 2. கழு. துளைத்ததற்குக் கூரிய கருவி வேண்டும்.*

*உல் – இல் – இல்லி = துளை, சிறுதுளை.*

*இல் = துளைபோன்ற சிறு வீடு, வீடு.*

*ஒ. நோ. : புரை = துளை, அறை, வீடு.*

*இல் – இல்லம் = பெருவீடு, வளமனை. ‘அம்’ பெருமைப் பொருட் பின்னொட்டு. ம. இல்லம்.*

*உல் – உர் – உரல் = உலக்கையாற் குத்துதற்கேற்ற குழியுள்ள கல்.* **ம.** *உரல்,* **து.** *ஒரல்,* **க.** *ஒரளு,* **தெ.** *ரோலு.*

*உல் – உலை. உலைதல் = உட்குலைதல்.*

*உள்ளிறங்குமாறு குத்துதலும் ஒருவகைத் துளைத்தல். அங்ஙனங் குத்துங்கருவி கூராயிருத்தல் வேண்டும்.*

*உல் – உள் – உளி. உள் – அள் = கூர்மை. அள் – அளி = குத்தும் உறுப்புள்ள ஈ, தேனீ, குளவி, வண்டு. அளி – வ. அலி.*

*உள் – உளி = கூரிய பல்வேறு கருவி.*

**ம., க., து.** *உளி;* **தெ.** *உலி. உளி – உசி – ஊசி.*

*ஒ. நோ : இளி – இசி.*

*ஊசி = கூர்மை. கூரிய தையற்கருவி, எழுத்தாணி, கழு, துலைமுள், இருப்பு நெருஞ்சில், குயவர் மட்கலம் அறுக்குங் கருவி, சிறுமை.*

*குத்தூசி, கோணியூசி, தையலூசி, வகுலூசி; ஊசிக் கணவாய் (மீன்). ஊசிக்கழுத்தி (மீன்), ஊசிக்களா, ஊசிக் காது, ஊசிக்காய் (தேங்காய்), ஊசிக்கார் (நெல்), ஊசிக்கால் (தூண்), ஊசிச்சம்பா, ஊசித்தரை (அவரை), ஊசித் தூற்றல், ஊசித்தொண்டை, ஊசிப் பாலை, ஊசிப்புழு, ஊசிமல்லிகை, ஊசிமிளகாய், ஊசிமுல்லை, ஊசிவேர் முதலிய கூட்டுச் சொற்கள் தொன்றுதொட்ட வழக்காம். நெசவுத் தையலும் முதன்முதல் நிகழ்ந்த இடம் பண்டைத் தமிழகமே.*

*ஊசி – வ. சூச்சி.*

*உளி – உளியம் = உளிபோற் கூரிய உகிர்களையுடைய கரடி.*

*உளி – உகிர் (வ. நகம்).* M. uhir, K. ugur, Tu. uguru, Te. goru *(கோரு).*

*உள் – உளு = மரத்தைத் துளைக்கும் புழு. உளுத்தல் = புழுவால் துளைக்கப்படுதல். உளு – உசு. ம. உளும்பு.*

*உள் – அள் = 1. வாய். அள்ளூறுதல் = வாயூறுதல். 2. காது. அள்குத்து = மகமதியப் பெண்டிர் அணியும் காதணிவகை.*

*உள் – உள்ளிடம், இடம், 7ஆம் வேற்றுமை யுருபு, உள்ளிருக்கும் மனம், நீருள் மூழ்கிச் செல்லும் பறவை* (snipe) K., M. *உள்,* inside.

*உள் – உள்ளல், உள்ளான்* (snipe).

> *''உள்ளும் ஊரலும்''* ***(சிலப். 10 : 117)***
>
> *''வாளைமீன் உள்ளல் தலைப்படலும்''* ***(திரிகடு. 7)***
>
> *''உள்ளானும் வலியானும் எண்ணிக் கொண்டு''*
> ***(குற்றா. குற. 85 : 1)***

*தெ. உல்லாமு, க. உல்லங்கி.*

*உள் – உள்ளம் – உளம் = உள்ளிருக்கும் மனம்.*

*உள்ளுதல் = கருதுதல், நினைத்தல். உள்ளல் = கருத்து.*

*உள் – உள்கு. உள்குதல் = நினைத்தல். உள்கு – ஊழ்கு. ஊழ்குதல் = (வ.) தியானித்தல்.*

> *''நின்றனை யுள்கி யுள்ள முருகும்''* ***(திருவாச. 5 : 50)***
>
> *''புனிதன பங்கய மூழ்கி''* ***(கோயிற்பு. பாயி. 7)***

*உள்ளாளம் = உடம்பசையாமல் உள்ளடக்கமாகப் பாடும் பாட்டு.*

*உள்– உள்ளி = நிலத்திற்குள்ளிருக்கும் பூண்டுவகை.*

*ம., து. உள்ளி, தெ. உல்லி.*

*உள்– உளவு = உள்ளிருந்து துப்பறிதல். உளவு– உளவன் = துப்பாள். து. உளவு; க., தெ. ஒலவு.*

*உளகு = உட்டுளையுள்ள யாழின் தண்டு.*

*உளகன் = உட்பட்டவன்.*

*''பல்லினைக்கே யுளக ரெல்லாம்''* **(திருநூற். 61)**

*உளர்தல் = உட்கிளைத்தல், குடைதல், கோதுதல்.*

*உளம்புதல் = புதரைத் தட்டி வேட்டை விலங்கைக் கிளப்புதல்.*

*''கைம்மா வுளம்புநர்''* ***(கலித். 23)***

*உளைதல் = உட்குடைதல். ம.உள.*

*உளை– உளைவு, உளைச்சல்.*

*உளு– உழு– உழுதல் = நிலத்தை மேனாக்காகத் துளைத்தல்.*

***ம., க.*** *உழு,* ***து.*** *ஊட்* (ud).

*உழு– உழவு– உழவன்.*

*உளு– உகு. உகுதல் = உள்ளிருந் தொழுகுதல், சுரத்தல், சிந்துதல், சிதறுதல், உதிர்தல், தேய்தல், குலைதல், கெடுதல், சாதல்.*

*உகு– உகை. உகைத்தல் = உள்ளழுத்துதல், பதித்தல். க.* ugu.

*''நீலமொன் றுகைக்கு நிறைந்த கணையாழி''****(பணவிடு. 97)***

*உகு– (உகள்)– அகள்– அகழ். அகழ்தல் = தோண்டுதல் க.* agal *(அகழ்).*

*அகழ் = 1. அகழி.* ***க.*** agal *(அகழ்). ''வையையும் ஒருபுறத் தகழாம்'' (திருவிளை. திருநகரப். 17). 2. குளம். ''நீர் நசைஇக் குழித்த வகழ்'' (பெரும்பாண். 108).*

*அகழ்– அகழி. க.* agalu *(அகழு), தெ. அகட்த* (agadta).

*அகழான் = அகழெலி*

*அகள்– அகடு = 1. உள். ''செழுந்தோட் டகட்டின் அடைகிடக்கும்'' (கூர்மபு. தக்கன்வே. 57). 2. வயிறு. தெ. கடுப்பு. ''அகடாரார்'' (குறள். 936). 3. நடு. ''மதிபகடு தோய்'' (தாயுமா. சச்சி. 6). 4. நடுவுநிலைமை. ''அகடுற யார்மாட்டும் நில்லாது'' (நாலடி. 2).*

அகள் – (அகண்) – அகணி = 1. உட்புறம். ''கடுக்காயில் அகணி நஞ்சு, சுக்கிற் புறணி நஞ்சு'' (பழமொழி) 2. உட்புறத்தோடு கூடிய புறநார். 3. அகநாடாகிய மருதநிலம் (சூடா.). 4. நெல்வயல். ''அகணியின் கரைபுரளும் எங்கணும்'' (அரிசமய. குலசே. 8).

அகழ்ப்பை – அகப்பை. Te. agapa, K. agape.

ஒ. நோ : கேழ்ப்பை – கேப்பை.

அகம் = உள், உள்ளிடம், இடம், வீடு, மருதம், மனம், மார்பு, காமவின்பம், அகப்பொருள், அகநானூறு.

**ம.** அகம், **க.** ஆகெ (age).

அகம் – அகம்பு – உள்.

அகரம் = மருதநிலத்தூர், ஊர் (பிங்.).

உகு – (உகல்) – உவல் – அவல் = 1. பள்ளம். ''அவலா கொன்றோ மிசையா கொன்றோ'' (புறம். 187). 2. விளைநிலம். ''மெல்லவ லிருந்த வூர்தொறும்'' (மலைபடு. 450). 3. குளம். உவல் – உவன்றி = நீர்நிலை. ''வாய்த்தலைக்கும் உவன்றிக்குமாகப் பங்கொன்றும்'' (S.I.I. Vol. II, 521)

உவனித்தல் = ஈரமாதல்.

உவல் – உவறு. உவறுதல் = சுரத்தல்.

''உவறு நீருழக்கி'' **(சீவக. 966)**

உவறு – உவற்று (பி.வி.) உவற்றுதல் = சுரக்கச் செய்தல்.

''ஒண்செங் குருதி யுவற்றியுண் டருந்துபு'' **(அகம். 3)**

உவறு – ஊறு. ஊறுதல் = சுரத்தல்.

ம., க. ஊறு, தெ. ஊரு.

ஊறு – ஊற்று. தெ. ஊட்ட, க. ஊட்டெ, து. ஊட்டி.

ஊற்றுதல் = ஒழுகச் செய்தல், வார்த்தல். ம.ஊத்து, மராட்டி. ஒத்து.

உவல் – (உவன்று) – ஊன்று. ஊன்றுதல் = பள்ளத்தில் அல்லது குழியில் நடுதல் அல்லது நட்டுதல், நிலைபெறுதல், நிலை நிறுத்துதல்.

ஊன்று – ஊன்றி (க்கம்பு). ஊன்று – ஊற்றம் = நிலைபேறு.

**ம.** ஊன்னு, **தெ.** ஊனு.

உவல் – உவள் – உவளகம் = 1. அரண்மனையின் உட்புறம். ''உவளகந் தனதாக வொடுங்கினான்'' (சீவக. 243). 2. பள்ளம் (பிங்.). 3. தடாகம் (பிங்.). 4. அகழி. ''உவளகங் கண்ணுற் றுவர்க்கட லிஃதென்'' (குமர. பிர. திருவாரூ. 32).

உள்– உண். உண்ணுதல் = உட்கொள்ளுதல்.

உண்– உணா, உண, உணவு, உண், உண்டி.

உண்– ஊட்டு (பி. வி.) – ஊட்டம் = 1. உண்பிக்கை. 2. வளமான உணவு (nutrition).

ஊட்டு – ஊட்டி = 1. ஊட்டும் உணவு. 2. வளமான அல்லது வலுவுறுத்தும் உணவு. 3. குழந்தைகட்கு ஊட்டும் சங்கு. 4. சங்கு போன்ற குரல்வளையுறுப்பு (Adam's apple)

உள் – (உளை) – உடை. உடைதல் = உட்குலைதல், விரிதல், பிளத்தல்.

உள் – ஊள் – ஊளை = தொள்வு, தொய்வு, உலைவு, பதனழிவு, பதனழிந்த மோர், அதையொத்த காதுச்சீழ்.

ஊளைச்சதை = ஊழற்சதை.

ஊழுறுதல் = குடைதல்.

''காழியர் மோதகத் தூழுறு விளக்கமும்'' (சிலப். 6 : 37, அரும்.)

ஊள்– ஊழ், ஊழ்த்தல் = 1. உட்குலைதல், பதனழிதல். ''அருவிதந்த பழம்......... ஊழ்த்து'' (மலைபடு. 174-80) 2. விரிதல், மலர்தல். ''இணரூழ்த்து நாறா மலரனையர்'' (குறள். 650) 3. முதிர்தல். ''காந்த ளூழ்த்துச் சொரிவபோல்'' (சீவக. 1742) 4. நாறுதல் (பிங்.).

ஊழ்– ஊசு. ஒ. நோ : காழ்– காசு. தொள்– தொளர்– தளர். தொள் – தொய். நொள்– நொய்– நொய– நொச. நோய்– நோய்– நோ.

ஊழ் – ஊழல் = குலைவு, தாறுமாறு, உலைவு நாற்றம். ஊழில் = அருவருப்பான சேறு (பிங்.). ஊழலித்தல் = பதனழிதல், சோர்தல்.

உள்– ஒள்– ஒழுகு. ஒழுகுதல் = துளைவழியாய்ச் சிந்துதல்.

ஒள்– ஓள்– ஓலை. ஓளைவாய் = சாளைவாய்.

ஒள் = ஓட்டு. ஓட்டுதல் = கையைத் துளைக்குள் இடுதல்.

ஒள்– ஓட்டை = துளை.

ஒழுகு – ஒழுக்கு. ஒழுகுதல் = 1. சிந்துதல். 2. ஒழுக்குப்போல் நீள்தல், நேராதல். ''வார்தல் போதல் ஒழுகல் மூன்றும்,

நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள'' (தொல். 800). 3. நீள்தல் போற் காலால் நடத்தல், வண்டி செல்லுதல். ஒ.நோ : நெடு – நட. கம்பியை நீட்டிவிட்டான் என்னும் வழக்கையும் நோக்குக. 4. ஒழுக்க முறையில் நடத்தல்.

ஒழுகு– ஒழுக்கு– ஒழுக்கம்– நடை, செலவு, நடத்தை, வரிசை.

ஒழுகு = நிலம், கோயில் முதலியவற்றின் ஒழுங்கான வரலாறு அல்லது கணக்கு.

''நாடு பிடித்தார்க்கு ஒழுகைக் காட்டி''

**(திவ். திருமலை. 3, வியா.)**

கோயிலொழுகு = கோயிலுடைமை வரலாறு.

ஒழுகு– ஒழுங்கு– ஒழுங்கல் = ஒழுங்காயிருக்கை.

ஒழுகு– ஒழுகை = 1. வண்டி. ''உப்பொ யொழுகை யெண்ணும்'' (புறம். 116). 2. வண்டி வரிசை. ''பெருங்கயிற் றொழுகை'' (பெரும்பாண். 64).

ஒழுங்கு – ஒழுங்கை = 1. நீண்ட இடைகழி. 2. மண்டப நடை, முகப்பு.

ஒள்– ஒளி. ஒளிதல் = துளைக்குள் அல்லது பள்ளத்துள் மறைதல்.

ஒளி– ஒழி– ஒழிதல் = மறைதல், நீங்குதல், சாதல்.

ஒ. நோ : மாய்தல் = மறைதல், இறத்தல்.

ஒழி – ஓய். ஒ.நோ : வழி – வாய். ஓய்தல் = வேலையொழிதல், மரங் காய்ப்பொழிதல். கால் வலிமையொழிதல்.

ஓய்வு– ஓவு– ஓ = ஒளிவு, சென்று தங்குகை, ஒழிவு.

உள்– உடு– அகழி (பிங்.).

உடு– உடுவை = அகழி, நீர்நிலை.

உடு– ஊடு = துளைவழி, வழி.

ஊடு– ஊடை = நெசவின் குறுக்கிழை.

உள்– உரு – உருவு. உருவுதல் = துளையூடு செல்லுதல், மூடின கையூடிழுத்தல்.

உருவ = துளைநெடுக, முற்றும், நன்றாக.

ஒ. நோ : E. through – thorough, thoroughly.

''புயவலியை நீயுருவ நோக்கையா'' **(கம்பரா. குலமுறை. 26)**

இதுகாறும் காட்டிய சொற்களெல்லாம், துளைத்தல், துளைக்குங் கருவி, துளை, துளைக்குட் செல்லல், துளையினின்று வருதல், துளையூடுருவுதல் ஆகிய பெருங்கருத்துகளையும் அவற்றின் கிளைப்புகளையுமே கொண்டு ஒரே தொடர்புற்றிருத்தல் காண்க.

துளையெனினும் பள்ளமெனினும் ஒக்கும்.

சில சொற்கள் அணிவகையிற் பொருளுணர்த்தும். அவற்றை அறிதல் வேண்டும்.

எ - டு : குடைதல் = 1. துளைத்தல் – (பருப்பொருள்). 2. துளைத்தல்போல் நோவுறுத்தல் – (அணிப்பொருள்).

## (12)

# 'ஊது' என்னும் ஒலிக்குறிப்புச் சொல்

*ஊ – ஊது.*

*மாந்தன் மொழி இயற்கை மொழி* (Natural Language), *செயற்கை மொழி* (Artificial Language) *என இருநிலைப்படும். சுட்டுச் சொற்கட்கு முந்தியது இயற்கை மொழி; பிந்தியது செயற்கை மொழி. இவை முறையே முழைத்தல் மொழி* (Inarticulate Speech), *இழைத்தல் மொழி* (Articulate Speech) *எனவும் படும்.*

*இயற்கை மொழியைச் சேர்ந்த எழுவகை யொலிகளுள், ஒப்பொலி* (Imitative) *என்பது ஒன்றாம். அஃது அஃறிணையொலியும் உயர்திணை யொலியும் என இருவகை.*

*எ - டு :*

*அஃறிணையொலி : கூ, கூவு* (coo), *கரை* (cry, crow), *ஊள்– ஊளை* (howl), *பிளிறு* (blare), *இம் – இமிர்* (hum).

*உயர்திணையொலி : சப்பு* (sup, sip), *துப்பு* (spit), *முக்கு, விக்கு* (hiccup), *ஊம்* (hum), *ஆம்* (haw), *மூசு, ஊது.*

*உயர்திணை யொலிகள், வாயொலி, மூக்கொலி, மூச்சுக் காற்றொலி என மூவகையாம். சப்புதலும் துப்புதலும் வாயொலி யுடனும், முக்குதலும் ஊங்கொட்டுதலும் மூக்கொலியுடனும், மூசுதலும் ஊதுதலும் மூச்சுக் காற்றொலியுடனும் நிகழும்.*

*மூச்சுக் காற்றும் மூக்குவழி வருவதும், வாய்வழி வருவதும் என இருவகைத்து. மூசுதல் மூக்குவழிக் காற்றாலும், ஊதுதல் வாய்வழிக் காற்றாலும் நிகழும். மூசுதலாவது, செவியுறுமாறு காற்றை வெளிவிட்டும் உள்ளிழுத்தும் உரக்க மூச்சுவிடுதல். மூசுமூசென்று இளைக்கிறான் என்னும் வழக்கை நோக்குக. மூசு – மூச்சு. ஒ. நோ : பேசு – பேச்சு. ஊதுதலாவது, நெருப்பெரித்தலும் விளைக்கணைத்தலும் சூடாற்றுதலும் துகளைப் போக்குதலும் முதலிய செயல்கட்கு, வாழ்வழிக் காற்றை வெளிவிடுதல்.*

காற்று வெளிவரும் ஓசை, பெரும்பாலும் சகரவொலியாலும், சிறுபான்மை சகரத்திற்கு ஒருபுடையினமான தகரவொலியாலும், குறிக்கப்படும். மூசு என்னும் சொல்லும், காற்பந்திற்குக் காற்ற டிப்பதைக் குறிக்கும் புசுக்கு என்னும் ஒலிக்குறிப்பும், சகரத்தை யுடையன. Gas என்னும் ஆங்கிலச் சொல்லிலும் சகரமிருப்பது கவனிக்கத்தக்கது. வான் எல்மாந்து (Van Helmont) என்பவர்gas என்னும் சொல்லை, ghaos (chaos) என்னும் கிரேக்கச் சொல்லினின்று திரித்தார் என்பது, அத்துணைப் பொருத்த முடைத்தன்று. காற்றின் தொழிலைக் குறிக்கும் வீசு, விசிறு, விசுக்கு (whisk) என்னும் சொற்களும் சகரத்தைக் கொண்டுள்ளன.

நெருப்பெரித்ததற்குக் காற்றை ஊதும்போது, ஊகாரத்தையே ஒலித்தற்கேற்ற இதழ் குவிவும், சகர தகரம் போன்ற உரசொலி களையே (fricatives) ஒலித்தற்கேற்ற வாய்நிலையும் அமைந் திருத்தலால், அந் நிலையில் வாய்வழிக் காற்றை வெளிவிடுஞ் செயலை, ஊசு, ஊது என்னுஞ் சொற்களே குறிக்க முடியும். ரகரம் உருளொலியாதலால் (trill) அத்துணைப் பொருத்தமான தன்று.

காற்றை வெளிவிடும்போதும் உள்ளிழுக்கும்போதும் அமையும் வாய்நிலை, ஏறத்தாழ ஒன்றே. அதனால் வெயிலில் அலைந்தவன் இளைப்பாற உட்காரும்போது வாய்மொழிக் காற்றை வெளிவிடுதலையும், உறைப்பான உணவை யுண்பவன் வாய்வழிக் காற்றை உள்ளிழுத்தலையும், ஊசு என்னும் ஒரே சொல் குறிக்க லாயிற்று.

'ஊசென்று உட்கார நேரங் கிடையாது', 'ஊசு ஊசென்று அவ்வளவு சோற்றையும் உண்டுவிட்டான்', என்னும் வழக்குகளை நோக்குக.

நெருப்பெரித்தல் போன்ற செயலிற் காற்றை வெளிவிடுதலை, ஊது என்னுஞ் சொல் குறித்தது. சகர தகரம் ஒன்றற்கொன்று போலியாக வரும்.

எ - டு : ஓசை— ஓதை, நத்து— நச்சு.

ஊதுதல் = 1. நெருப்பெரிக்க ஊதுதல். ஊது ஊத்து (தொ.பெ.). 2. விளக்கவிக்க ஊதுதல். 3. சூடாற்ற ஊதுதல். 4. நோவு தீர ஊதுதல். 'ஊது' என்னும் ஒலிக்குறிப்புச் சொல் 5. துகள் நீக்க ஊதுதல். ஊதிப்போடுதல் = எளிதில் வெல்லுதல். உன்னைக் கசக்கி ஊதிவிடு வேன் என்னும் வழக்கை நோக்குக. 6. ஊதாங்குழ லூதுதல். ஊதாங் குழல், ஊதாங்குச்சி என்பன ஒருபொருட் சொற்கள். 7. இசைக்குழ லூதுதல்.

ஊதி, ஊதிலி (மகுடி), ஊதுகொம்பு முதலியன துளையுள்ள இசைக்கருவி வகைகள். ஊதல் என்னும் சொல் எக்காளம், தாரை, கொம்பு முதலியன ஊதிச்செல்லும் ஊர்வலம்பற்றி ஆரவாரத்தையுங் குறிக்கும். ஒ.நோ: E. fanfare – fonforonade.

8. தட்டான் பொன்னை ஊதிப் புடமிடுதல். ஊதுகட்டி, ஊதுவெள்ளி என்பன சொக்கவெள்ளியைக் குறிக்கும் பெயர்கள். 9. உலைத்துருத்தி அல்லது இசைத்துருத்தி யூதுதல். இசைத்துருத்தியின் பெயர் பின்வருமாறு திரியும்: துருத்தி – துத்தி – தித்தி. 10. ஊத்தாம்பை யூதுதல். ஊத்தாம்பை ஊத்தாம் பெட்டி, ஊத்தாம் பேழை என்றும் சொல்லப்பெறும்.

11. காய்களை மூட்டம்போட்டு ஊதிப் பழுக்க வைத்தல். 12. நோயாளி யுடம்பிற்குள் ஊதி மந்திரித்தல். 13. வண்டு ஒலித்தல். ''சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ'' (திருவா. 10:1). 14. வண்டு ஊதித் தேனை நுகர்தல். 15. வண்டு ஊதி மரத்தைத் துளைத்தல். 16. உடல் வீங்குதல்.

ஊத்தம் = வீக்கம். தெ. ஊத. ஊதல் = வீக்கம்.

ஊதை = வளிநோய் (வாதம்). ஊத்து = வளிநோய்.

ஊதுகணை, ஊதுகரப்பான், ஊதுகாமாலை, ஊதுமாந்தம் என்பன ஊதுநோய் வகைகள்.

ஊதுசுருட்டை, ஊதுவழலை, ஊதுவிரியன் என்பன உடம்பை ஊதச்செய்யும் நச்சுப்பாம்பு வகைகள்.

17. மிகுதல்.

ஊத்தப்பம், ஊதுமாக்கூழ் என்பன எழும்பும் சிற்றுண்டி வகைகள்.

ஊது – ஊதியம் = 1. செலவிற்குமேல் மிகுந்த வரவு. ''முதலிலார்க் கூதிய மில்லை'' (குறள். 449). 2. பயன். ''ஊதியங் கருதிய வொருதிறத் தானும்'' (தொல். பொருள் 41).

ஊதியம் வேறு; சம்பளம் வேறு.

ஊதிய இழப்பு – வ. லாப நட்டம்.

ஊது – ஊதாரி = துகளை ஊதிப் போக்குவதுபோல் செல்வத்தை யெல்லாம் வீண் செலவு செய்தழிப்பவன்.

''கொடையிலாத வூதாரி'' **(திருப்புகழ்)**

ஊதாரிபடுதல் = கேடுறுதல்.

''உடலூ தாரிபட் டொழிய'' **(திருப்பு. 904)**

*ஊதாரி என்னுஞ் சொல்லை, உதார என்னும் வடசொல் லினின்று திரிந்ததாகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலி காட்டியிருப்பது, உண்மைக்கு மாறானதும் முற்றும் பொருத்த மற்றதுமாம். உதார என்னும் வடசொல் ஈகைத் தன்மையைக் குறிப்பதாகும், ஊதாரி என்னும் தென்சொல்லோ அழிப்பாளியைக் குறிப்பதாகும். அழிப்பாளி வீண்செலவு செய்பவனே யன்றி அளிப்பாளி யல்லன். தமிழுக்கு இம்மியும் உதவாது பிறமொழி வளர்ச்சிக்கு ஏராளமாய் வாரிக் கொடுக்கும் தமிழ அரசனை அல்லது செல்வனை, ஊதாரியெனின், அது மிகப் பொருத்தமே.*

*ஊது –* **ம., க., தெ., து.** *ஊது.*

*ஊது – ஊத்து – ம. ஊத்து = ஊதுகை.*

*ஊது – ஊத்தம் – தெ. ஊத = வீக்கம்.*

*ஊது – ஊதை – 1. காற்று (திவா.) 2. வாடைக் காற்று. ''பனிப்புலர் பாடி..... ஊதை யூர்தர'' (பரிபா. 11 : 84). 'ஊது' என்னும் ஒலிக்குறிப்புச் சொல் 3. வளிநோய். ''தலைவலி பன்னமைச்ச வூதை'' (தைலவ. தைல. 7).*

*ஊதை –* Skt. vata *(வாத.)*

*ஊசு, ஊது என்னும் சொற்களிலுள்ள சகர தகரங்கள் வாய்வழிக் காற்றுப்பறிதலை உணர்த்துதலால், அவை ஆரிய மொழிகளிலும் வட திராவிட மொழிகளிலும் உள்ள* c, t *என்பன போல் (வெடி(ப்பு)த் தகைப்பொலிகள்* (plosive stops) *ஆகாவென்றும், இரட்டித்தவிடத்தே அங்ஙனமாகுமென்றும், அறிந்துகொள்க.*

*தமிழ் குமரிநாட்டில் தோன்றிய தொன்மூதியன் மொழி யாதலின், அந் நிலமிருந்த இடத்தை யொட்டிய தென்னாட்டுத் தென்கோடியில் வழங்கும் தமிழொலிகளை, தமிழ் வாயிலாகத்தான் அறிய முடியுமே யன்றிப் பிற வடநிலத் திரிமொழிகள் வாயிலாய் அறிய முடியாதென்றும், அங்ஙனம் அறிய முயல்வார் குன்று முட்டிய குருடர்போல இடர்ப்படுவாரென்றும், அறிந்து கொள்க.*

*hoot*, v.i. & t., & n, 1. Make loud sounds........... (of steam whistle or motor car or driver) Sound (intr) ......... [ME. huten, imit."]

"*hooter*, n. I n vbl senses, esp. siren, steam whistle, esp. as signal for work to begi n or cease,'' [Er]

*என்று 'எருதந்துறை நடப்பு ஆங்கிலச் சிற்றகர முதலி'* (The Concise Oxford Dictionary of Current English) *கூறுவதால், 'ஊது என்னுஞ் சொல்லொடு* hoot *என்னும் சொற்கு ஒருமருங்கு தொடர் பிருக்கலாமோ என ஐயுற இடமேற்படுகின்றது.*

*ஊது – பூது – பூத்து. பூத்துப் பூத்தென்று அடுப்பூதிக் கொண் டிருக்கின்றான் என்பது உலக வழக்கு.*

*ஊது – ஒது. ஒதுதல் = 1. காதிற்குள் ஊதுவதுபோல், சமயகுரவன் அருமறை மந்திரத்தைச் சமைந்த மாணவனுக்குச் சொல்லுதல்.*

*2. மருமச் செய்தியை ஒருவன் இன்னொருவன் காதிற்குள் மெல்லச் சொல்லுதல்.*

# 13

# ‘ஏ’ என்னும் இரு வேர்ச்சொற்கள்

**ஏ [1]. ‘(தன்மைப் பெயரடி)’**

**தன்மைப் பெயர்கள்**

**(முதல்நிலை)**

| எண் | எழுவாய் | வேற்றுமையடி |
|---|---|---|
| ஒருமை : | ஏன் | என் |
| பன்மை : | ஏம் | எம் |
| இரட்டைப் பன்மை : | (ஏங்கள்) | எங்கள் |

இவற்றுள், ‘ஏங்கள்’ என்பது ஏனையீரிடத்து இரட்டைப் பன்மைக் கொத்த வடிவேயன்றி, அவற்றைப்போல் உயர்வு குறித்ததன்று. அதுவும் அடியோடு வழக்கற்றது. ‘ஏன்’, ‘ஏம்’ இரண்டும் இன்று பெயராகவன்றித் தன்மை வினைமுற் றீறாகவே வழங்கி வருகின்றன.

எ - டு : வந்து + ஏன் = வந்தேன்

வந்து + ஏம் = வந்தேம்

இவ் வீறுகள் பின்வருமாறு திரியும் :

ஏ– என்– அன்– அல்.

எ - டு : வந்தென், வந்தனென், வருவன், வருவல்.

ஏம்– எம். M. ஏன்; K. என், ஏனு, ஏனெ, எ; Te னு, னி.

எ - டு : வந்தெம், வந்தனெம். **ம.** ஓம்; **க.** எவு, ஏவு; எவெ; **தெ.** மு, மி.

**(இரண்டாம் நிலை)**

| **எழுவாய்** | **வேற்றுமையடி** |
|---|---|
| ஏன்– யான் | என் |
| ஏம் – யாம் | எம் |
| ஏங்கள்– யாங்கள் | எங்கள் |

**ம.** எங்ஙள். **தெ.** ஏனு, ஏ; **க.** யான், ஆன்.

**ம.** ஞாங்கள்; **தெ.** ஏழு, மேமு; **க.** ஆம், ஆவு.

யகரம் மொழிமுதலெழுத் தன்மையாலும், எகரத்திற்கும் யகரத்திற்குமுள்ள நெருங்கிய தொடர்பினாலும், 2ஆம் நிலை வடிவுகளும் முதல்நிலை வடிவுகள் ஒத்தே வேற்றுமையடி கொண்டன.

**(மூன்றாம் நிலை)**

| **எழுவாய்** | **வேற்றுமையடி** |
|---|---|
| யான்– நான் | நன் |
| யாம் – நாம் | நம் |
| யாங்கள்– நாங்கள் | நங்கள் |

**ம.** ஞான்; **க.** நானு, நா; **தெ.** நேனு, நே.

**ம.** நாம், நேரம், நம்மள்; **தெ.** மனமு; **க.** நாவு.

இவற்றுள், நன் என்னும் வேற்றுமையடி இற்றைத் தமிழில் வழக்கிறந்தது. அது தெலுங்கு, கன்னடம் முதலிய திரவிட மொழிகளில் இன்றும் வழங்குகின்றது. அது குடியேற்றப் போற்றிக் காப்பின் (Colonial Preservation) பாற்படும்.

இற்றை வழக்கில் இல்லாத பழஞ்சொற்களும் சொல் வடிவு களும், முழுகிப்போன குமரிக்கண்ட உலகவழக்கிலும் இறந்துபட்ட இலக்கிய வழக்கிலும் இருந்தன என்றறிதல் வேண்டும்.

நங்கள் என்பது இற்றை இலக்கிய வழக்கில் உள்ளது.

> ''நங்கள்கோன் வசுதேவன் பெற்றிலனே''
> **(திவ். பெருமாள். 7 : 3)**

> ''நங்கள் வரிவளை யாயங்காளோ'' **(திவ். திருவாய். 8 : 2 : 1)**

கூர்மதிவாய்ந்த குமரிக்கண்டப் பொதுமக்கள், யகர முதல் நகர முதலாகத் திரிந்த நிலையைப் பயன்படுத்தி, பன்மை வடிவில் அவ்விரு

முதலுக்கும் பின்வருமாறு வேறுபாடு காட்டித் தமிழைப் பண்படுத்தி யுள்ளனர்.

யாம், யாங்கள் = தனித் தன்மைப் பன்மை அல்லது படர்க்கை யுளப்பாட்டுத் தன்மைப் பன்மை.

நாம், நாங்கள் = முன்னிலை யுளப்பாட்டுத் தன்மைப் பன்மை.

இக்கால வழக்கில், 'யாங்கள்' என்னும் சொற்குப் பகரமாக (பதிலாக), 'நாங்கள்' என்பது தவறாக வழங்கிவருகின்றது. இதற்கு யாவடிச்சொல் வழக்கற்றுப் போனதே காரணம். தன்னையும் தன்னோடிருக்கும் பிறரையும்மட்டும் சேர்த்துக் குறிப்பது தனித் தன்மைப் பன்மையாம்.

நாம் என்னும் பெயரினின்று 'ஆம்' ஈறு தோன்றியுள்ளது. அது 'அம்' என்று குறுகவுஞ் செய்யும். இவ் விரண்டும் தன்மையொடு முன்னிலையை உளப்படுத்தும்.

எ - டு : நாம் வந்தாம்.

நாம் வந்தம், நாம் வந்தனம்.

'ஆம்' ஈறு 'ஓம்' என்றும் திரியும். இது செய்யுள் வழக்கில் படர்க்கையையும், உலக வழக்கில் முன்னிலை படர்க்கை யிரண்டையும், உளப்படுத்தும்.

எ - டு : யாம் (நானும் அவனும், நானும் அவரும், யாமும் அவனும், யாமும் அவரும்) வந்தோம் – செய்யுள் வழக்கும் உலக வழக்கும்.

நாம் (நானும் நீயும், நானும் நீரும்) வந்தோம் – உலக வழக்கு.

''அம்ஆம் என்பன முன்னிலை யாரையும்
எம்ஏம் ஓம்இவை படர்க்கை யாரையும்
உம்ஊர் கடதற இருபா லாரையும்
தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை'' **(நன். 332)**

''உம்ஊர் கடதற'' (கும், டும், தும், றும்).

ஏகாரவடியினின்று தோன்றாமையால் இங்குக் குறிக்கப் பட்டில.

## ஏ 2. (வினாச் சொல்லடி)

ஏ = எந்த. எ - டு : ஏவூர் = எந்த வூர். இது தெலுங்க வழக்கு. இப் பெயரெச்ச வழக்கு இற்றைத் தமிழில் அற்றது.

*'ஏ' ஈற்று வினா வெழுத்தாகவும் வரும்.*

*எ - டு : வந்தானே = வந்தானா.*

*ஏது = 1. எது. 2. எப்படிக் கிடைத்தது.*

*ஏ– ஏவன், ஏவள், ஏவர், ஏது, ஏவை.*

*ஏன் = என்ன காரணம்பற்றி.* K., M. en.

*ஏ– யா. யா = யாவன், யாவள், யாவர், யாவது, யாவை.*

*யா = யாவை. யாவர்– யார்– ஆர். யாவது – யாது.*

***ம.** யாவன், யாவள், யாவர் (யார், ஆர்), யாது, யாவை.*

***க.** யாவனு, யாவளு, யார், யாவது, யாவவு.*

***தெ.** எவடு, ஏதி, ஏவரு, ஏதி, ஏவி.*

*யா– யாங்கு, யாண்டு = எங்கு. யாங்கு– யாங்கண்.*

K. hege. *(ஹேகெ,* Te. eda *(ஏட).*

*யாங்கு– யாங்கனம்– யாங்ஙனம்– யாங்ஙன்.*

*யா– ஆ – ஓ. ஆவும் ஓவும் ஈற்று வினாவெழுத்துகள்.*

*எ - டு : அவனா, வந்தானா*

*அவனோ, வந்தானோ*

*''ஆஏ ஓஅம் மூன்றும் வினா அ''* ***(தொல். 32)***

*ஏ– எ = எந்த. எ - டு : எக்காலம், எப்படி.*

K., M. e.

*எ– எம்மை = 1. எவ்வுலகம். ''எம்மை யுலகத்தும்'' (நாலடி. 132). 2. எப்பிறப்பு. ''எம்மைக் கிதமாக'' (கம்பரா. சடாயுவுயிர். 99).*

*எவ்வது (= எவ்வாறு)*

*எ– எந்த.*

*எந்தா, எந்தோ, எதா, எதோ, எதோள், எதோளி = எங்கு.*

*எங்கு, எங்கே* (where), *எங்கைக்கு* (whither). *ம. எங்ங.*

*எங்கு– எங்கண். எங்கு– எங்கிட்டு.*

*எங்கு– எங்கனம்– எங்ஙனம்– எங்ஙன்.*

*எம்பர் = எங்கு.*

*''எம்பரு மின்மையின்''* ***(பெருங். நரவாண. 2 : 13)***

*எது– எத்து– எஃது.* Te. edi, M. endu.

*எ– எவ்– எவன், எவள், எவர், எது, எவை.*

*எவ் = எவை. எவன் = என்னது, என்ன.*

*எவன், யாது என்னும் இரு சொற்களுள், முன்னது முற்றும் அறியாப் பொருள்பற்றியும், பின்னது சிறிதறிந்த பொருள்பற்றியும், வினாவாய் வரும்.*

*எ - டு : காராமணி என்பது எவன்?*

*இப் பயறுகளுள் காராமணி என்பது யாது?*

*''யாதெவன் என்னும் ஆயிரு கிளவியும்*
*அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும்''*

*''அவற்றுள்,*
*யாதென வரூஉம் வினாவின் கிளவி*
*அறிந்த பொருள்வயின் ஐயந் தீர்தற்குத்*
*தெரிந்த கிளவி யாதலு முரித்தே''* ***(தொல். 514, 515)***

*எவன் = 1. எம்மாந்தன் (உயர்திணை). 2. என்னது (ஒருமை). 3. என்ன (பன்மை) அஃறிணை.*

*எங்கு– எங்குற்றை = எவ்விடம்.*

*எங்குற்றைக்கு = எவ்விடத்திற்கு.*

*எங்குற்றை– எங்குத்தை– எங்கித்தை.*

*''எங்கித்தைக் கன்மமெலாஞ் செய்தாலும்''* ***(சி.சி. 10 : 6)***

*எங்குற்றைக்கு– எங்குத்தைக்கு.*

*''எங்குத்தைக்குச் செலுமிது''* ***(பதினொ. நம்பி. திருநா. திருவே. 5)***

*எவ்– எவண் = எங்கு.*

*எவன்– என் = எது, என்னது, என்ன,* M. enna.

*என்– என்னை, என்னே, என்னோ.*

*என்– என்னவன், என்னவள், என்னவர், என்னது, என்னவை.*

*என்னவன் = 1. யாவன். 2. எத்தகையன்.*

*என்னவன்– என்னன்.*

*''என்னன் எவ்விடத்தன்''* ***(இரகு. யாக. 90)***

*''என்னவர் தங்கட் கேனும்''* ***(கந்தபு. கிரவுஞ். 4)***

*என்னத்தான் = எக்குலத்தான் (வடார்க்காட்டு வழக்கு)*

*என்னர் = யாவர்.*

*''அருந்தொடைச் சித்திரமதனை யென்னரே யளந்தறிபவர்''*
***(இரகு. திக்கு. 196)***

*என்னரும் = எதும், சிறிதும், எவ்வளவும்.*

*''என்னருங் கருதான்''* ***(பெருங். நரவாண. 2 : 41)***

*என்னோரும் = 1. எத்தன்மையோரும். 2. எல்லாரும். ''என்னோரு மறிய எடுத்துரைத்தன்று'' (பு.வெ. 9 : 6, கொளு).*

*என்னது– எந்து = 1. என்ன. ''அதெந்துவே'' (திருவாச. 29).* Te., M. endu. *2. எவ்வாறு. ''செயலாம் வழிமற் றெந்தோ'' (தணிகைப்பு. பிரம. 4).*

M. endu, K. entu.

*இனி, எது– எத்து– எந்து என்றுமாம்.*

*என்னது– எற்று (என் + து– ) எற்றுக்கு.*

*என்ன. ம.* enna

*என்ன– என்னவோ– என்னமோ.*

*என்று = எப்போது.*

M. enru, K. endu.

*என்றுழி = என்றைக்கும்.*

*என்– எனை = என்ன, எந்த, எத்தகைய.*

*எனைத்து = எவ்வளவு.*

*எனையவன்– எனையன், எனைவன் = யாவன்.*

*''எனைவ ராயினு''* ***(பெருங். வத்தவ. 3 : 22)***

*தன்மைப் பெயரடியும் வினாச்சொல்லடியுமான ஏயிரண்டும், உயர்வும் எழுச்சியும் குறித்த ஏ யென்னும் உரிச்சொல்லினின்று தோன்றியிருக்கலாம்.*

*''ஏபெற் றாகும்''* ***(தொல். 788)***

---

*குறிப்பு : தன்மைப் பெயரின் ஏகாரவடி அண்மைச் சுட்டான ஈகாரத்தின் திரிபாகவும், வினாச்சொல்லின் ஏகாரவடி எழுச்சி குறித்த ஏகாரமாகவும் இருக்கலாம்.*

## 14

## ‘ஒல்’ என்னும் வேர்ச்சொல்
## ஒல் (பொருந்தற் கருத்து வேர்)

*உல் – ஒல்.*

*ஒல்லுதல் = பொருந்துதல், ஒத்தல், உடன்படுதல், இயலுதல்.*

*ம. ஒல்லு.*

*ஒல்லுநர் = நண்பர். ஒல்லார் = பகைவர்.*

*ஒல் – ஓர் = ஒரு. ஓர் – ஓராங்கு.*

*ஓர் – ஓரான். ஓரானொரு = ஏதோ ஒரு,* a certain.

*ஓர் – ஓரி. ஓரித்தல் = ஒற்றுமையாயிருத்தல்.*

*ஓர் – ஒரு.* ***க.*** *ஓர்,* ***ம.*** *ஒரு.*

*ஒரு – ஒருக்கு. ஒருக்குதல் = ஒன்றுசேர்த்தல்.*

*ஒருக்கு – ஒருக்க = ஒருமுறை, ஒன்றுபோல், என்றும்.*

*ஒருக்கு – ஒருக்கம் = ஒரு தன்மை.*

*ஒரு – ஒருங்கு.*

*ஒரு + அந்தம் = ஒருவந்தம் (ஒருதலை).*

*ஒரு + கணி = ஒருக்கணி – ஒருக்களி.*

*ஒரு + சரி = ஒருச்சரி – ஒஞ்சரி.*

*ஒரு – ஒருத்தன்.* Kur. *ஒர்த்.*

*ஒரு – ஒருத்தி.* ***தெ.*** *ஒர்த்தி.*

*ஒரு – ஒருத்து = மனவொருமைப்பாடு.*

*ஒருதலை = உறுதி, தேற்றம்.*

*ஒரு + படு = ஒருப்படு*

*ஒரு– ஒருமை.* **ம.** *ஒரும,* **தெ.** *ஒரிம.*

*ஒருமை– ஒருமி.* **ம.** *ஒருமி.*

*ஒரு– ஒரே. ஒரு– ஒதோ. ஒரோவொரு = ஏதோவொரு.*

*ஓர்– ஓர். ஓர்தல் = உற்றுநோக்குதல், ஆராய்தல்.*

*ஓர்– ஓரட்டும் = எல்லாம்.*

*ஓர்– ஓரான். ஓரானொரு = ஏதோவொரு.*

*ஓர்– ஓராம் = முதலாம்.*

*ஓர்– ஓர்மை = ஒற்றுமை, துணிவு.*

*ஓர்மை– ஓர்மி. ஓர்மித்தல் = மனந்திடப்படுதல்.*

*ஓர்மி– ஓர்மம் = மனத்திடம், திடாரிக்கம்.*

*ஓர்– ஓராங்கு = ஒருசேர.*

*ஓர்– ஓரம் = பொருந்திய பக்கம், ஒரு பக்கம், விளிம்புப் பக்கம். ம. ஓரம்,* **தெ.** *ஓர,* **க.** *ஓர.*

*ஓர்– ஓசை = விண்மீன் கூட்டம்.*

*ஓர்படியாள்– ஓர்ப்படியாள் (இராசி)*

*ஒல்– ஒன். ஒன்னுதல் = பொருந்துதல்.*

*ஒன்னார் = பகைவர்.*

*ஒன்– ஒன்று. ஒன்றுதல் = பொருந்துதல்.*

*ஒன்றார் = பகைவர்.*

**க.** *ஒந்து,* **தெ.** *ஒனரு.*

*ஒன்று = 1. (முதலெண்).* **ம.** *ஒன்னு,* **தெ.** *ஒண்டு,* **க.** *ஒந்து,* **து.** *ஒஞ்சி.* L. unus, E. one.

*ஒன்றுக்கு (இடக்கரடக்கல்) = சிறுநீர் கழிக்க.*

*ஒன்று– ஒன்றி. ஒன்றித்தல் = பொருந்துதல், ஒற்றுமைப் படுதல்.*

*ஒன்றி = தனிமை.* **க.** *ஒண்ட்டி,* **தெ.** *ஒண்டு.*

*ஒன்று + மை = ஒற்றுமை. ஒன்று– ஒற்றை.*

*ஒன்று– ஒற்று. ஒற்றதல் = பொருந்தச் சேர்த்தல் அல்லது தாக்குதல், அல்லது பார்த்தல்.*

**தெ.** *ஒத்து,* **க.** *ஒத்து.*

*ஒற்று– ஒற்றன்*

*ஒற்று – ஒற்றடம். ஒற்று – ஒத்து – ஒத்தடம் – ஒத்தணம். தெ. ஒத்தடமு, க.ஒத்தட.*

*ஒற்று– ஒத்து = ஊமைக் குழல்.*

*ஒற்று – ஒற்றி – ஒற்றித்தல் = ஒற்றையாயிருத்தல், ஒற்றுமைப் படுதல்.*

*ஒற்றிக்கிரட்டி = ஒன்றிற்கிரண்டு. ஒற்றி = பொருந்த வைக்கும் அடைவு.*

*ஒல் = ஒள்– அள்– அள்ளுதல் = செறிதல். ம. அள்ளு.*

*அள்– அள்ளல் = நெருக்கம்.*

*அள்– அள்ளை = பக்கம்*

*அள்– அள– அளவு. அளவுதல் = கலத்தல். அளவு– அளாவு.*

*அளத்தல் = 1. கலத்தல். 2. அளவளாவுதல் (கல்லா. 18 : 36). 3. அளவிடுதல்.*

*ம. அள, க.அள.*

*அள– அளவி.*

*அள– அளவு. ம. அளவு, க. அளவு, து.அல.*

*அள– அளவை.*

*அளவு– அளபு– அளபெடை.*

*அள்– (அய்)– அயல் = அருகு, பக்கம், புறம்பு. ம.அயல்.*

*அயல்– அசல் = புறம்பு.*

*அள்– அளை. அளைதல் = கலத்தல், கூடியிருத்தல்,*

''ஆர்வமோ டளைஇ'' **(தொல். பொருள் 146)**

*அள்– அளி. அளிதல் = கலத்தல்.*

'சிறியார்களோ டளிந்தபோது'' **(கம்பரா. ஊர்தே. 154)**

*அள்– அண்– அண்ணு. அண்ணுதல் = கிட்டுதல்.*

*அண்– அண்மை, அண்ணிமை, அணிமை,அணுமை.*

*அண்– அண்மு. அண்முதல்– கிட்டுதல். அண்மு– அண்பு.*

*அண்– அணன் = பொருந்தியவன்.*

''சீரணனை'' **(திவ். இயற். நான். 67)**

அண்– அணவு. அணவுதல் = அணுகுதல், தழுவுதல், தட்டுதல்.

அணவு – அணாவு. அணாவுதல் = கிட்டுதல்.

''அருக்கன் மண்டலத் தணாவும்'' **(தேவா. 693 : 1)**

அண்– அணுகு – அணுக்கம் = நெருக்கம்.

அண்– அணை. அணைதல் = சேர்தல், அணைத்தல் = தழுவுதல்.

அணை = அணைக்கட்டு.

**ம.** அண. **க.** அணே.

அண்– அண்டு – அண்டுதல் = கிட்டுதல்.

தெ. அண்ட்டு, து. அண்ட்டு, க. அட்டு.

அண்டு– அண்டை = பக்கம். தெ. அண்ட, க. அண்டெ.

அண்– அடு. அடுத்தல் = நெருங்குதல். ம.அடு.

அடு – அடுக்கு = அடுக்கம் = வரிசை.

அடுக்கு – அடுக்கல் = பக்கமலை.

அடு – அடர்– அடர்த்தி.

அடு – அடர்– அடவி = மரம் செறிந்த காடு. அடவி – அட்டவி (வ.)

அடு– அடுத்த (பெ.எ.), அடுத்து (வி.எ.).

அடு– அடை – அடைவு– அடவு– அடகு. அடை – அடைமானம்.

ஒள்– ஒண்ணு. ஒண்ணுதல் = பொருந்துதல்.

ஒண்ணார் = பொருந்தார், பகைவர்.

ஒண்ணு = ஒன்று.

''அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவன்
வாயில் மண்ணு' **(பழமொழி)**

ஒண்– ஒண்டு. ஒண்டுதல் = சார்தல்.

ஒண்டுக்குடி = ஒட்டுக்குடி.

ஒண்டு– ஒண்டி = தனிமை.

ஒண்டியாள், ஒண்டிக்காரன், ஒண்டிக்கடை, ஒண்டிசண்டி முதலிய வழக்குகளை நோக்குக.

*ஒண்டு – ஒட்டு, ஒட்டுதல் = பொருந்துதல்.*

***ம.*** *ஒட்டு,* ***க.*** *ஒட்டு,* ***து.*** *ஒட்டு.*

*ஒட்டார் = பகைவர்.*

*ஒட்ட = நெருங்க, ஒக்க, அடியோடு.*

*ஒட்டுக்குடி = ஒண்டுக்குடி.*

*ஒட்டுக்கும் = முழுதும்.*

*ஒட்டல் = 1. சேர்தல். 2. உடன்பாடு (திவா.) 3. உள்ளொ டுங்குதல். ''ஒட்டற் கவுள்'' (கோயிற்பு. நடரா. 30).*

*ஒட்டப்போடுதல் = வயிறு ஒட்டுமாறு பட்டினியிருத்தல் அல்லது இருக்கச் செய்தல்.*

*ஒட்டு – ஒட்டை = ஒத்த அகவை அல்லது உயரம்.*

*ஒட்டை – ஓட்டை = ஒத்த அகவை அல்லது உயரம்.*

*இவன் அவனொட்டை, இவன் அவனோட்டை என்னும் வழக்குகளை நோக்குக.*

*ஒட்டு– ஒட்டம் = கவறாடலில் எதிரியுடன் ஒட்டிக் கூறும் பந்தயம்.*

*ஒட்டு – ஒட்டாரம் = முற்கூறியதையொட்டியே இறுதிவரை மாறாது நிற்றல் (பிடிவாதம்).*

*ஒட்டு = ஒன்றையொட்டியிடும் சூள் (ஆணை).*

*''ஒட்டு வைத்தேனும் மேல்வாரீர்''*

***(அருட்பா, 6, வருக்கமாலை, 89)***

*ஒட்டு என்பது பிறர் ஒன்றைச் செய்யவிடுவதைக் குறிக்கும் துணைவினை. இது பெரும்பாலும் எதிர்மறையிலேயே வரும்.*

*எ - டு : தூங்கவொட்டார் = தூங்கவிடார்.*

*இதில் ஒட்டுதல் என்பது உளம்பொருந்துதலை அல்லது இசைதலை உணர்த்தும்.*

*ஒட்டு – அட்டு. அட்டுதல் = ஒட்டுதல்.*

*ஒ – அ ஒ.நோ. : கொம்பு – கம்பு, மொண்டை – மண்டை, தொண்டையார்பேட்டை – தண்டையார்பேட்டை.*

அட்டு என்னும் திரிபும் அதன் மூலமான ஒட்டு என்பது போன்றே (அதே பொருளில்) துணைவினையாம். ஆயின், இது முன்னிலை யிடத்திற்குரிய உடன்பாட்டு ஏவல் வினையாகவே வரும். ஒட்டு என்பதோ மூவிடத்தும் பெரும்பான்மை எதிர்மறை யிலும் சிறுபான்மை உடன்பாட்டிலும் வரும்.

எ - டு : அவன் வரட்டு = அவனை வரவிடு (ஒருமை)

அவன் வரட்டும் = அவனை வரவிடும். (பன்மை)

அவன் வரவொட்டேன்
அவன் வரவொட்டோம் தன்மை

அவன் வரவொட்டாய்
அவன் வரவொட்டீர் முன்னிலை

அவன் வரவொட்டான்
அவன் வரவொட்டார் படர்க்கை

அவன் வரவொட்டுவேன், அவன் வரவொட்டுவோம் என்பன உடன்பாடு.

ஒல்– ஒ. ஒ. நோ : நல்– ந. பொல்– பொ. ந = நல்ல.

எ - டு : நக்கீரன். பொத்தல் = துளைத்தல்.

ஒத்தல் = போலுதல், பொருந்துதல். ம.ஒ.

ஒ– ஒக்க = ஒருசேல, போல, ம. ஒக்க.

ஒ– ஒக்கல் = இனம், இனத்தார்.

ஒக்கல்– ஒக்கலி. ஒக்கலித்தால் = இனத்தாருடன் உறவாடுதல்.

ஒக்கல = பொருந்திய பக்கம், மருங்குல், இடுப்பு.

ஒக்கல்– ஒக்கலை = இடுப்பு.

ஒக்க (தெ.) = ஒரு.

ஒக்க + இடு = ஒக்கிடு.

ஒ– ஒத்து (வி.எ.)– ஒத்துக்கொள், ஒத்துக்கொடு.

ஒ– ஒத்து– ஒத்தாசை.

ஒ– ஒத்து– ஒத்திகை = ஒத்துப்பார்க்கும் நாடகப் பயிற்சி, ஒத்திகை – ஒத்திக்கை.

ஒ– ஒப்பு– ஒப்பனை = உவமை, சமம், அழகு.

ஒப்பு– ஒப்பம். ம. ஒப்பம், க.ஒப்ப.

*ஒப்பு— ஒப்பந்தம் தெ. ஒப்பந்தமு, க. ஒப்பந்த, து.ஒப்பந்த.*

*ஒப்பு— ஒப்பாரி = ஒப்பு. க.ஒப்பாரி.*

*ஒப்பு— ஒப்பிதம் = பொருத்தம். தெ. ஒப்பிதமு.*

*ஒப்பு— ஒப்படி = அறுவடை. தெ. ஒப்பிடி* (obbidi).

*ஒப்பு— ஒப்பன் = மெருகிடப்பட்டது.*

*''ஒப்பன் திருவடிக்காறை''* (S.I.I. Vol. II, 7)

*ஒப்பு— ஒப்புரவு = உயர்ந்தோரோ டொத்தொழுகல்.*

*ஒப்பு— ஒப்புவி— ஒப்பி.*

*ஒப்பு— ஒப்புவி— ஒப்பி.*

*ஒப்பு— ஒப்புக்கொள், ஒப்புக்கொடு.*

*ஒ— ஒம்பு. ஒம்புதல் = இசைதல், உளம்பொருந்துதல்.*

*ஒ— ஒவ்வு. ஒவ்வுதல் = ஒத்தல், பொருந்துதல்.*

*ஒ— ஓ— ஓவு = சித்திரம்.*

*''ஓவுறழ் நெடுஞ்சுவர்''* ***(பதிற். 68 : 17)***

*ஓவு— ஓவி = சித்திரம்.*

*''ஓவி நல்லார்''* ***(திவ். பெரியதி. 2 : 8 : 7)***

*ஓவு— ஓவம் = சித்திரம்.*

*''ஓவத் தன்ன வுருகெழு நெடுநகர்''* ***(பதிற். 88 : 28)***

*ஓவு— ஓவியம் = சித்திரம்.*

*ஒட்டு— ஒடு— ஓடு. ஓடுதல் = ஒத்தல், பொருந்துதல்.*

*ஓடு— ஓடாள்வி— ஓடாவி = சித்திரக்காரன்.*

*ஓடு— ஓட்டம் = ஒப்பு.*

*ஓட்டம்— ஆட்டம் = ஒப்பு.*

*எ - டு : குரங்காட்டம் ஓடுகிறான்.*

# 15

# ‘ஓ’ என்னும் ஒலிக்குறிப்பு வேர்ச்சொல்

***ஊ – ஓ.***

*உரத்த ஓசையைக் குறிக்கும் எழுத்தொலி அல்லது ஒலிக்குறிப்பு ‘ஓ’ என்பதாகும்.*

*‘‘ஓவென வையகத் தோசைபோ யுயர்ந்ததே’’* ***(சீவக. 1843)***

*ஓ– கோ, ஓ– சோ.*

*கோவென்றலறினான், சோவென்று மழை பெய்தது என்பன உலக வழக்கு.*

*சேய்மை விளிக்குச் சிறந்த ஒலி ஓகாரமே.*

*எ - டு ஃ அண்ணோ!, ஓ அண்ணா!*

*‘ஓல்’ என்பத ஈற்று விளியுருபாகும்.*

*எ - டு ஃ சாத்தா வோல்!*

*இலக்கணஞ் சாரா உலக வழக்கில், ஓகாரஅடிப் பிறந்த ஓர் அசையும் அதன் திரிபும் தனி விளியொலிகளாகும். அவையாவன ஃ*

*ஓய்– வேய்– வே.*

*கதிர் முற்றிய நிலங்களிற் படிந்துண்ணும் பறவைகளை ஓவென்று கத்தி ஓட்டுவதால், பறவையோட்டுதல் ஓப்புதல் எனப்பட்டது.*

*‘‘கழனிப் படுபுள் ஓப்புநர்’’* ***(புறம். 29 ஃ 13)***

*‘ஓ’ என்பது ஓர் ஒலிக்குறிப்பாதலால், ஓல் என்பது ஒலிப் பெயராயிற்று.*

*ஓலுறுதல்– ஒலிபெறுதல்.*

*‘‘ஓலுறு பெருக்கின்’’* ***(இரகு, நகர. 42)***

*ஒல் – ஒலம் = 1. ஓசை (பிங்.). 2. என்றும் ஓசையிடும் கடல். 3. அடைக்கலம் வேண்டும் கூக்குரற்சொல். ''ஞானநா யகனே ஓலம்'' (கந்தபு. சூர. வதை. 460).*

Te. ola, M. olam.

*ஓலோலம்– ஆலோலம் = ஓவெனக் கத்திப் பறவைகளைத் துரத்தும் குறிப்புச் சொல்.*

*''பூவைகாள் செங்கட் புள்ளினங்காள் ஆலோலம்''*
**(கந்தபு. வள்ளி, 51)**

*லேலோ எனப் பாடிக் குழவியைத் தூங்கவைத்தல், இலக் கணஞ்சாரா உலக வழக்கில் லோலாட்டு எனப்படும்.*

*லோலாட்டு– ஓலாட்டு = தாலாட்டு.*

*ஓல் = தாலாட்டு.*

*''ஓலுட னாட்டப் பாலுடனுண்டு''* **(இறை. 2, உரை)**

*ஒ. நோ : ரோரோ– ரோராட்டு– ராராட்டு– ஆராட்டு = தாலாட்டு.*

*லாலாட்டு– தாலாட்டு. லால்– தால்.*

*ஒ– சோ. சோ என்பது விலங்கு பறவைகளைத் துரத்தும் குறிப்பசை.*

*ஒப்பு– சோப்பு. சோப்புதல் = ஈயோட்டுதல்.*

*ஈச்சோப்பி = ஈயோட்டும் கருவி.*

*அரசன் கொலுவீற்றிருப்பைக் குறிக்கும் ஓலக்கம் என்னும் சொல், ஒல்லகம் (=கூடுமிடம்) என்பதன் திரிபன்றாயின் ஓலகம் (=ஆரவாரமான இடம்) என்பதன் திரிபாகவே யிருத்தல் வேண்டும்.*

*ஒல்– ஓலகம்– ஓலக்கம்.*

Te. olagamu. K., Tu. olaga, Molakkam.

*ஒட்டோலக்கம் = 1. பேரவை. 2. ஆரவாரம்.*

Te. oddolagamu, K. oddolaga.

*ஒட்டோலக்கம்– அட்டோலக்கம் = 1. ஆரவாரம்.*

*2. உள்ளக்கிளர்ச்சி.*

*ஒல்– ஓது. ஒ. நோ : மெல்– மெது.*

K., Tu., M. odu.

ஓதுதல் = 1. படித்தல். ''ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும்'' (குறள். 834). ஒ. நோ : படுதல் = ஒலித்தல். படு – படி. 2. சொல்லுதல். ''ஓதலிய சுகர்போல'' (தாயு. ஆகார. 32). 3. மன்றாடுதல். ''இயல்போ டஞ்செழுத் தோதி'' (திருவா. 41 : 7).

ஓது – ஓதை = 1. பேரோசை (திவா.). 2. எழுத்தொலி (பிங்.)

ஓதை – ஓசை. M. osa.

ஓசை– ஓசனி. ஓசனித்தல் = பறவை சிறகடித்தல்.

''ஓசனிக்கின்ற வன்னம்'' **(சீவக. 2652)**

ஒல் – ஒல். ஒல் என்பது ஓர் ஒலிக்குறிப்பு.

'ஒல்லென வொலித்தல்' என்பது இலக்கிய வழக்கு.

''ஆய ரொல்லென வொலிப்ப'' **(சீவக. 438)**

ஒல் – ஒலி. ஒலித்தல் = 1. ஓசையிடுதல். ''ஒலித்தக்கா லென்னாம் உவரி'' (குறள். 763). 2. வெளுத்தல். ''ஊரொலிக்கும் பெருவண்ணார்'' (பெரிய பு. திருக்குறிப்பு. 113).

வண்ணார் ஏதேனும் ஓர் ஒலியிட்டு வெளுப்பது வழக்க மாதலால், ஒலித்தற் சொல் வெளுத்தற் பொருள் கொண்டது.

3. துப்புரவாக்குதல்.

''உதிர்துக ளுக்க நின்னாடை யொலிப்ப'' **(கலித். 81 : 31)**

ஒலி = 1. இசை (திவா.). 2. காற்று (திவா.). 3. சொல்.

''நின்னுருவமு மொலியும் ஆகாயத்துள'' **(பரிபா. 431)**

ஒலி – ஒலியல் = 1. ஆடை (பிங்.). 2. ஆறு. ''அவ்வொலியிற் கொப்பாகுவதோ வுவராழியதே'' (கந்தபு. காளித்தி. 6).

ஒலி = ஒலியன் = 1. ஆடை (கோயிலொ. 88). 2. தனியுயிரொலி – phoneme. (இக்காலைப் பொருள்)

ஒலி = ஒலிசை = மணமகனுக்கு மணமகள் சுற்றத்தார் திருமணத் தின் நான்காம் நாள் கொடுக்கும் வரிசை.

ஒல்லென = ஒல்லென்று சொல்லும் அளவில் விரைவாக, சுருக்காக, சட்டென.

''வல்வினை......... ஒல்லென வொப்ப'' **(ஞானா. 1 : 33)**

ஒல் – ஒல்லே = சுருக்காக, விரைவில்.

*''நங்கை யென்னோ டுரையாய் நனியொல்லே'' (சீவக. 898)*

*ஒல் – ஒல்லை = 1. சுருக்காய் (திவா.). 2. உடனே. ''ஒல்லைக் கெடும்'' (குறள். 563).*

*ஒல்– வல் = விரைவு (சூடா.)*

*'வல்லெனல்' ஒரு விரைவுக் குறிப்பு.*

*ஒல்லே– வல்லே = விரைவாக.*

*''ஒன்றின ஒன்றின வல்லே செயிற்செய்க''* ***(நாலடி. 4)***

*ஒல்லை– வல்லை = விரைவாக.*

*''வளவரை வல்லைக் கெடும்''* ***(குறள். 480)***

*ஒ– ஒ– ஒய்.*

*ஒய்யென = விரைவாக.*

*''ஒய்யென வந்தே யெடுத்தனன்''* ***(கலித். 37)***

*ஒல்– கொல் = ஓர் ஒலிக்குறிப்பு.*

*''கொல்லென்று சிரித்தார்கள்'' என்பது உலக வழக்கு.*

*கொல்– கல். கல்லெனல் = பேரோசைக் குறிப்பு.*

*''கல்லென் பேரூர்''* ***(சிலப். வேட்டுவவரி. 12)***

*''கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலற''* ***(நாலடி. 25)***

*கல்– கல.*

*'கலகலவென்று சிரித்தல்' என்பது உலக வழக்கு.*

*கலகலவெனல்– கலகலெனல்.*

*கல்– கலி. கலித்தல் = ஒலித்தல்.*

*''கடவுட் பராவி நமர்கலிப்ப''* ***(திருக்கோ. 279)***

*கலி = 1. ஒலி. (தொல். சொல். 349). 2. கடல் (பிங்.).*

*ஆர்கலி = 1. ஓசை நிறைந்த கடல். (திருவாச. 18 : 2). 2. வெள்ளம் (நெடுநல். 3)*

*'கலின்', 'கலீர்' முதலியன ஒலிக்குறிப்புச் சொற்கள்.*

*ஒல்– சொல் = 1. ஒலி. 2. ஒலிவடிவான பேச்சு. 3. மொழி யுறுப்பான கிளவி.*

*சொல் ஒலிவடிவா யிருத்தலையும், ஒலி என்னும் சொற்குச் சொல் என்னும் பொருளும், ஓதை யென்னும் சொற்கு எழுத்தோசை யென்னும் பொருளும் உண்மையையும் நோக்குக.*

*ஒலி, ஓசை என்னும் இரு சொற்களும் ஒகார அடிப்படையிற் பிறந்திருப்பினும் ஒலி என்பது எழுத்தொலி போன்ற மெல்லோசை யையும் ஓசை என்பது இடியோசையும் கடலிரைச்சலும் போன்ற வல்லோசையையும் குறிக்கும் வழக்காற்றை அறிதல் வேண்டும்.*

*கொல் என்னும் ஒலிக்குறிப்பு கல், கல, கலி எனத் திரிதல் போன்றே, சொல்லென்னும் ஒலியும் சல், சல, சள எனப் பலவாறாகத் திரியும்.*

*சொல்லுதல் என்னும் வினை பேசுதல் அல்லது உரைத்தல் என்னும் சிறப்புப் பொருளில் வழங்கிய பின், அதன் அடிப்படையான ஒலிப்புப் பொருள் மறைந்துவிட்டது; ஆயினும், ‘பல்லி சொல்லுதல்’, ‘பல்லி சொல்லிற்குப் பயன்’ என்னும் வழக் குண்மையை நோக்கித் தெளிக.*

மொழிஞா யிறெனத் தமிழகம் போற்றிடும்
விழுமிய தேவ நேயப்பா வாணர்
செந்தமிழ் மறவர்! சிந்தனை ஊற்று!
நந்தமிழ் தன்னில் நஞ்சினைக் கலக்கும்
நரிமாக் கலங்கிடச் செய்திடும் அரிமா!
அரிவரி கற்கும் சின்னஞ் சிறாஅரும்
நெருங்கிப் பழகிட வாய்ப்புத் தந்தவர்!
முறுக்கிய மீசை முகத்தில் திகழ்ந்திட
நறுக்காய்ப் பேசும் நல்லவர்! பார்ப்பனப்
பொல்லார் செய்யும் சூழ்ச்சி பொறாதவர்!
நல்லார் தமக்கு நனிநல் லவரவர்
தனித்தமிழ் வளர்க்கும் தந்தை! இளைஞர்க்கு
இனித்த தமிழில் கட்டுரை வரைந்தவர்!
தொன்மை மொழியாம் தமிழினைக் காக்க
இன்னல் ஏற்றவர்! இன்றமிழ்ச் சொல்லின்
வேரினைக் கண்டு விரிநூல் படைத்தார்
நூற்றாண்டு காணும் இந்நாள்
போற்றுவம் அவரின் புகழ்நிறுத் துவமே!

– புலவர் அ.நக்கீரன்


'பெரியார் குடில்'
பி.11. குல்மொகர் குடியிருப்பு,
35, செவாலியே சிவாசி கணேசன் சாலை,
தியாகராயர்நகர், சென்னை – 17.